# தமிழ்மணி

காலாண்டிதழ் | ஆகஸ்ட் 2014

Thamizhmani | Quarterly magazine | August 2014




OUR PEOPLE OUR HOME NDP2014

## தேசிய தின வாழ்த்துகள்!



90 வயது இளைஞர் எஸ்.ஆர். நாதன்



குறளினும் குறுகிய நூல் முனைவர் சுப. திண்ணப்பன்



வானொலிக்கு ஓர் புதிய அடையாளம்: சித்ரா ராஜாராம்



அம்மா அம்மாதான் இளையராஜா



சினிமாவில் இலக்கியம்! திரைதாசன்


ABIRAAME
Singapore's Popular Jeweller
Worn by
King
Queen
and yourself
REWIND COLLECTIONS
Join with us
AJS
ABIRAAME
Beautiful Temple Jewellery for the most beautiful women
www.ajs.com.sg / enquiry@ajs.com.sg
69, Serangoon Road, Singapore - 217974 Tel: 6341 5341/ 6296 0759
85, Serangoon Road, Singapore - 217990 Tel: 6295 5130/ 6295 0283
103, Serangoon Road, Singapore - 218008 Tel: 6293 5130/ 6293 6130

# தமிழ்மணி

## நல்வாழ்த்துகள்

தேசிய தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடும் சிங்கப்பூர் மக்களுக்கு நம் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். ஒரு நாடு எப்படி விளங்க வேண்டுமோ அப்படி விளங்குகிறது சிங்கப்பூர். ஒரு நாட்டின் மக்கள் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ்பவர்கள் சிங்கப்பூரர்கள். இன்றைய வளமான வாழ்விற்கு ரத்தம் சிந்திய முந்தைய தலைமுறையினர் நமக்கும் உண்டு. மூத்த குடிமக்கள் என பெருமையுடன் அழைக்கப்படும் அவர்களின் நல்வாழ்வில் சிங்கப்பூர் அரசு பெரும் அக்கறை காட்டுவது பாராட்டுக்குரியது. ஆசிய அரங்கில் அண்மைய காலத்தில் சுதந்திரம் பெற்ற நாடுகளில், பல நிலைகளிலும் முன்னேற்றங்களைக் கண்டு திகழும் சிங்கப்பூர், அமெரிக்க ஜப்பானை அடுத்த நாணய மதிப்பைக் கட்டிக் காத்து வருகிறது.

2014, சிங்கப்பூரைப் பொறுத்தவரை, சற்று சோதனை ஆண்டாகவே அமைந்தது. மனித ஆற்றல், போக்குவரத்து, மக்கள் தொகை உள்ளிட்ட பல நெஞ்சுக்கு நெருக்கமான பிரச்சினைகள் தலை தூக்கியபோது, முகநூல், மின்னஞ்சல், பத்திரிகைகள் வாயிலாக கருத்துக்கள் ஒன்று திரண்டன. சிங்கப்பூரர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், நியாயமான பணிகளுக்கு அவர்களை அமர்த்துதல் போன்ற நடைமுறைகளை மக்கள் பகிர்ந்து கொண்டனர். இவற்றில் மக்களின் போக்குவரத்துப் பிரச்சனையும், மக்கள் தொகை பிரச்சனையும் மற்றவற்றை முந்திக் கொண்டன. சுகாதாரச் செலவினங்களின் வேதனைகளை மக்கள் விவாதிக்க முற்பட்டபோதும் சரி, வீடமைப்பு வசதிகள் விலை ஏற்றம் பற்றி குரல் எழுப்பியபோதும் சரி, அவை அரசினால் முறையாகக் கவனிக்கப்பட்டன. அதன் விளைவாகவே, சுகாதார பராமரிப்பு உதவித் திட்டங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு பயணக் கட்டண சலுகை, வீடுகளை விரைவாக வாங்குவது உள்ளிட்ட மற்ற வீடமைப்பு சலுகைகள் ஆகியவை அண்மைய காலத்தில் அறிவிக்கப்பட்டன. அடுத்து வரும் ஆண்டுகளில் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு மேலும் பல நன்மைகளைப் பெற இருக்கிறோம். பாதுகாப்பும், ஆரோக்கியமான சுற்றுச் சூழலும், சாதகமான பொருளாதார பலமும் கொண்ட ஒரு நாடாக சிங்கப்பூர் விளங்க நமக்குத் தேவை ஒற்றுமை உணர்வும், அயராத உழைப்பும் தான். உலகத்தோடு ஒட்டி வாழத் தெரிந்த நாம், சிங்கப்பூரிலும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

- ஆசிரியர்


ஆலோசகர்
**மு. ஹரிகிருஷ்ணன்**
தலைவர், தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்

தலைமை ஆசிரியர்
**ஏ. பி. ராமன்**

துணை ஆசிரியர்
**திருவாட்டி. புஷ்பலதா நாயுடு**
துணைத் தலைவர், தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்

இணை ஆசிரியர்கள்
**ச. இராம்குமார்**
**வீர. விஜயபாரதி**

வடிவமைப்பு
**கோ. தனசேகர்**
ரைட்மைண்ட் குரூப்.காம்

புகைப்பட உதவி
**தியாக. ரமேஷ்**
மற்றும் தமிழ் ஆர்வலர்கள்

Advisor
**M. Harikrishnan**
President, TLCS

Chief Editor
**A.P. Raman**

Associate Editor
**Madam. Pushpalatha Naidu**
1st Vice President, TLCS

Assistant editors
**S. Ramkumar**
**Veera. Vijayabharathy**

Design
**G. Dhanasekar**
*RiGHTMiNDgroup.com*

Photographs
**Thiyaga. Ramesh**
and Others

Print / அச்சு
**STAMFORD PRESS PTE LTD,**
Singapore, 339344.

வெளியீடு: **தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்**
**TAMIL LANGUAGE AND CULTURAL SOCIETY**
1 Beatty Road #04-401B SINDA
Building Singapore 209943
Tel: 6295 3258 Fax: 6295 3405
UEN NO S79SS0032L
Website: http://www.tamilmozhi.org
Email: tlcs@Ibmc.com.sg


*உங்கள் கரங்களில் தவழும் தமிழ்மணி, இனி ஒவ்வொரு மூன்று மாத இடைவெளியில் தொடர்ந்து வெளி வர இருப்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் வெளிவரும் இக் காலாண்டு இதழில், தொடர்ந்து உள்ளூர் எழுத்தாளர்களும், அறிஞர்களும் பங்கு பெற இருக்கின்றனர். நம் கலை, கலாச்சார, எழுத்து அமைப்புகளின் பணிகள், நிகழ்ச்சிகள், விமர்சனங்கள் ஆகியவை இனி வரும் இதழ்களில் நிறைய இடம் பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

அறிஞர் **சுப திண்ணப்பன்** பார்வையில் ஆத்திச்சூடி

# குறளினும் குறுகிய நூல்



திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் தன் உள்ளடக்கத்தால் முப்பால் என்னும் பெயர் பெற்றது. அதாவது திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பால்களும் (பிரிவுகளும்) முறையே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளையும் பற்றி விளக்குகின்றன. குறள் என்னும் பெயர் அதற்கு அது பெற்ற உருவத்தால் கிடைத்த பெயர். அதாவது, குறுகிய வெண்பாக்களால் அமைந்த காரணத்தால் அது குறள் என அழைக்கபட்டது. ஒவ்வொரு குறளும் இரண்டடிகளையும் ஏழு சீர்களையும் கொண்டு விளங்குகிறது. திருக்குறள் தோன்றிய காலத்தில் இந்தக் குறள் வெண்பா மிகச் சிறிய வடிவம் கொண்ட செய்யுளாகும். இத்தகைய யாப்பு வடிவத்தை முதன் முதலில் உருவாக்கி நூல் இயற்றியவர் திருவள்ளுவரே ஆவார். எனவேதான் திருவள்ளுவருக்குப் புகழ் மாலை சூட்டிய புலவர்களால் பாடப்பட்ட திருவள்ளுவ மாலையில் 'கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என இடைக்காடரும், 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என ஔவையாரும் பாராட்டி உள்ளனர். இங்கு ஏழ்கடல் என்பது குறளிலுள்ள ஏழு சீர்களையே குறிக்கிறது. பரணர் என்னும் புலவரோ, 'திருமால் தன் வாமன அவதாரத்தில் தம் இரண்டு அடியால் விண், மண் கொண்ட ஞாலம் முழுதும் அளந்தான். ஆனால் திருவள்ளுவரோ தம் ஒன்றே முக்கால் அடியால் உலகோர் எண்ணங்களையும் அளந்து உரைத்துள்ளாரே' என்று கூறி வியக்கிறார். திருக்குறள் வடிவுச் சுருக்கமும் கருத்துப் பெருக்கமும் உடைய நூல் என்பதே அதன் சிறப்பாகும்.

திருக்குறள் தோன்றி 1200 ஆண்டுகளுக்குப் பின் வந்த ஔவை மூதாட்டி திருக்குறளை விட இன்னும் மிகச் சுருக்கமாக ஓர் அறநூல் இயற்ற விரும்பியதன் விளைவே ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்களாகும். இவை இளஞ்சிறார்கள் படிக்க ஏற்ற வகையில் சிறு சிறு சொற்றொடர்களால், இரண்டு முதல் ஐந்தாறு சொற்கள் வரை கொண்ட சொற்றொடர்களால் அமைந்தவை. கல்வி கற்கும் மாணவர் தரத்திற்கேற்ற வகையில் முதலில் ஆத்திச்சூடியும், அடுத்து கொன்றைவேந்தனும் படிக்க ஏற்புடைய வகையில் இவை இயற்றப்பட்டுள்ளன. ஆத்திச்சூடியில் இரண்டு முதல் மூன்று நான்கு சொற்கள் கொண்ட சிறு சொற்றொடர்கள் இருக்கும். கொன்றை வேந்தனில் இன்னும் சிறிது நீளமான தொடர் இருக்கும். நீதிநூல் வரிசையில் வடிவத்தைப் பொறுத்தவரையில் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், திருக்குறள், நாலடியார் முதலியவற்றைப் படிக்கும் பருவத்துக்கேற்ப தரவரிசைப்படுத்திப் பார்க்கலாம்.

ஆத்திச்சூடியில் திருக்குறள் கருத்துக்கள் மிகச் சுருக்கமான வடிவத்தில் சொல்லப் பெறுவதைக் காண முடியும். திருக்குறளில் 10 குறள்களின் வழி சொல்லப்படும் ஓர் அதிகாரக் கருத்தை அதன் சாரத்தை சுருக்கமாக ஔவையார் ஆத்திச்சூடியில் சொல்வதற்கு சில எடுத்துக்காட்டுகள்:

| ஆத்திச்சூடி | குறள் அதிகாரம் |
|---|---|
| நன்றி மறவேல் | செய்ந்நன்றி அறிதல் |
| பொருள்தனைப் போற்றிவாழ் | பொருள்செயல் வகை |
| பெரியாரைத் துணைகொள் | பெரியாரைத் துணைகோடல் |
| ஒப்புரவொழுகு | ஒப்புரவறிதல் |
| தீவினையகற்று | இன்னா செய்யாமை |
| தையல் சொற்கேளேல் | பெண்வழிச்சேறல் |
| ஆறுவது சினம் | வெகுளாமை |
| சூது விரும்பேல் | சூது |
| கேள்வி முயல் | கேள்வி |
| தூக்கி வினை செய் | வினைசெயல்வகை |
| பேதைமை அகற்று | பேதைமை |

திருக்குறளில் 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்பது ஔவையாரின் ஆத்திச்சூடியில் 'எண் எழுத்து இகழேல்' என்றும், கொன்றை வேந்தனில் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்றும் வந்திருப்பதைக் காணலாம். இவ்வாறு குறள் கூறும் கருத்துகள் பல மிகச் சுருக்கமாக ஆத்திச்சூடி, கொன்றை வேந்தனில் இடம் பெற்றிருப்பதைப் பார்க்கலாம். திருக்குறள் தோன்றிய காலத்திலிருந்து ஔவையார் காலம் வரை தமிழில் உள்ள நூல்களில் மிகச் சிறிய வடிவம் கொண்ட நூல் திருக்குறளே. ஆனால் ஔவையாரோ தம் புலமைத் திறத்தால் திருக்குறளை விட வடிவத்தால் மிகச் சிறிய நூலாக ஆத்திச்சூடியை 108 அடிகளில் இயற்றியுள்ளார். இந்த 108 அடிகளும் தமிழில் சொல்லுக்கு முதலெழுத்தாக வரும் 108 எழுத்துக்களைத் தொடக்கமாகக் கொண்டு திகழ்பவை. இந்த ஆத்திச்சூடி யாப்பு முறையும் ஔவையாரால் தான் தமிழில் முதன் முதலாக அறிமுகப்படுத்தபட்டது. இதனைப் பின்பற்றி இருபதாம் நூற்றாண்டில் பாரதி, பாரதிதாசன் முதலாகப் பன்னிருவர் 'சூடி' நூல்கள் இயற்றி உள்ளனர். எனவே இன்று தமிழிலுள்ள நூல்களில் மிகச்சிறியது ஆத்திச்சூடியே ஆகும். இந்த ஒரு நூலையாவது முழுமையாகத் தமிழர்கள் கற்று நீதி நெறி அறிந்து அதன் வழி நடக்க முயல்வார்களாக! "ஔவையார் பாடிய ஆத்திச்சூடி ஏத்தி ஏத்தி ஆராய்தற்கு உரியது. காரணம் இந்நூல் சிறிதாயினும் புதுமையும் ஒழுங்கும் உடையது. ஆத்திச்சூடிக்கு உரைகளும், கதைகளும் பல உள. இலக்கிய விளக்கங்களும் சமய விளக்கங்களும் பல தோன்றியுள்ளன. பாரதியார், பாரதிதாசன் ஆத்திச்சூடிகள் என வழிநூல்களும் எழுந்தன. ஆங்கில மொழிபெயர்ப்புகளும் உண்டு. பிற மொழிகளிலும் இச்சூடி மொழிபெயர்க்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். நீதிநூல்களில் திருக்குறளுக்கு அடுத்த சிறப்பை ஆத்திச்சூடி பெற்று வருகின்றது. வள்ளுவர்போல் ஔவையும் நாடும் வீடும் அறியப் பெற்றவர்." *

# ஔவை அருளியவை

**ஔவை சொன்னவை அனைத்தும் அமுதச் சொற்கள்; வாழ்வியல் தத்துவங்கள்**



காலத்தால் மறையாதவை. சக்தி வாய்ந்த அந்த சொற்கள், ஆழ்ந்த அனுபவம், சிறந்த எண்ணாங்களின் கோர்வையாக வெளி வந்தவை. உள்ளடங்கிய உண்மை என்றும் உலக வாழ்வுக்கு இன்றியமையாதது. அவை இணையற்ற அறிவுரைகள். எளிதில் நமக்கு கிட்டியவை. எத்தனையோ பேருக்கு எவ்வளவோ உதவி செய்கிறோம். அவர்கள் அனைவரும் நாம் செய்த உதவிகளை நினைவில் கொண்டு மனதில் அன்போடும் நன்றியோடும் நடந்துகொள்கிறார்களா? அல்லது ''சரிதான் போய்யா, ரொம்ப பெரிசா செஞ்சுட்டே நீ'' என்று தூசியை தட்டிவிடுவது போல் நம்மையே உதறி விடுகிறார்களா? இரண்டுமே நடக்கிறதைப் பார்க்கிறோமே! முதல் வகையினருக்கு செய்த உதவி கல்லில் செதுக்கி வைத்த கல்வெட்டு போல் என்றும் மறையாது நிற்கும். அடுத்த வகை, தண்ணீர் மேல் எழுதிய கதை போல் காணாமல் போகுமாம்.

*நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்*
*கல்மேல் எழுத்துப் போல் காணுமே அல்லாத*
*ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்*
*நீர்மேல் எழுத்துக்கு நேர்.*

நிறைய பேருடன் பழகுகிறோம். நண்பர்கள் என்று அவர்களை நினைக்கும்போது அவர்கள் ஏழைகளாக இருந்தாலும் நேர்மை, பண்பு, இனிய இயல்புகள் கொண்டு நமது பெருமதிப்பைப் பெறுகிறார்கள். ஏதோ காலத்தின் கோளாறினால் நொடித்துப் போயிருந்தாலும் அவர்களது பரந்த மனப்பான்மை, நற்குணம் நம்மை மகிழ்விக்கிறது. இது எது போல தெரியுமா?

பாலை எவ்வளவு காய்ச்சி சுண்ட வைத்தாலும் அதன் சுவை கூடுமே தவிர குறையாது அல்லவா? அதுபோலவும், வெண்மையான சங்கு பார்த்திருக்கிறீர்களா? சென்னைக் கடற்கரையிலும் பொருட்காட்சி சாலையிலும் தான் பெரிய வெண் சங்கு பார்க்கலாம். அதை நெருப்பில் வாட்டி சுட்டால் கூட அதன் வெண்மை நிறம் மாறாது. அது போலவும் தான் இப்படிப்பட்ட நல்லவர்களுடன் நாம் கொண்ட நட்பு.

*அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்*
*நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்*
*கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு*
*சுட்டாலும் வெண்மை தரும்.*

தலைகீழே நின்றாலும் சில காரியங்கள் நமக்கு கை கூடவில்லை என்பதை கண்கூடாக காண்கிறோம். இது எதனால்? நடக்கவேண்டிய வேளை இன்னும் வரவில்லை. நேரம் நல்ல நேரமாக மாறவில்லை. இறைவன் அருள் இன்னும் கிட்டவில்லை. தக்க நேரத்தில் தானே வரும். எடுத்த காரியம் நிறைவேறும். இது எது போலவாம் தெரியுமா? உயரமாக வாளிப்பாக வளர்ந்தாலும், வளர்த்தாலும் ஒரு மரத்தில் பழங்கள் தோன்றிவிடாது. அது பழுக்கும் காலமும் பருவமும் வந்தால், தானே குலை குலையாக பழங்களைத் தரும். அதுவரை பொறுக்க வேண்டும்.

*அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி*
*எடுத்த கருமங்கள் ஆகா தொடுத்த*
*உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்*
*பருவத்தால் அன்றிப் பழா.*

சிலர் உறுதியானவர்கள். தளர்வற்றவர்கள். எது வந்தாலும் தாங்கக்கூடிய திட மனம் பெற்றவர்கள். பயமா? கிலோ என்ன விலை? என்று கேட்பவர்கள். உயிர் போகும் வரை, கடைசி வரை எதிர்த்து நிற்பவர்கள், தொய்ந்து போக மாட்டார்கள். இவர்களை எதற்கு ஒப்பிடலாம் என்று யோசித்தால் ஒரு உதாரணம் கிடைத்து விட்டது. பெரிய கருங்கல், பாராங்கல் தூண் ஒன்று எதிரே தெரிகிறது பார்த்தாயா? அதன் மீது எத்தனை சுமை ஏற்றினாலும் தாங்கி நிற்கும். வளையாது. தாங்க முடியாத அளவுக்கு அதன் மீது சுமையேற்று. ஒரு நிலையில் பிளந்து விழுமே அன்றி வளையாது. அப்படிப்பட்டவர்கள் மேலே சொன்ன நபர்கள்.

*உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்*
*பற்றலரைக் கண்டால் பணிவரோ? கல்தூண்*
*பிளந்து இறுவது அல்லால் பெரும் பாரம் தாங்கின்*
*தளர்ந்து வளையுமோ தான்.*

நல்ல ஆசாமி அவன் என்று ஒருவனைப் பற்றி பேசுகிறோம். அவனைப் பார்க்க விருப்பமாகிறது. அவனோடு பேசும்போது காது இனிக்கிறது. வாய் மணக்கிறது. அவனது சிறப்பு மிக்க குணங்களை வருவோர் போவோர் போகும் இடம் எல்லாம் சொல்கிறோம். நினைவு கூறுகிறோம். எப்படி அவர்களிடம் இத்தகைய காந்த சக்தி? இந்த வியப்பு, ஒரு எளிய, அர்த்தம் தேடிப்போகத் தேவையில்லாத இதோ இந்தப்பாட்டில் இருக்கிறது.

*நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம்மிக்க*
*நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே நல்லார்*
*குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு*
*இணங்கி இருப்பதுவும் நன்று.*

அதே நேரத்தில் ஒரு சில ஆசாமிகளை ஏன் தெரிந்து கொண்டோம் என்று வருத்தப்பட வேண்டியிருக்கிறது. இவ்வளவு மோசமாக கூடவா ஒருவன் இருக்க முடியும். எது எடுத்தாலும் அதில் ஒரு தகராறு, பொய், சுயநலம், அடாவடி, லஞ்ச லாவண்யம், இப்படிப்பட்டவனோடு சேருவது இருக்கட்டும். பேசுவது இருக்கட்டும். பார்த்தாலே நம்மையும் அவன் குணம் ஒட்டிக்கொள்ளும். நினைத்தாலே நாமும் அவனாக மாறிவிடுவோம் என்கிற பயம் வரும். இதை எவ்வளவு அழகாக இந்த சின்ன கவிதை விளக்குகிறது.

*தீயாரைக் காண்பதுவும் தீதே; திரு அற்ற*
*தீயார் சொல் கேட்பதுவும் தீதே தீயார்*
*குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு*
*இணங்கி இருப்பதுவும் தீது.*

கண்ணுக்கெட்டியவரை பச்சைப் பசேல் என்று நெல் மணம் வீசும் வயல். ஒரு துறவு கிணற்றில் ஏற்றம் இறைத்து நீர் பாய்ச்சுவார்கள், ஏற்றமிறைப்பவர்கள் வாய் விட்டு உரக்க பாடுவார்கள். இறைக்கும் நீர் சிறிய மண் கால்வாய்கள் வழியாக நிலத்தின் எல்லா பகுதிகளுக்கும் வரப்பை ஒட்டி பரவும். ஆங்காங்கே புல்லின் குடும்பம் கூட நெல்லுக்கு ஒரு பக்கமாக வாழ்ந்து வரும். அதற்கு யார் வேளா வேளைக்கு நீர் பாய்ச்சுவார்கள்? ஏதோ நெல் செய்த புண்ணியத்தில் தனக்கும் வாழ்க்கை நீடிக்க நீர் கிடைக்கிறதே என்று அந்தப் புல் கூட்டம் மகிழ்ச்சி கொள்கிறதைப் பார்க்கும்போது எது மனதில் தோன்றுகிறது தெரியுமா?

ஒருவன் நல்லவன், இந்த உலகில் எங்கோ இன்னும் இருக்கிறான், இறைவன் அந்த ஒரு நல்லவன் வாழ அருளும் மழையினால் மற்ற புல் ஜென்மங்களான நமக்கும் மழை கிடைக்கிறதே!

*நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்*
*புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் தொல் உலகில்*
*நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு*
*எல்லார்க்கும் பெய்யும் மழை.*

இதை எழுதிய அருமையான இணையற்ற புலவர் நமது பாட்டி அவ்வை தான். வேறு யாரால் இது போல் எளிமையாக எழுத முடியும்! *

### உங்களுக்குத் தெரியுமா?

திருக்குறளில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை

திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளது

திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழிபெயர்த்துள்ளனர்



# ஔவையார் விழா 2014 போட்டிகள்

ஔவையார் என்ற பெண் கவிஞரை போற்றிக் கொண்டாடவும் பெண்களின் ஆளுமைத் திறன்களை உலகறியவும் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் வரும் ஆகஸ்டு மாதம் 10 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடத்தும் "ஔவையார் விழா 2014" நிகழ்ச்சி தொடர்பாக பல விதமான போட்டிகள் நடத்தின. இவற்றில் ஏராளமான மாணவச் செல்வங்கள் பங்கு கொண்டு ஏற்பாட்டாளர்களை பிரமிக்க வைத்தனர்.

தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் ஜூலை மாதம் 20 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை உமறுப்புலவர் தமிழ் மொழி நிலையத்தில் நடைபெற்றன. தொடக்கநிலை 1 – 2 மாணவர்களுக்கு ஆத்திச்சூடி ஒப்புவித்தல் போட்டியும், தொடக்கநிலை 3 – 4 மாணவர்களுக்குக் கதை சொல்லும் போட்டியும், தொடக்கநிலை 5 – 6 வகுப்பு மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டியும் நடைபெற்றன.

ஏறத்தாழ 70 தொடக்கப் பள்ளிகளிலிருந்து வந்திருந்த சுமார் 800 மாணவர்கள் இந்தப் போட்டிகளில் உற்சாகத்துடன் பங்கேற்றனர். 40 தமிழ் ஆசிரியர்கள் நடுவர்களாக வந்திருந்து வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் சவாலான பணியைச் செவ்வனே செய்தனர். 75 தொண்டூழியர்கள் உதவியோடு பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பேராதரவுடன் சிறப்பாக நடந்தேறிய "ஔவையார் விழா 2014 போட்டிகள்" தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் கிரீடத்தில் மற்றொரு மணிமகுடம் என்று சொன்னால் அது மிகையாகாது.



# செந்தமிழ் கேட்கும் திருமுருகன்



நல்ல கோடை காலத்தில் நடுப்பகலில் ஔவையார் ஒரு காட்டு வழியே சென்றார். அவர் சென்ற வழியில் நாவல் மரமொன்று நன்கு பழுத்து நின்றது. மரத்தின் மீது மாடுமேய்க்கும் சிறுவன் போல் ஒரு பையன் நாவற் பழங்களைப் பறித்து தின்றுகொண்டிருந்தான். ஔவையார் அப்பையனைப் பார்த்து, 'பையா! எனக்குஞ் சிறு பழங்கள் போடு' என்றார். உடனே அப்பையன், 'பாட்டி! உனக்குச் சுடுகின்ற பழங்கள் வேண்டுமா? சுடாத பழங்கள் வேண்டுமா?' என்றான். உடனே ஔவையார் அப்பையனைக் குறும்பன் என்று எண்ணி, "ஓ மூடா, நாவற்பழங்கள் எங்கேனும் சுடுமா? குறும்பா பேசுகிறாய்? எங்கே சுடுகிற பழங்களைப் போடு பார்ப்போம்" என்றார். உடனே அப்பையன் மரக்கிளையைப் பிடித்து உலுக்கினான். பழங்கள் மணலின் மீது உதிர்ந்தன. ஔவையார் அவைகளில் சிலவற்றைக் கையிலெடுத்தார். அவற்றில் மண் ஒட்டிக்கொண்டிருந்தது. அம்மண் போகுமாறு வாயால் ஊதினார். அதனைக் கண்ட பையன், 'எங்கேனும் நாவற்பழம் சுடுமா என்று கேட்டாயே? பாட்டி இப்போது ஏன் வாயால் ஊதுகிறாய்?' என்று கேட்டு நகைத்தான். சுடுகிற பழம் சுடாதபழம் என்று பையன் சொல்லியதன் கருத்து அப்போதுதான் ஔவையாருக்கு விளங்கிற்று. நாம் இந்தச் சிறுவனுக்குத் தோற்றோமல்லவா என்று எண்ணியவராய்,

*'கருங்காலிக் கட்டைக்கு நாணாக்கோ டாரி*
*இருங்கதலித் தண்டுக்கு நாணும் பெருங்காலில்*
*காரெருமை மேய்க்கின்ற நாளைக்கே கான்தோற்றேன்*
*ஈரிவுந் துஞ்சாதென் கண்"*

என்று பாடினார், ஔவையார் முன் உடனே அப்பையன் முருகவேளாக மாறி நின்றான். ஔவையாரைப் பெரிதும் மகிழ்ச்சியுடன் பார்த்துச் "செந்தமிழ்ப் பெருமாட்டி! நான்தான் உன்னுடன் சிறுவிளையாடல் புரிய விரும்பி இவ்வாறு போந்தேன்; வருந்தாதே. இவ்வுலகத்தின்கண் கொடியது யாது; இனியது யாது; பெரியது யாது; அரியது யாது? என்பதனை எனக்கு விளக்கிக் கூறுவாயாக என்று கூறினான். உடனே, ஆறுமுகன் கேட்ட நான்கு வினாக்கட்கும் ஔவையார் நான்கு அகவற் பாக்களால் விடையளித்தார். ஔவையார் விடையைக் கேட்டு மகிழ்ந்த அறுமுகன் அவரை வாழ்த்தி மறைந்தருளினான்.

*கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!*
*கொடிது கொடிது வறுமை கொடிது;*
*அதனினுங் கொடிது இளமையில் வறுமை*
*அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்;*
*அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்;*
*அதனினுங் கொடியது இன்புற*
*அவர்கையில் உண்பதுதானே!*

*இனியது கேட்கின் தனிநெடு வேலோய்!*
*இனிது இனிது ஏகாந்த மினிது;*
*அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்;*
*அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்;*
*அதனினும் இனிது அறிவுள் ளோரைக்*
*கனவிலும் நனவில காண்பது தானே!*

*பெரியது கேட்கின் கரிதவழ் வேலோய்!*
*பெரிது பெரிது புவனம் பெரிது;*
*புவனமோ நான்முகன் படைப்பு;*
*நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்;*
*கரிய மாலோ அலைகடற் றுயின்றோன்;*
*அலைகடல் குறுமுனி அங்கையி லடக்கம்;*
*குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்;*
*கலசமோ புவியிற் சிறுமண்;*
*புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்;*
*அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்;*
*உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்;*
*இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்;*
*தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.*

*அரியது கேட்கின் வரிவடி வேலோய்;*
*அரிதரிது மானிட ராத லரிது;*
*மானிடராயினுங் கூன் குருடு செவிடு*
*பேடு நீங்கிப் பிறத்த லரிது*
*பேடு நீங்கிப் பிறந்த காலையும்*
*ஞானமுங் கல்வியும் நயத்த லரிது*
*ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்*
*தானமும் தவமுந் தாஞ்செய லரிது*
*தானமுந்தவமுந் தாஞ்செய்வராயின்*
*வானவர் நாடு வழி திறந்திடுமே.*

*



# 90 வயது இளைஞர் எஸ்.ஆர். நாதன்

ஏ.பி.ராமன்

தொண்ணூறை தொட்ட முதிர் இளைஞர் ஒருவரின் பிறந்த நாளைக் கொண்டாடும் பெருமையை அண்மையில் நாம் பெற்றோம். அண்மையில் சிங்கப்பூர் வரலாற்றில் தடம் பதித்த தலைவர் ஒருவரின் அறுபது ஆண்டு கால சேவைக்குத் தலை வணங்கி மகிழ்ந்தது சிங்கப்பூர் தமிழ்ச் சமுதாயம். ஆம், தொண்ணூறு வயதான போதிலும் இன்றும் நம்மோடு தளர் நடை போடும் சிங்கப்பூரின் ஆறாம் அதிபர் நம் மதிப்பிற்குரிய எஸ்.ஆர்.நாதன் தான் அந்த மாமனிதர்!

எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து, எத்தனை எத்தனையோ துயர்கள் சுமந்து, அடித் தள வேலைகளினின்று அதிபர் வரை பதவி ஏற்று ஒரு நாட்டின் புகழுக்கும் பெருமைக்கும் காரணமாயிருந்தவர் மதிப்புமிகு எஸ்.ஆர்.நாதன் அவர்கள். அதிபராகப் பதவி வகித்த காலத்தில் அவர் சாதித்தவை எண்ணிலடங்கா. எட்டு ஆண்டு காலப் பதவி வேறெந்த அதிபரும் பார்த்திராத நீண்ட சேவை! சிங்கப்பூரர்களுக்கு குறிப்பாக இந்தியர்களுக்கு மேலும் குறிப்பாக இந்த நாட்டின் தமிழ் இனத்திற்குப் பெருமை சேர்த்த திரு.எஸ். ஆர்.நாதன், இன்றும் நம்மிடையே சுறுசுறுப்பாக இயங்கி இந்தியர் நலன்களில் அக்கறை காட்டி வருவது நம் பேறாகும். செல்லப்பன் ராமநாதன் என்கிற இந்த எஸ்.ஆர்.நாதன் பிறந்து வளர்ந்தது அன்றைய மலாயாவில்! ஆனால் அவர் உழைத்து உயர்ந்ததோ சிங்கப்பூரில்! சிறு வயதில் பிழைப்பிற்காக சாதாரண வேலைகளை ஏற்று வாழ்ந்த இவர், பிற்காலத்தில் ஏற்காத பெரும் பதவி இல்லை.

அன்றைய மலாயாவில் சிறிது காலம் பணியாற்றியபோது, ஜப்பானிய ஆதிக்கத்திற்கு உள்ளான சிங்கப்பூரில் பணி தொடங்கியவர் நாதன். ஜப்பானிய மொழி கற்று, ஜப்பானியர்களின் நட்பிற்கு இலக்கான திரு நாதன், ஆரம்பக் கல்வியை கற்கும் முயற்சியிலும் இறங்கினார். இன்னல்களுக்கிடையே அவர் அன்றைய சூழலில் கற்ற கல்வி தான் அவரை மேற்படிப்புகளைப் படிக்கத் தூண்டியது. படிப்படியாக, பல துறைகளில் பணியாற்றினார். சிங்கப்பூர் வெளியுறவு இலாகாவில் பணியாற்றிய போது, திரு நாதனின் துணிவும், அசாத்தியமான செயலாற்றலும் அவருக்குப் பெரும் புகழைத் தந்தன. லண்டனிலும், அமெரிக்காவிலும் தூதராகப் பணியாற்றியபோது நடந்த சில அரசியல் நிகழ்வுகள் அவருக்கு மேலும் புகழ் சேர்த்தன.

பே (பே) என்ற அமெரிக்க மாணவன், சிங்கப்பூரில் சுவற்றில் கிறுக்கிய குற்றத்திற்காக அவனுக்கு சிறை, பிரம்படித் தண்டனை தரப்பட்டபோது, அமெரிக்க மக்கள், அரசு ஆகியவை மூர்க்கமாக எதிர்த்தன. ராஜதந்திரமாகக் கையாள வேண்டிய இந்தப் பிரச்சினையை திரு நாதன் சாமர்த்தியமாக எதிர்கொண்டு வெற்றி பெற்றார்.

அமெரிக்காவின் நட்புறவும் காப்பாற்றப்பட வேண்டும். அதே நேரத்தில் சிங்கப்பூரின் சட்ட ஒழுங்கும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற சூழ்நிலையில் திரு.நாதன் நடந்துகொண்ட முறை வெகுவாகப் பாராட்டப்பட்டது. நாட்டின் தலைவராக திரு நாதன் அவர்கள் பணியாற்றியபோது அப்பதவியில் அவர் சாதித்தவை ஏராளம். ஒரு சமயம் தீவிரவாதக் குழுவினர் நாட்டை அழிக்க முற்பட்டபோது, அதை முன்னின்று எதிர்கொண்டது நாதன் தலைமையிலான குழுவினர். வெளிஉறவு இலாகாவில் பதவி வகித்த எஸ்.ஆர்.நாதன், தன் குழுவினருடன் சிங்கப்பூரையே அச்சுறுத்திய அத் தீவிரவாதக் கும்பலை முன்னடத்திச் சென்று, அவர்களை வெளி நாட்டில் கொண்டு சேர்த்து நாட்டைக் காப்பாற்றியதை, நாம் இன்றும் மறக்க இயலாது. அதிபராகப் பதவியிலிருந்த காலத்தில் அவர் ஆற்றிய சமூகப் பணிகளும் பெரும் பாராட்டைப் பெற்றவை.


வாழ்வின் கஷ்ட நஷ்டங்களை தூக்கிச் சுமந்து, ஜப்பானிய பிரிட்டிஷ் ஆட்சிகளை கண்டு அனுபவித்துத் தன் திறமையால் கல்வியறிவு கண்டு, ஒரு நாட்டின் மிகப் பெரிய அதிபர் பதவியை தொடர்ந்து இரு முறை செங்கோல் ஓச்சிய திரு எஸ்.ஆர்.நாதன், தன் வாழ்நாள் அனுபவங்களை சுவைபட எழுதி அண்மையில் வெளியிட்ட 'உழைப்பின் உயர்வு' நூல், ஒரு தமிழ் மகன் வாழ்ந்து, வளர்ந்த நிகழ்வுகளை சுவைபடக் கூறுகிறது, சட்ட, வெளிஉறவு அமைச்சர் க.சண்முகம் அவர்கள் நூலை வெளியிட்டுப் பேசியபோது, நாதன் பற்றிய நெஞ்சினிக்கும் சுவை தகவல்களை ரசனையோடு சொன்னார். மக்களின் தோழனாகத் தன்னை என்றுமே நிலைநிறுத்திக் கொண்ட திரு.நாதன், இன்றும் தன்னால் இயன்ற சமூகப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுபவர். அவர்மேலும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். வாழ்த்துவோம். *

## பழனியப்பனின் மொழி பெயர்ப்புச் சாதனை!

செயல் வீரராக, சமூக ஊழியராக, தொழிற் சங்கவாதியாக, இடதுசாரி வலதுசாரி போராட்டங்களை எதிர்கொண்டவராக விளங்கி, நாட்டிற்குப் பெரும் சேவையாற்றிய நம் ஆறாம் அதிபர் எஸ்.ஆர்.நாதன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல் "உழைப்பின் உயர்வு" அண்மையில் வெளியிடப்பட்டபோது, அதைத் திறமையுடன் மொழியாக்கம் செய்த திரு.ஆ.பழனியப்பன் வெகுவாகப் பாராட்டப்பட்டார். நாடாளு மன்ற மொழி பெயர்ப்புத் துறையில் பொறுப்பான பணியாற்றும் இவர் இயற்கையிலேயே மொழி ஆற்றல் பெற்ற தமிழ் ஆர்வலர் ஆவார். நாதன் அவர்களின் தரமான ஆங்கிலத்தை அதன் சுவை குறையாமல், மிகுந்த கவனத்துடன் தந்திருக்கும் திரு. பழனியப்பன், முனைவர் சுப.திண்ணப்பன் போன்றோரின் அரிய ஆலோசனைகளுடன் இதை செயலாக்கியதாகக் குறிப்பிட்டார்.



"ஒருவர் ஒரு நாட்டின் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவரா இல்லையா என்பது முக்கியமல்ல. சிங்கப்பூரில் சாத்திய மாகாதது எதுவும் இல்லை என்பதற்குத் திரு.நாதன் "வாழும் சான்றாகத் திகழ்கிறார் " என்று தமிழ் முரசின் தலைவர் திரு எஸ்.சந்திரதாஸ் தந்திருக்கும் முன்னுரையுடன் வெளி வந்துள்ள 'உழைப்பின் உயர்வு' நூல், திரு.பழனியப்பனின் திறமைக்கும் சான்றாகத் திகழ்கிறது என்பதில் சந்தேகமே கிடையாது.






## அபூர்வ மனிதர் ஜலீல்

"நான் இப்போது கொடுப்பதெல்லாம் போதாது இன்னும் தர வேண்டும்" என்று சொல்லும் ஒரு அபூர்வ மனிதரை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவர் வேறு யாருமல்ல. கடந்த ஐந்தாண்டுகளில் சமூக நலன்கள், மொழி வளர்ப்பு மற்றும் சமய நெறிகளுக்காக குறைந்தது ஒரு மில்லியன் வெள்ளிவரை தாராளமாக வழங்கிய திரு. முகமது அப்துல் ஜலீல்.

தன் கடின உழைப்பால் முன்னேறி இன்று பல தொழில்களின் அதிபராக விளங்கும் ஜலீல், உழைப்பால் உயர்ந்ததோடு மட்டுமன்றி, உழைப்பைப் பெரிதும் மதிப்பவர். தொடக்கத்தில் சீன கட்டட நிறுவனத்தில் சாதாரண வேலையில் துவங்கிய ஜலீல் அவர்கள், தனது 18 வது வயதில், தொழில் தொடரும் வயதை எட்டியதும், மினி என்வைரோன்மென்ட் சர்விஸ் எனும் இன்றைய புகழ்மிக்க நிறுவனத்தைப் பதிவு செய்து, கட்டிடத் துறையில் தன் உழைப்பை உறுதி செய்துகொண்டவர்.

வயது 55ஐ எட்டும் இந்த அபூர்வ மனிதரின் ஆசைகளும் அபூர்வமானவை. லீ அறநிறுவனம் (Lee Foundation) போன்று இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு முழு அளவு பயன்படும் அற நிறுவனமொன்றை உருவாக்கும் எண்ணம் கொண்டி ருக்கிறார். சமுதாய ரீதியில் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அறநிலையங்கள் தற்போது இல்லாத நிலையில், இப்படி ஒரு அமைப்பு அவசியம் என அவர் கருதுகிறார்.

"சிங்கப்பூரில் கடின உழைப்பிற்கு நிச்சயம் மதிப்பிருக்கிறது. ஏராளமான வாய்ப்புகள் இங்கே உள்ளன. அவற்றை நம் மக்கள் சுலபமாக எடுத்துக் கொள்ளக்கூடாது எனக் கூறும் திரு.ஜலீல், தொழில் துறையில் புதிய புதிய கண்டுபிடிப்புகளுக்கு இடம் தந்தாக வேண்டும்" என நினைப்பவர். வெளிநாட்டு ஊழியர்களுக்கு மேலும் தரமான, நவீனமான இருப்பிடங்களை கட்டித் தருவதை குறிக்கோளாகக் கொண்ட திரு.ஜலீல், ஊழியர்களை மதித்துக் கவனிக்கும் நாடு சிங்கப்பூர் என்ற நற்பெயரைப் பெற வேண்டும் என்கிறார்.

"என்னை வளர்த்த நாட்டிற்கு, நான் என் பங்கை செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை, என்றும் செய்வேன்" என்று பெருந்தன்மையுடன் கூறும் திரு ஜலீல், மறக்க முடியாத மா மனிதர். *

-ஏ.பி.ராமன்



# வானொலிக்கு ஓர் புதிய அடையாளம்

## வசந்தம் தலைவி சித்ரா ராஜாராம்

Vasantham A MEDIACORP Channel

OLi 96.8FM ஒலி

### உரையாடல்: புஷ்பலதா நாயுடு

வசந்தம் தலைவி டாக்டர் சித்ரா ராஜாராமை 'தமிழ்மணி'க்காக பேட்டி ஒன்றைக் கேட்டபோது, அவர் முதலில் தயக்கம் காட்டினார். காரணம், அவருடைய இடைவெளி இல்லாத ஒளி / ஒலிப் பணிகள் தாம். சிங்கப்பூரின் பொழுதுபோக்குத் துறையில் முன்னணியில் இருந்து வரும் வசந்தம் மற்றும் ஒலி 96.8ன் நிர்வாகப் பொறுப்பிலிருந்து கொண்டு, லட்சக் கணக்கான ரசிகர்களை அன்றாடம் திருப்திப் படுத்தும் பொறுப்பில் அமர்ந்து, ஓர் அமைப்பின் தலைவியாகப் பணியாற்றும் டாக்டர் சித்ரா மனமுவந்து தந்த இந்த பேட்டிக்கு உங்கள் சார்பில் நம் நன்றி. புஷ்பலதா நாயுடு.

*புஷ்பா: உங்கள் பள்ளி, கல்லூரி நாட்களுக்குப் பிறகு ஆர்வத்துடன் பத்திரிகைத் துறையில் நுழைந்தீர்கள். ஆனால் அதைத் தொடரவில்லையே?*

சித்ரா: ஜேர்னலிசம் அதாவது அச்சகம் சார்ந்த பத்திரிகைத் துறைதான் முதலில் என்னைக் கவர்ந்தது. அதைக் கற்பதற்கும் ஆசைப்பட்டேன். பிறகு அதே துறையில் மற்றவர்களுக்கு போதிக்கச் சென்றேன். ஒரு முழு சுற்று சுற்றிவிட்டு மீண்டும் பத்திரிகைக்கே திரும்பினேன். அது தான் தமிழ் முரசில் நான் பணியாற்றிய காலம். தமிழ் முரசை ஏன் தொடரவில்லை என்று கேட்பதாகவும் எடுத்துக் கொள்கிறேன். அந்தப் பணியில் எனக்கு ஒரு மன நிறைவு, திருப்தி ஏற்பட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அத்தோடு முரசு தன் வளர்ச்சியில் ஒரு அளவை எட்டி இருந்தது. அதன் வளர்ச்சியில் மேலும் இளையர்களின் பங்கு தேவைப்பட்டது எனத் தோன்றியது. அதே நேரத்தில், நான் முன்பு வேலை செய்த அமைப்புகள் என்னை அனைத்துலக ரீதியான மக்கள் தொடர்புத் துறைக்கு அழைத்தனர். அந்த நல்ல வாய்ப்பினை இழக்க மனம் வரவில்லை.

*வசந்தம் தலைவராகப் பணியாற்றும் நீங்கள் இந்தப் பணியை எந்த அளவுக்கு விரும்புகிறீர்கள்?*

மிகவும் மகிழ்ச்சி தரும் வேலை. மூன்று ஆண்டுகளுக்கு முன் வசந்தத்தில் நுழைந்தபோது, நான் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருந்தது. வசந்தத்தின் வழி நல்ல சிந்தனையையும், வாழ்வு முறைகளையும் மக்களுக்கு உணர்த்த முடிகிறது என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

*உங்கள் இசை, நடனம் மற்ற கலைத்துறை அனுபவம் பற்றி சொல்ல முடியுமா?*

தாராளமாக. சின்ன வயதில் இந்திய பாரம்பரிய பரதத்தைக் கற்றுக் கொண்டேன். அதைத் தொடர்ந்து கற்க முடியாததில் எனக்கு வருத்தம் தான். உயர்நிலை, ஜீனியர் காலேஜ் காலங்களில், விவாதங்கள், நாடகம் நடிப்பு போன்றவற்றில் கவனம் சென்று விட்டது. பிறகு குடும்பம், வேலை காரணமாக தொடர முடியவில்லை. ஆனாலும் இன்னமும் நடனத்தை பெரிதும் விரும்புகிறேன். சென்ற ஆண்டில் ஸூம்பா (Zumba) என்ற உடல் ஆரோக்கிய பயிற்சி நடனத்தை விரும்பி கற்றுக் கொண்டேன். இப்போது அதனை மற்றவர்களுக்கு கற்றுத்தருமளவுக்கு தகுதி பெற்றிருக்கிறேன். ஆனால் யாருக்கும் கற்றுத் தர நேரம் தான் இருப்பதில்லை.

*வசந்தம் வழி நேயர்களுக்கு நல்ல இசையறிவையும், நடன ஆர்வத்தையும் உருவாக்கி வருகிறீர்கள். இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?*

சந்தேகமே இல்லை. இளையரிடையே இசை, நடன உணர்வுகளை வசந்தம் நிகழ்ச்சிகள் வளர்த்து வருகின்றன. இளையர்களின் திறமை பளிச்சிடும் பல நிகழ்ச்சிகள் வசந்தத்தில் படைக்கப்படுகின்றன. 'வசந்தம் ஸ்டார்', 'யார் அந்த ஸ்டார்' போன்ற நிகழ்ச்சிகள் இளையர்களின் பாட்டுத் திறனை வெளிக்காட்டுகின்றன. உள்ளூர் நாடகங்கள், இளையர்களிடையே நடிப்பார்வத்தை உண்டு பண்ணி இருக்கிறது. 'தூள்'', 'மிஸ் வசந்தம்' போன்றவை அவர்களின் நடன, நடிப்புத் திறமையை வெளிக்கொண்டு வர முடிகிறது.

*உங்கள் இளமைக் கால படிப்பனுபவம் எப்படி இருந்தது?*

என் சிறந்த காலம் என்றால் அது ராபிள்ஸ் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் காலம்தான். என்னுடன் பழகிய பல இந்தியப் பெண்கள் இன்னமும் தொடர்பில் இருக்கிறோம். ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது எங்கள் பிறந்த நாட்களை ஒட்டியோ நாங்கள் சந்தித்துக் கொள்வோம். அவர்களில் பலர் இன்று டாக்டர்கள், வங்கி அதிகாரிகள், ஆசிரியர்கள், கணினி நிபுணர்கள் என இன்னும் பல துறைகளில் பணி செய்பவர்கள்

*உங்கள் சமூக சேவைகள் பற்றித் தெரிந்துகொள்ளலாமா?*

அதிகம் இல்லாவிட்டாலும் சிலவற்றைக் கூறலாம். சென்ட்ரல் சிடிசியில் டிஸ்ட்ரிக்ட் கவுன்சிலராக இருக்கிறேன். அதிக நேரம் ஒதுக்க முடியாமல் போகவே பல அமைப்புகளிலிருந்து விலகிக் கொள்ள நேரிட்டது.


புஷ்பலதா நாயுடு

*நீங்கள் எழுதிய நூல்கள்*

*பற்றியும், உங்கள் டாக்டர் பட்டம் பற்றியும் தெரிய விரும்புகிறோம்.*

நான் நூல் எதுவும் எழுதவில்லை. மனித இனப்பிரிவு ஆண்பெண் தொடர்பான கல்வியில் நான் முனைவர் பட்டம் பெற்றேன். சிறுபான்மையாக இருக்கும் சமுதாயத்தில், இந்தியப் பெண்கள் எவ்வாறு சமாளிக்கிறார்கள் என்பது பற்றிய ஆய்வு அது.

*உங்கள் வெற்றிக்குப் பின்னால் இருப்பவர்கள் யார்?*

நிச்சயமாக என் கணவரும், பெற்றோர்களும் தான். அவர்கள் தயவின்றி என்னால் குடும்பம், தொழில் இரண்டையும் ஒருசேர பார்த்துக்கொள்வது சாத்தியமில்லை.

*வானொலியும் வசந்தமும் இணைந்த செய்திகள் உள்ளன. உங்கள் அபிப்பிராயம் என்ன?*

உலகின் மிகப் பெரிய சாதனம் வானொலி. 75 ஆண்டு கால பழமை. வானொலியின் பயன் நிச்சயம் தொடரும். ஆனால் இன்டர்நெட் வானொலி இளையர்களுக்கிடையே பிரபலம் அடைந்துவிட்டது. அதே நேரத்தில், வானொலி தன் பழைய ஒலிபரப்பு பாணியை மாற்றிக் கொள்ள வேண்டும். மாறி வரும் நேயர் சமுதாயத்திற்கேற்ப இது இருப்பது அவசியம். வானொலியை தொலைக் காட்சியுடன் இணைத்ததன் மூலம், வானொலி அறிவிப்பாளர்களுக்கு ஓர் அடையாளம் கிடைக்கிறது. அவர்கள் எப்படி இருப்பார்கள் என்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அவர்கள் படைக்கும் போது அவர்கள் முகத்தைப் பார்க்கலாம். தனித் தனியே படைக்கப்பட்ட தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகள் இப்போது சேர்ந்து படைக்கப்படுகின்றன. வரும் காலங்களில் வானொலி தொலைக்காட்சி இரண்டையும் இணையம் வழிதான் மக்கள் பார்ப்பார்கள். அது இப்பொழுதே நடக்கிறது.

*விவரமான பதிலுக்கு நன்றி. இறுதிக் கேள்வி. தமிழ் மாதம் போன்ற இயக்கங்களுக்கு நம் வசந்தம், ஒலி 96.8 இரண்டும் நல்ல ஆதரவைத் தந்து வருகின்றன. அதற்கு நன்றி. தமிழ் மொழி விழா பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

தமிழ் மொழி விழா தொடக்க நிகழ்ச்சியை நேரடியாக ஒளி /ஒலி பரப்புவதிலிருந்து அம்மாதம் நடக்கும் நிகழ்ச்சிகளின் விபரங்களை முழுவதும் நேயர்களுக்கு எடுத்துச் செல்லும் பணியைச் செய்து வருகிறோம். தமிழ் மொழி விழா ஓர் அருமையான ஏற்பாடு. ஆனால் ஒரே மாதத்தில் மிக அதிகமான நிகழ்ச்சிக்குப் பதிலாக, ஆண்டு முழுவதும் நிகழ்ச்சிகள் நீடித்தால் மக்கள் மனதில் அது வேரூன்றி நிற்கவும், நல்ல பலனும் கிட்டும் என நினைக்கிறேன்.

*தமிழ்மணி சார்பில் மிக்க நன்றி சித்ரா.*

மிக்க மகிழ்ச்சி புஷ்பா. தமிழ்மணிக்கு என் வாழ்த்துகள். *

> உறங்கும் ஆன்மாவை எழுப்புங்கள், அது எவ்வாறு விழித்தெழுகிறது என்பதைப் பாருங்கள். உறங்குகின்ற ஆன்மா மட்டும் விழித்தெழுந்து தன்னுள்ளுணர்வுடன் செயலில் ஈடுபடுமானால் சக்தி வரும். பெருமை வரும்.
>
> -விவேகானந்தர்

# மேடை நாடகங்களின் வளர்ச்சி

## ரெ.சோமசுந்தரம்

**1819** ஆம் ஆண்டு சர் ஸ்டாம்போர்டு ராபிள்ஸ் அவர்களால் சிங்கப்பூர் கண்டுபிடிக்கப்பட்டபோது மிகக் குறைந்த அளவில் தமிழர்கள் இங்கே வந்தனர். அந்த எண்ணிக்கை 1880 களில் அதிகமாயிற்று. கோவில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் போன்றவை கட்டப்பட்டன. திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன. கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. நாடகத்தைப் பொறுத்தவரை 1920 களின் ஆரம்பத்தில் தமிழகத்திலிருந்து வந்த நாடகக் குழுக்களாலேயே பெரிய அளவில் நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டன. அவற்றுள் காதர் பாட்ஷா, மொய்தீன் சாஹிப் நாடகக் குழுக்கள் மேடை ஏற்றிய நாடகங்கள் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன. இவர்களைத் தொடர்ந்து பல நாடகக் குழுக்கள் இங்கே தங்கள் நாடகங்களை மேடை ஏற்றின. இந்தக் குழுக்களெல்லாம் பெரும்பாலும் புராண நாடகங்களையே அரங்கேற்றி வந்தன. இவ்வேளையில் சமூக நாடகங்கள் மூலம் ஒரு மறுமலர்ச்சியை சிங்கப்பூரில் கொண்டு வந்தவர் நவாப், எம் கே ராதா போன்றோர். இந்த நாடகங்களைப் பார்த்த பின்னரே இங்குள்ளவர்களுக்குச் சமூக நாடகத்தை அரங்கேற்ற வேண்டும் என்ற எண்ணம் உதயமாயிற்று.

1930 ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து சிங்கப்பூர் வந்த திரு ந பழனிவேலு அவர்கள் வசனம், பாடல்கள் எழுத, சிங்காரம் பிள்ளை என்பவர் கதையை எழுதித் தயாரிக்க உள்ளூர்வாசிகளைக் கொண்டே படைக்கப்பட்ட நாடகம் 'ஜானி ஆலம்'. பின்பு அவர் தமிழர் சீர்திருத்தச் சங்கம் மூலம் அலெக்சாண்டிரா மேடையில் பல நாடகங்களை அரங்கேற்றியிருக்கிறார். சிங்கப்பூரில் தமிழ் மேடை நாடக வளர்ச்சிக்குத் தமிழர் சீர்திருத்த சங்கம் பெரும் பங்காற்றியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. *



ஒத்தெல்லோ நாடகத்தில் 'ரெ.சோ'



# பல கட்டங்களைக் கடந்து வளரும் தமிழ் மின்மரபுடமைத் திட்டம்!

உலகமே புகழும் நிலையில் நாம் இருக்கிறோம்!

சின்ன ஊர் சிங்கப்பூர் பற்றி உலகில் அன்றாடம் எங்கோ ஓர் பகுதியில் யாரோ யாருடனோ பேசிக் கொண்டே இருக்கின்றனர்!

ஆய்வுகளில் முதலிடம் - செய்வன திருந்தச் செய்தல் திட்டமிட்ட செயல்கள்பல இன மக்களின் ஒரு மன வாழ்வு. இவை எல்லாமே இச்சிறிய தீவின் பெரிய நிலப்பரப்பு!

நாமே கேட்காவிட்டாலும் தானாகவே எதையும் செய்யும் அரசு நமக்கு!

ஆனால் நமக்குச் செய்யப்படுவவையே நமக்குத் தெரியாத நிலை !

மக்கள் தொகையில் குறைந்திருந்தாலும் நமக்கு மற்றவர்களைப்போல் அனைத்தும்!

வானொலி, தொலைக் காட்சி, நூலகம், புத்தகங்கள் எல்லாம் தமிழில் நிறைய!

தமிழ் மொழி வரலாற்றில், விரைவில் முதன்முதலாக அறிமுகமாகவுள்ள சிங்கை நூல்களின் மின்னியல் பதிவு பற்றி உங்களுக்குத் தெரியுமா?

ஆம். நம் தமிழ் எழுத்தாளர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளில் சிங்கப்பூர் மண்ணில் அல்லது சிங்கப்பூர் பற்றி எழுதிக் குவித்த நூல்கள் தற்போது மின்மயமாக்கப் படவிருக்கின்றன.

இதன் நோக்கம் தான் என்ன?

இதன் வழி, இந்த மின்னியல் பதிவுகள், நமக்குப் பிறகும், நம் பின்வரும் பல சந்ததியினரின் பார்வைக்கு உட்படவிருக்கின்றன என்பது தான் வரலாறு படைக்கும் செய்தி.

சிங்கப்பூரின் பிறமொழி இலக்கியங்களோ பிற நாடுகளில் உள்ள தமிழ் மொழி இலக்கியங்களோ இதைப் போன்ற ஒரு முயற்சிக்கு உட்படுத்தப் படவில்லை. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்த இந்த வாய்ப்பு, நாம் பெருமை கொள்ளத் தகுந்த செய்தி!

இந்த முயற்சியை முதன் முதலில் முன்வைத்தது பெரிய அமைப்புகளோ பெருந்தலைவர்களோ இல்லை. சில சாமானியக் குடிமக்களே. ஆனால் இதன் அருமையை உணர்ந்து தேசிய நூலக வாரியம், தேசிய மரபுடைமைக் கழகம், தேசிய கலைகள் மன்றம், தேசிய புத்தக மேம்பாட்டு மன்றம் ஆகிய நான்கு அரசு சார்ந்த நிறுவனங்கள் உடனடியாக முன்வந்து ஆதரவளித்துள்ளன. அதேபோன்று சம்பந்தப் பட்ட தமிழ் எழுத்தாளர்களில் ஒரு சிலரைத் தவிர மற்ற அத்தனை பேரும் தம் தமிழ் நூல்களை மின்மயமாக்குவதற்கு ஒப்புதல் தந்துள்ளனர். பல தமிழ் அமைப்புகளின் தலைவர்கள் இத்திட்டத்தின் பணிக்குழுவிற்கு ஆலோசகர்களாகச் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக சிங்கப்பூர் அமைச்சர் திரு ஈஸ்வரன் அவர்கள் திட்டத்தின் புரவலராக இருந்து வழி காட்டி வருகின்றார்.

மின்மயமாக்கப்பட்ட நூல்கள் நமது ஐம்பதாவது தேசிய தினத்தன்று (அடுத்த ஆண்டு) சிறப்பு அர்ப்பணிப்பாக அரசாங்கத்திடம் அளிக்கப்படவிருக்கின்றன.

இந்தச் செயல்பாட்டில் பங்கு கொள்ளும் அமைப்புகள், பொது மக்கள், ஆலோசனை வழங்கும் அறிஞர் பெருமக்கள்

அனைவரும் கடந்த ஆண்டிலிருந்து அடிக்கடி சந்திக்கின்றனர். அது தொடர்பான சட்ட, வேலை முறை தொடர்பான விவரங்களைக் கலந்தாலோசித்து, அதன் வளர்ச்சிக்கு வழி அமைத்து வருகின்றனர்.

இம் மாபெரும் பணிக்கு நம் செயல் திறன்மிக்க தமிழ் ஆர்வலர் திரு.அருண் மகிழ்நன் தலைமை தாங்குகிறார். மின்மரபுடைமை திட்டத்தின் அன்றாட நடைமுறை பிரச்சனைகள், நூற்றுக் கணக்கான நூல்களை இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரத் தக்க சட்ட வழிகளை நெறிப்படுத்துதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டிருக்கும் அருண் மகிழ்நன் அவர்களை, மேல் விவரங்கள் கூற வேண்டினோம். அவரும் இணங்கினார். இவை மகிழ்நன் மகிழ்வோடு தந்த விவரங்கள்:

## அருண் மகிழ்நன்:



"1965 லிருந்து 2015 வரையிலான, நூல்களை மின்பதிவு செய்ய அனுமதி வழங்கும் நூலாசிரியர்களின் சட்ட ரீதியான அனுமதியைப் பெறுவது தான் எங்களின் தலையாய பணியாக அமைந்தது. அதில் 95%க்கு மேற்பட்டவர்களின் அனுமதிக் கடிதங்களைப் பெற்றுவிட்டோம் என்பது மகிழ்ச்சி தரும் செய்தி.

ஒவ்வொரு நூலுக்கும் அதன் உட்பொருளை உணர்த்தும் சிறு குறிப்பு (annotation) ஒன்றை இடம் பெறச் செய்வது மிக மிகத் தேவை என முடிவு செய்திருந்தோம். அப்பணி கிட்டத்தட்ட 60 தொண்டூழியர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, 90% நூல்கள் அடுத்த நிலைக்குத் தயாராக உள்ளன. இதே நேரத்தில், அவ்வப்போது வந்து கொண்டிருக்கும் புதிய நூல்களுக்கான வேலையும் தொடரும்.

நூல்களை மின்மயமாக்கும் பணி நுண்ணிய தொழில்நுட்பத் திறன் மிக்கது. அதற்கான தகுதி படைத்தோரிடம் தான் இதை ஒப்படைக்க இயலும். இப் பணிகளை மேற்கொள்ள தேசிய நூலகம் இதற்கான ஒப்பந்தத்துக்கு (டெண்டருக்கு) அண்மையில் அழைப்பு விடுத்தது. அதன் முடிவுகள் சீக்கிரமே அறிவிக்கப்படும் என்று அறிகிறோம். அப்போது, இந்தப் பணி யாரிடம் ஒப்படைக்கப்படும் என்பது தெரியும். இது ஓர் ஆக்கரமான முன்னேற்றம் என்று நானும் எங்கள் குழுவினரும் கருதுகிறோம்.

இந்தத் தமிழ் மின்மரபுடமைத் திட்டம், பல கட்டங்களில், பல அணுகுமுறையுடன் செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது. இது உறுதியாக பலதுறையோர் இணைந்து, பல கோணங்களில் உழைத்து பலன் காண வேண்டிய திட்டம். அதனை வெற்றிகரமாகச் செயலாற்ற அரசு அமைப்புகளும், நம் அறிஞர்களும், எழுத்துத் துறையாளர்களும் மிகப் பெரிய உற்சாகத்துடனும், ஒற்றுமையுடனும் வேலை செய்வது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த ஒற்றுமையின் பலனை வருகிற ஐம்பதாவது தேசிய தினத்தன்று உணருவோம் என்பதை என்னைச் சார்ந்த அனைவரின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்மணிக்கு நல் வாழ்த்துகள்! "

## குழுக்கள்

புரவலர்
திரு எஸ் ஈஸ்வரன்
அமைச்சர், பிரதமர் அலுவலகம்
இரண்டாவது அமைச்சர், உள்துறை அமைச்சு
இரண்டாவது அமைச்சர், வர்த்தகம், தொழில்துறை அமைச்சு

பணிக்குழு

| | |
|---|---|
| திரு அருண் மகிழ்நன் | தலைமை ஒருங்கிணைப்பாளர் |
| முனைவர் சித்ரா சங்கரன் | துணை ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி மகாதேவி பாலசுந்தரம் | செயலகம் |
| திரு நாராயணன் ஆண்டியப்பன் | தொழில்நுட்பம் |
| திரு து அழகிய பாண்டியன் | விளம்பரம் |
| செல்வி க லதா | நூல் சேகரித்தல் |
| திரு மா அன்பழகன் | பதிவு ஒப்பு நோக்குதல் & குறிப்புரை வரைதல் |
| திரு வி ஆர் பி மாணிக்கம் | பதிவு ஒப்பு நோக்குதல் & குறிப்புரை வரைதல் |
| திரு ந சுப்ரமணியம் | பதிவு ஒப்பு நோக்குதல் & குறிப்புரை வரைதல் |
| முனைவர் சீதாலட்சுமி | பதிவு ஒப்பு நோக்குதல் & குறிப்புரை வரைதல் |
| திரு பொன் சுந்தரராசு | பதிவு ஒப்பு நோக்குதல் & குறிப்புரை வரைதல் |
| திரு அ கி வரதராசன் | பதிவு ஒப்பு நோக்குதல் & குறிப்புரை வரைதல் |
| திரு இராம வயிரவன் | பொருளாளர் |
| திருமதி ஷார்மினி செல்லப்பாண்டி | தேசிய நூலகத் தொடர்பு |

தொழில்நுட்ப ஆதரவுக் குழு

| | |
|---|---|
| திரு ஜீன் டான் | இயக்குநர், தேசிய நூலக வாரியம் |
| திருமதி ஜெனிஃபர் மின் | இயக்குநர், தேசிய மரபுடைமை வாரியம் |
| திரு கோர் கோக் வா | மூத்த இயக்குநர், தேசியக் கலைகள் மன்றம் |
| திரு ஆர் ராமச்சந்திரன் | நிர்வாக இயக்குநர், சிங்கப்பூர்த் தேசிய புத்தக மேம்பாட்டு மன்றம் |
| திரு முத்து நெடுமாறன் | தொழில்நுட்ப வல்லுநர் |

சமூக ஆதரவுக் குழு

| | |
|---|---|
| திரு நா ஆண்டியப்பன் | தலைவர், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் |
| திரு க து மு இக்பால் | கவிஞர் |
| திரு எம் இலியாஸ் | தலைவர், தமிழவேள் நற்பணி மன்றம் |
| டாக்டர் என் ஆர் கோவிந்தன் | தலைவர், மாதவி இலக்கிய மன்றம் |
| திரு கே சண்முகம் | தமிழ்த் துறைத் தலைவர், சிம் பல்கலைக்கழகம் |
| டாக்டர் டி சந்துரு | துணைத் தலைவர், தமிழ் மொழி கற்றல்வளர்ச்சிக் குழு |
| திரு ச சாமிக்கண்ணு | தலைவர், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம் |
| இணைப் பேராசிரியர் அ இரா சிவக்குமாரன் | தலைவர், தமிழ்த்துறை, தேசியக் கல்விக் கழகம் |
| இணைப் பேராசிரியர் சுப திண்ணப்பன் | இணைக்கல்வியாளர் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகம் |
| டாக்டர் ஆர் தேவேந்திரன் | தலைவர், தமிழர் பேரவை |
| திரு நசீர் கனி | தலைவர், சிங்கப்பூர்க் கடையநல்லூர் முஸ்லிம் லீக் |
| திரு ஆர் நடராசன் | தலைவர், தமிழ்ச் செய்தி, மீடியாகார்ப் |
| திரு ஏ.பி.ராமன் | எழுத்தாளர் |
| திரு கே ராமமூர்த்தி | தலைவர், நற்பணிப் பேரவை |
| திரு த ராஜசேகர் | முன்னாள் தலைமை நிர்வாக இயக்குநர், சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுக் கழகம் |
| திரு ஆர் ராஜாராம் | தலைவர், வளர்தமிழ் இயக்கம் |
| திரு ஜவஹரிலால் ராஜேந்திரன் | ஆசிரியர், தமிழ் முரசு |
| திரு த வேணுகோபால் | தலைவர், தமிழ் மொழிப் பகுதி, கல்வி அமைச்சு |
| திரு மு ஹரிகிருஷ்ணன் | தலைவர், தமிழ் மொழிப் பண்பாட்டுக் கழகம் |

# கவிதை



## எமது தாயகம்

சிங்கப்பூர் எமது தாயகம்!
தித்திக்கும் இனிய காவியம்!
திங்களும் ஞாயிறும் போலவே
சிந்தையை அள்ளிடும் ஓவியம்!
'லீ'யெனும் நாயகன் தோன்றினான்!
இலட்சிய விதிகளை ஊற்றினான்!
தூயவன் வியர்வைநீர் ஊற்றினான்!
துளிர்விட நெஞ்சுரம் ஊட்டினான்!
யாழென நரம்பினை மீட்டினான்!
நால்வகை இனத்தையும் கூட்டினான்!
தோழமைத் தேரினை ஓட்டினான்!
சோலையாய்ச் சிங்கையை
மாற்றினான்...

• **கவிஞரேறு அமலதாசன்**

## அரச நிலா

தென்கிழக்கு ஆசியாவில்
தோன்றியஅரும் அரசநிலா!
தன்னொளிசேர் நான்கினத்தில்
தாய்மொழியைக் காத்த நிலா!
உலகநிலைக்கு நமதுநாட்டை
உயர்த்தியவர் இந்தநிலா!
வானுரர்தி நிலையத்தை
வானுயர செய்தநிலா!
ஊழலற்ற ஆட்சிமன்றம்
உறுதிசெய்த அழகுநிலா!
ஏழைகளின் வாழ்வுதனை
ஏற்றிவைத்த எளியநிலா.....

• **பாத்தென்றல் முருகடியான்**

## இன்னொரு பெயர்

நீங்கள் இதுவரை
பதவியில் இருக்கவில்லை
எங்கள்
இதயங்களில் இருந்தீர்கள்
உங்கள் உடலைச் சுமந்தது
பிரதமர் நாற்காலி
நீங்களோ
எங்கள் பிரச்சனைகளைச் சுமந்தீர்கள்
உங்களால்
பதவியைத்தான் துறக்க முடியும்
எங்கள் மீது கொண்ட
அன்பை அல்ல
உங்கள் ஆட்சிக் காலத்தை அளக்கலாம்
ஆனால்
அதன் வெற்றிகளை அளக்க முடியாது
சிங்கப்பூரின்
இன்னொரு பெயர்
லீ குவான் யூ

• **க. து. மு. இக்பால்**

## வளரும் சிங்கப்பூர்

சீர்வளரும் சிங்கப்பூரில்
சிறப்பான இடங்களுண்டு
வேர்விட்டு வளர்கின்ற
விருட்சங்கள் நிறையஉண்டு
ஊர்விட்டு ஊர்வந்து
உழைக்கின்ற மக்களுண்டு
பேர்பெற்ற கலைஞரெல்லாம்
பெருமைசொல்ல வருவதுண்டு!
நீர்வளம் இல்லையென்பார்
நிலவளம் இல்லையென்பார்
கார்வளம் பொழிகின்ற
கருணையை மறந்துபோனார்
ஊர்வலம் நடத்தியிங்கே
உருப்படா முழக்கமிடும்
பேர்வழிகள் இல்லாநாடு
பெருமையன்றோ சிங்கைக்கு!
சட்டத்தின் ஆட்சியிங்கே
சரியாக நடக்கின்றது
திட்டங்கள் யாவுமிங்கே
தெளிவாய் முடிகின்றது
பட்டங்கள் பெற்றோரெல்லாம்
பாங்காக உழைக்கின்றார்
கட்டங்கட்ட மாய்நாம்
கச்சிதமாய் வளர்கின்றோம்.

சரித்திரங்கள் படைப்பதற்குச்
சாதனைகள் புரிந்திட்டோம்
தரித்திரத்தை மாற்றுதற்கு
தன்முனைப்பாய் உழைத்திட்டோம்
வரித்துவிட்ட கொள்கைகளால்
வெற்றிகளைக் குவிக்கின்றோம்
கரித்துண்டும் வைரமாகும் மக்கள்
கரம்பட்டால் சிங்கை மண்ணில்!

• **நா. ஆண்டியப்பன்**

# கவிதை

## நம் சிங்கப்பூர்

பூசணிக் காயளவு பூமியில்
ஊசிகுத்திய ஒருபுள்ளி அளவுதான்
சிங்கப்பூர் சிறுநாடு.

ஓதி பெருத்தும் ஒன்றுக்குமாகாத நாடுகளிருக்க
மிளகு சிறுத்தும் மணம் குறையாச்
சின்னஞ் சிறுநாடு சிங்கப்பூர்.

பல நாடுகளுக்கு முன்னோடி
சில நாடுகளுக்கு இணையாகச்
சிறந்து விளங்கி
அழகுற முன்னேறும்
சிங்கப்பூர் சின்னஞ்சிறு நாடு,

அகம் புறம் தூய்மையுடைத்து
அல்லும் பகலும் ஒளிபடைத்துச்
சட்டம் ஒழுங்கு கடைப்பிடித்து
வேற்றுமையில் ஒற்றுமை பார்த்துச்
சகலரும் சகலமும் பெற
விளையாத நாட்டுக்கு வரவழைத்து
உற்பத்தி நாட்டுக்கெல்லாம் சந்தையாகி
உள்ளோர் ஒவ்வொருவரும் உயர்ந்து வாழ
வழி வகுத்திட்ட
சிங்கப்பூர் சின்னஞ்சிறு நாடு

• **புதுமைத்தேனீ மா. அன்பழகன்**

## ஏற்றமிகு சிங்கை

கத்துகடல் சூழ்சிங்கை
கவினுலகில் கனிந்திலங்கும்
முத்துநிகர் நாடென்றே
முன்னணி விளங்குதேசம்
சித்தரித்து செப்புந்தாம்
சிங்கைக்கே அதுபெருமை!
எத்துத்தனம் ஏதுமில்லை
ஏற்றம்பெற ஏதுதடை?

தன்னாட்சி பெற்றிலங்கித்
தனியாட்சி சுதந்திரத்தைப்
பொன்னாட்சி மலேசியத்தில்
பொலிவுற்றே விளங்கியபின்
முன்னாட்சித் தன்மையதும்
முகிழ்த்துவிடா திருந்திடவே
மன்னாட்சிக் குடியரசும்
மலர்ந்திங்கே பொலிந்ததம்மா!

• **மு. தங்கராசன்**

## சிங்கப்பூர் வெள்ளித்தட்டு

பசுமைக் காடாகப்
பார்க்கவொரு நாடாகக்
குளுமையைக் கூடுகட்டிக்
கூட்டுக்குள் வாழ்கின்றோம்
வாழ்கின்றோம் என்றாலும்
வரலாறு படைக்கின்றோம்
ஆழ்கடலின் அமைதியைத்தான்
அன்றாடம் காண்கின்றோம்
காணும் திசையெங்கும்
காட்டும் முகவெட்டு
கடலுக்குள் திட்டாகக்
கண்டெடுத்த வெள்ளித்தட்டு
வெள்ளிதான் இங்கே
விளையவில்லை யென்றாலும்
வெள்ளி வெள்ளியாய்
விளங்குகிற பொன்னாடு

• **பிச்சினிக்காடு இளங்கோ**

## எனை வளர்த்த சிங்கை

பெருமைநான் கொள்கின்றேனே - தோழா
பெருமைநான் கொள்கின் றேனே
பிறக்காத போதும் பிள்ளைப் பருவமுதல்
சிறப்பாக எனைவளர்த்த சிங்கை என் நாடென்று.

விரிமண் ணுலகினிலே சிறுபுள்ளி யானாலும்
வெல்புகழ் கண்டதிரு - நாடுபல்லினம்
சரிசம மாகவே எப் பகையுணர்வு மின்றி நலம்
சார்ந்துமே வாழுமுற வோடு.

நீரோ கனிமரங்கள் நெல்விளையும் வயற்காடோ
நெல்லிக்கா யளவிலுந்தா னேது - இங்கே
பாரோர் செயுந் தொழிலின் பங்களிப்பும் பாட்டாளி
உழைப்புமே உயர்வாச்சென் றோது!

• **பாத்தேறல் இளமாறன்**

## தன்னிகர் இல்லாத் தலைவர்

தன்னிகர் ஒருவர் இல்லாத் தலைவரெம் லீயால் சிங்கை
முன்னிலை கண்ட தென்று மொழிவது முற்றும் உண்மை.
பின்னடை வென்ப தின்றி பெருமையிந் நாடு காண
அன்னவர் புரிந்த சேவை அளந்திடல் இயலா தம்மா!
இத்தனை சிறிய நாடு இமயமாய் உயர்ந்து நிற்க
எத்தனை திட்டம் தீட்டி இவர்நிறை வேற்றி வைத்தார்!
அத்தனை சிறப்பும் பெற்று, அமைதிநற் பூங்கா வென்னும்
முத்திரை தன்னை மேலும் முறையிலே செதுக்கி வைத்தார்.
சிங்கையர் நாங்கள் என்று செப்பிடும் போதே உள்ளில்
பொங்கிடும் பெருமை தன்னைப் பிழையற வீயே தந்தார்.
எங்கணும் காண ஒண்ணா ஈடில்லாத் தலைவர்க் கென்றும்
அங்கையைக் கூப்பிச் சொல்வோம் ஆயிரங் கோடி நன்றி.

• **வரதராசன் அ.கி.**

## எதிலும் வெற்றி

நிலவளமோ நீர்வளமோ இல்லாச் சிங்கை
நிலம்பெற்ற வெற்றிகளைக் கண்டு கண்டு
உலகத்தார் விழியெல்லாம் இந்த மண்ணின்
உயர்வெண்ணி நாள்தோறும் வியந்து நோக்கும்

தொழிலாளி முதலாளி பாகுபாடு
துளிக்கூட சட்டத்தில் இடமே இல்லை
விழியோரம் துளிர்க்கின்ற கண்ணீர் கூட
விழுந்திட்ட தூரசால்தான் துயரால் இல்லை

விண்முட்டும் கட்டடங்கள் எங்கும் உண்டு
வியர்வைக்கும் பசுஞ்சோலைச் சூழல் உண்டு
கண்ணெட்டும் தொலைவுவரை காணுகின்ற
கட்டடத்தின் காட்சிதனை என்ன சொல்ல!

பலகற்றும் கர்வத்தை மட்டும் கற்கா
பண்பாட்டில் பழகிவிட்ட நான்கி னத்துள்
நிலவுகிற ஒற்றுமையைக் கண்டு வையம்
நிதம்கற்கும் சமத்துவத்தின் பால பாடம்.

• **ந.வீ. சத்தியமூர்த்தி**

## சிங்கை மகள் வாழ்க!

கத்துகடல் சூழ்தீவு சிங்கை
கட்டடங்கள் உயர்வழகு மங்கை
அற்புதங்கள் நிகழ்த்துகின்ற வளர்ச்சி
அழகுதமிழ் ஆட்சிமொழிக் கிளர்ச்சி

எத்திக்கும் பசுமைநிறைக் காட்சி
யாவர்க்கும் சுறுசுறுப்பே மாட்சி
கரைபடியா அரசுதருங் கல்விக்
கண்பெற்றால் ஒளிபெறலாம் வாழ்வில்

மறைநான்கின் தத்துவம் உணர்ந்த
மாமேதை பலர்நிறை நாடு
பல்லினமாய் மக்களவர் வாழ்க்கை
பகுத்தறிவால் ஒன்றிணைந்த மேன்மை

உலகத்துப் பந்திலோர் புள்ளி
உலகோரே புகழ்வர்பேர் சொல்லி
இல்லாமை பொய்யாக்கும் உழைப்பு
இன்பமே எப்போதும் சிறப்பு.

• **இரத்தின வேங்கடேசன்**

## அஜந்தா ஓவியம்

வருடம் ஒன்று போனால்
வயதொன்றும் போகுமென்ற
உடலியல் உண்மையைப் பொய்யாக்கிய
என் புண்ணிய சிங்கைத்தாயே!

தாவணிப் பருவத்தில் என் சக தோழமைகளோடு
எஸ்பிளேனேட் திடலில்
இதயம் மகிழக் கொண்டாடிய உன்
பிறந்த நாள் நினைவுகள் இன்றும்
பிம்பமாய் மனத்திரையில்

காதோரம் தொடங்கிக்
கருமுடி எங்கும் படையெடுத்த வெண்முடிகளால்
என் இளமை மட்டும் கால ஓட்டத்தில்
காய்ந்து உலர்ந்திருக்க நீ மட்டும் எப்படி
நிறம் மாறாத பூப்போலவே

அடிப்படை வளங்களின்றி
அடைந்த சுதந்திரத்தால்
துடிப்பிழந்து போகவில்லை என்னைத்
தாங்கிப்பிடித்த எம் தலைவர்கள்

• **திருமதி நூர்ஜஹான் சுலைமான்**

# கவிதை

## அடுக்கடுகாய்ச் சாதனைகள்

முடுக்கிவிட்டுப் பொருளியலை உயரச் செய்ய
முப்போதும் சிந்திக்கும் தலைமை யாலே
அடுக்கடுக்காய்ச் சாதனைகள் தொடர்ந்த போதும்
அடுத்துமொரு சாதனைக்காய்த் திட்டம் தீட்டி
மிடுக்காக ஆசியாவின் தலைமை நாடாய்
மின்னுகிற சிங்கப்பூர் பெற்ற வெற்றி
நடுக்காட்டில் நீர்ச்சுனைபோல் அல்ல; பாலை
நடுவினிலே அருவிவந்த அதிச யந்தான்.
வெறுந்தரையில் நெல்விளைச்சல் கண்ட துண்டோ?
விறகுகளில் பூமலரக் கேட்ட துண்டோ?
நறுமணத்தை நிலக்கரியில் நுகர்ந்த வர்யார் ?
நடுவானில் தாமரைதான் பூத்த துண்டோ?
வெறுந்தரையும் மீன்வலையும் கடலும் காடும்
விடுதலையில் சொத்தாகக் கிடைத்தும் கூட
இறுமாந்து போகவல்ல முன்னேற் றத்தை
இந்நிலம்போல் பெற்றநாடு எங்கே உண்டு

• **ந. வீ. விசயபாரதி**

## நான் சிங்கப்பூர்

உழைப்பின் உப்பும்
ஒற்றுமை சிரிப்பும்
கலந்ததென் சுவாசம்

வளங்கள்
எனக்கு வரமாகவில்லை
கை விரல்களால்
எழுப்பிக்கொண்டேன்
என்னையே...

நான்
உயர்ந்தபோதெல்லாம்
எனக்குள்
உரமாயிருந்தவை
வேற்றுமையில்லா
எம் கூட்டுச் சமூகமே!

• **நெப்போலியன்**

## சிங்கை எனும் மங்கை

தென்னக பாரதி சிந்தையி லுதித்த
புன்னகை பொதிந்த புதுமைமகள் யாரவள்?
நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்
புரிந்து நடக்கும் புதுமகள் யாரவள்?

உலகம் முழுவதும் உயர்ந்து விளங்கிடும்
உன்னத மண்மகள் ஒருத்தி யாரவள்?
மண்ணில் எங்கும் மாற்றே இல்லா
சிங்கைப் பெண்ணவள்! நம் சிந்தை நிறைபவள்!

சிங்கை மக்களின் தேசியப் பற்றால்
அன்னை சிங்கையின் அடிமை மறைந்தது...
அத்தனை துன்பமும் அடங்கி ஒடுங்கின
வந்தது சுதந்திரம்! வானம் வசப்பட!

• **வீர விஜயபாரதி**

## சிங்கை மகள்

தென்பாண்டி நெடுஞ்செழியன் நெஞ்சுநடு நடுங்க
திருமகளாம் கண்ணகியும் சிலம்பெடுத்தே உடைக்க
தென்சீனக் கடலுக்கே தெரித்துவந்த மணியோ
தேரழகுச் சிங்கைமகள்? மாசறுபொன் அணியோ?
பெண்முகத்தில் இட்டவட்டப் பொட்டளவுச் சிங்கை
பேரழகுப் பெண்ணாகிப் புவிமயக்கும் மங்கை
விண்ணளந்தார் சாண்கயிற்றில் வினைவேந்தர் லீயே;
விளக்குமுயர் வளர்ச்சிக்கு வித்திட்ட தாயே...!

மொழியாலும் இனத்தாலும் மதத்தாலும் வேறாய்
முக்கிளைப்போல் இருந்தாலும் அடிமரத்து வேராய்
அழியாமல் இருந்திடுமே அன்பென்ற உணர்வே
அதனால் இந்நாட்டார் ஓரினமாய் உணர்ந்தே
பொழிகின்ற மகிழ்ச்சிமழை பொங்கிவரும் செல்வம்
புனலெனவே முன்னேறச் சமுதாயம் செய்தே
வழிநடப்போம்: சமத்துவத்தைச் சட்டத்தைப் பேணி
வாழ்வோமென்(று) உறுதிமொழி வரைந்தார்தமிழ் ஞானி!

• **இறை மதியழகன்**

கவிதை

## கை கூடிய கனவுகள்

சில்லென்று ஒரு ஈரம்
படர்ந்தது நெஞ்சில்
விசா வந்து விட்ட சேதி கேட்டு

அலைந்தது மனம் ஆயிரம்
கனவுகளைச் சுமந்து
டிக்கெட் வாங்குமுன்னே சிங்கப்பூர்
சென்று சென்று வந்தது

வத்தலும் ஊறுகாயும்
வாஞ்சையோடு கட்டி
பட்டமிடும்போது வட்டமிட்டுப் பறந்த
விமானத்தின் மடிகளில் இப்போது

குளிரின் நடுவில்
வண்ண வண்ணச்
சேலையில் மயில்கள்
அங்குமிங்கும் நடமாடி

புடம் போட்ட புன்னகையில்
உபசரித்தன சொர்க்க வாசல் ஏகாதசி
அன்று மட்டுமா திறக்கும்? வாழும்
சிங்கையே நீ வாழ்க பல்லாண்டு

• இன்பா

## சிங்கைத் தாய்

இயலாமை என்னும் சொல்லை இகழ்ந்தாய்
முயலாமை என்னும் சொல்லை ஒழித்தாய்
நம்பிக்கை என்னும் சொல்லை
மட்டும் விதைத்தாய்!

உழைத்தாய். களைத்தாய்
களைத்தாய். உழைத்தாய்
போராட்டம் வேண்டாமெனப்
புத்திரர்களைப் பணித்தாய்
உலகில் உயரிய இடத்தினைப் பிடித்தாய்
உலகே உன்னைக் கண்டு
வியந்தது களித்தாய்!
உயர்ந்திட உழைப்பே சிறந்தது
என்பதை கணித்தாய். தொடர்ந்தாய்...

அயல் தேசத்தாயின்
மக்களையும் உனை
நோக்கி அழைத்தாய்
அவர்களில் ஒருவனாய்
என்னையும் உன்னில்
நன்றியுடன் சொல்வேன்
நீயும் என் தாய்

• கோ. கண்ணன்

## வாழிய சிங்கப்பூர்...

உலகப் பெரும்புள்ளிகள்
உற்றுநோக்கும் வைரப்புள்ளி
உள்ளம் நினைத்தாலே
குதூகலமாய் குதித்தாடும் துள்ளி

காசுபணம் காணுமிடமெல்லாம்
பொங்கு தமிழ்
தமிழ்த்தாயின் மங்களம்
காப்பதில் குங்குமச் சிமிழ்.

வசந்தம், ஒலி வழியே மொழி
வளர்க்கும் காற்று
வண்ணமிகு வாழ்க்கையை
மொத்தமாகத் தருவதில் ஊற்று

அறுபத்து மூன்று தீவுப்பூக்கள்
ஒன்றிணைத்த மாலையிது
கடலை நிலமாக்கி, நிலத்தை
வளமாக்கும் சோலையிது

கச்சிதமாய் பொருளாதாரத்தை
நிலைப்படுத்தும் வல்லவர்கள்
பணிவண்பை, புரிந்துணர்வை
பலப்படுத்தும் நல்லவர்கள்

• தியாக. ரமேஷ்.

## உழைப்பின் சிகரம்

இயற்கைச் செல்வங்களாய்
எதுவுமே தரவில்லை
எங்கேயும் படையெடுத்து
வளம்சுரண்டி வரவில்லை...

தண்ணீர் கிடைப்பது
தகராறு ஆனபோதும்
பொன்னியும் தாறுமாறாய்
விலையேறிப் போனபோதும்,
பொருளியலில்
வளர்பிறையாய்
மின்னுகிறாய் இன்றும் நீ...

சோதனை சலசலப்புக்குச்
சோர்ந்து
புலம்புவதில்லை...
சூறாவளிகளுக்குக் கூட
வீழ்ந்து போவதில்லை...

எதையும் எதிர்கொள்ளும்
துணிவின் சின்னம்
வியர்வையால் விளைந்த
உழைப்பின் சிகரம் நம்
சிங்கை நகரம்

• பனசை நடராசன்

## சிங்கைப் பெண்ணே என் கேள்விக்கு என்ன பதில்

என் கேள்விகள்...

உருவிலும் சிறப்பிலும் நீ
ஒத்திட்டாய் குறளைப் போல்
திருவிலும் திறத்திலும் நீ
தொட்டது சிகரம் தானே?
உன்னிடம் வளங்கள் இன்றி
உயர்ந்ததன் மர்மம் என்ன
மேருபோல் அரண்கள் இல்லை
ஆறுகளும் ஓடவில்லை
எண்ணெய் வளம் ஏதுமில்லை
புன்செய்நிலம் கூட இல்லை
தாழ்வுஇலாச் செல்வம் பெற்றே
தழைத்தது என்ன பெண்ணே?

அவள் பதில்...

மதியுரைத் தலைகளாலே
மலர்ந்ததென் வெற்றி என்பேன்
மனித வளத்திலே சிறந்ததேன் ஐயா
மக்களே வைரம் ஐயா
தொலைநோக்கும் பார்வை உண்டு
தொடர் முன்னேற்றம் எதிலும் உண்டு
உழைப்புநீர் வேர்வை யாக
ஓடுது ஆறாய் இங்கே!
ஒற்றுமையும் கட்டுப்பாடும்
ஓங்கியது அரணாய் இங்கே
வேகமாய் உழைப்பதில்
இவரை விஞ்சிட எவரும் இல்லை!

• **இராம வயிரவன்**

## வண்ண வண்ண விளக்குகள்

வண்ண வண்ண விளக்குகளோ ஒளியைக் கக்கும்
வான்வெளுக்கும் வரையினிலே வெளிச்சம் காட்டும்
வெண்ணிலவும் விளக்கொளியைப் பார்த்துப் பார்த்தே
வெற்றிகொள்ள முடியாமல் வெட்கிப் போகும்
மின்மினிகள் போல்மின்னும் வெளிச்சம் தன்னை
மேலிருந்து கீழ்காணின் இரவு வானில்
கண்ணிமைக்கும் விண்மீன்கள் போல நம்முன்
காட்சிதரும் பொன்னுலகம் சிங்கப் பூரே!

• **கி கோவிந்தராசு**

## அற்புத தேசம்

இது எங்கள்
'ஆர்க்கிட்' தேசம்

மரபும் நவீனமும்
பழமையும் புதுமையும்
சித்திரமாய் வடித்த
'மெர்லையான்' கவிதை

காந்தியின் அகிம்சையும்
ஐன்ஸ்டீனின் அறிவியலும்
குழைத்துச் செய்த
'டிஜிட்டல்' புத்துலகம்

கங்கையின் புனிதமும்
தேம்ஸின் நாகரிகமும்
இணைந்து படைத்த
அமைதி தேசம்

மதங்களும் மொழிகளும்
இனங்களும் இதயங்களும்
கலைகளும் கலாச்சாரங்களும்
ஒன்றாய் இசைக்கும்
அகிம்சை கீதம்

• **சத்தி கண்ணன்.**

## விழா நாடு

எங்கு காணினும் விழாக்கோலம்
என்றும் இன்புறும் விழாக் காலம்
தங்கு தடையிலா உழைப்பாலே சிங்கை
எதிலுமே விழாக்கோலம்

திங்கள் நவம்பர் தீபவிழா
எங்கும் இந்தியர் இயற்றும் விழா
தொங்கும் ஒளிமழைத் தோரணங்கள்
தங்கம் மின்னிட ஆரணங்கு

மாதம் டிசம்பர் கிறிஸ்துமாசம்
மக்கள் அனைவரும் இறைவணங்க
பேதம் போக்கிடும் பெருநாளாம்
பெரியவர் தம்முடை ஆசிபெற
நாதம் முழங்கிட ஒளிவெள்ளம்
நாலா பக்கமும் ஜொலிக்குமடா
வேதம் கூறிடும் வழிமுறையில்
விழாக்கள் நடக்கும் அழகுறவே

• **காசாங்காடு அமிர்தலிங்கம்**

# கவிதை

## தலைமைப் பண்பு

வசித்திருப் போரெல்லாம் வாழ்ந்திருப் போர்,ஆமா ?
பசித்திருந் தால்மக்கள் பண்பிருப்[பு] என்னாமோ ?
நசித்திருந் தேஒழிந்து நாணடைய போம்நாளில்
விசித்திரச் சிந்தனையான் விழிதிறந் தெழுந்தனனே!
குறைகளைக் களைபவனே குடிமைக்குத் தலையாவான்
இறைவனும் ஆவான் முன் னேற்றமும் வழிதேடி
முறைசெயும் மன்னனின் முற்றத்தில் நிலைகொள்ளும்
மறைகளின் தீர்ப்பாகும், மக்களும் சூழுவரே!
பேரினம் இடையினமும் பிணைந்தநம் சிற்றினத்தும்
யாரினம் பெரிதெனநம் அன்பிணைப்பை ஊடறுக்கும்
போரினம் நம்மிடையே புகமுடி யாததனால்
சீரினம் எனும்வடிவம் சிங்கையர் தோற்றமதே....

• கோ. அருண்முல்லை

## இனமது சருகாகும்

விழிகள் தொலைத்தால் பகலது இருளாகும் உன்
மொழியைத் தொலைத்தால் இனமது சருகாகும்
விழியும் மொழியும் ஒன்றெனக் கற்போம் தமிழை
வீழாது காக்க உணர்வுடன் நிற்போம்

• சி. கருணாகரசு

## அகிலம் அறிந்த அரிமா

ஆழ்கடல் நடுவே
ஆளுகிற தேசம்
ஐவகை மன்றத்தின்
செய்முறை சுவசம்!
நிறங்களை ஏற்றாத
நிதர்சன வாசம்
நீதிமட்டுமே இங்கே வீசும்!

உடலின் கீறலுக்கும்
உரிமை மீறலுக்கும்
உடன்படாத தேசம்! இது
கண்களைக் கவரும்
காந்த தேசம்!

அன்னைத் தமிழுக்கு
ஆட்சிமொழி சிம்மாசனம்
வறுமையும் வஞ்சமும்
வாழாத தேசம்!
விளைநிலம் ஏதுமின்றி
வேர்வையால் கொண்டது கவசம்!

• நவநீதம் ரமேஷ்

## வெடியிலும் பூப்பூக்கும் விழா

ஆறுகள் இல்லை என்று நாங்கள்
அழுததில்லை
ஏரி இல்லை என்றும் நாங்கள்
ஏங்கவில்லை
வயலுக்கும் வரப்பிற்கும் நாங்கள்
வருத்தப்பட வில்லை

சொட்டும் வியர்வையில்
சூரியனைக் கட்டிப்போடும்
எங்களுக்கு
ஆறுகுளங்கள் எதற்காக?

புரிதல் என்ற உணர்ச்சியில்
சீன, மலாய் இந்தியர் என்ற
இரத்த நாளங்களைச் சிங்கை என்ற
இதயத்தில் இணைந்த எங்களுக்கு
வரப்புச் சண்டைகள் எதற்காக?

• பா. திருமுருகன்

## பெரும்புள்ளி நீ

சிங்கை மகள் சிரிக்கிறாள்
சிந்தனையை விதைக்கிறாள்
எங்கும் பச்சை புல்வெளியால்
என் மனசை கவர்கிறாள்..

வானுயர்ந்த கட்டிடங்கள்
வண்ணமிகும் மலர்த்தோட்டம்
சீர்மிகுந்த சிங்கையிலே
செந்தோசா தனிச்சிறப்பு..

மண்டாயில் விலங்குத்தோட்டம்
மனதுக்கு இதமாக்கும்
வந்தாரை வாழ வைக்கும்
வளம் நிறைந்த சிங்கப்பூர்..

உலகத்தில் சிறுபுள்ளி
நீயாக இருந்தாலும்
வளமென்று வந்துவிட்டால்
பெரும்புள்ளி நீயன்றோ!

• முத்துப்பேட்டை மாறன்



# நான்கு 'ரா'க்கள்!

*'ரா' எனத் தொடங்கும் நால்வரின் படம் இது. இந்தப் படத்திற்கு கிட்டத்தட்ட 34 வயதாகிறது!*

இந்த நால்வர்: ராஜேஸ்வரி கோபால், ராஜசேகர், ராஜாராம், ராமமூர்த்தி. ராபிள்ஸ் பள்ளியின் சார்பில் அன்றைய சொற்போர் அனைத்துப் பள்ளிப் போட்டியில் முதல் தகுதியைப் பெற்ற இவர்கள், தங்களின் வெற்றிக் கோப்பையுடன் பள்ளிப் பருவத் துடிப்போடு காணப்படுகின்றனர். இன்றும் தமிழ் சார்ந்த பணிகளில் தீவிர ஈடுபாடு காட்டி, சமுதாயத் தொண்டுகளில் தங்களை இணைத்துக் கொண்டுள்ள இவர்களில் ராஜசேகர், ராஜாராம், ராமமூர்த்தி மூவரும் நமக்கு இன்று நன்கு அறிமுகமானவர்கள்.

படத்தில் வரிசையில் முதலாவதாகக் காட்சி தரும் ராஜேஸ்வரி, சிண்டாவின் ட்யுஷன் வகுப்புகளில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக பாடங்கள் போதித்து, பின்தங்கிய மாணவர்களின் நலனில் அக்கறை காட்டி வருபவர். இன்றும் அப்பணி தொடர்கிறது.

சிண்டா கண்ட தொண்டர் - ராஜசேகர்

திரு ராஜசேகர், சிண்டா எனும் சிங்கப்பூர் இந்திய மேம்பாட்டுக் கழகத்தின் தலைமை நிர்வாகியாக சிறந்த முறையில் பணியாற்றி அண்மையில் வேறு பணிக்கு மாற்றிக் கொண்டிருப்பவர்.

2009ம் ஆண்டில் உலகெங்கும் நிகழ்ந்த பொருளாதாரச் சீரழிவு, சிங்கப்பூரையும் வெகுவாகப் பாதித்தது. பலர் வேலை இழந்தனர். குடும்பச் சுமை காரணமாக பல அல்லல்களை மக்கள் சுமக்க நேரிட்டது. பொருளாதார நெருக்கடி காரணமாக பிள்ளைகளின் படிப்பு பாதிக்கும் நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில், பாதிக்கப்பட்டவர்களின் பொருளாதார, கல்வி, வேலை வாய்ப்பு, மற்ற குடும்பம் சார்ந்த பிரச்னைகளை சிண்டா துணிந்து ஏற்றது. அந்த நேரத்தில் சிண்டாவில் தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்றவர் திரு.டி..ராஜசேகர். கிடைக்கும் அரசாங்க உதவிகளை மக்களுக்கு அளித்து முறையாகப் பயன்படுத்துவது, பாதிக்கப்பட்ட இந்திய சமூகத்திற்கு இவற்றை உணர்த்துவது போன்ற சிண்டாவின் திட்டங்கள் நிறைவேற ராஜசேகர் கடுமையாக உழைத்தார். தன் பணி காலத்தில் உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு ஆதரவு தருவது, கல்வி அமைச்சு, சமூக மேம்பாட்டு அமைச்சு, இளையர்-விளையாட்டுத் துறைகள், சமூக சேவைகளுக்கான தேசிய மன்றம், சிங்கப்பூர் வர்த்தக சபை, சிங்கப்பூர் இந்திய கல்வி டிரஸ்ட், நற்பணி பேரவை போன்ற அமைப்புகளுடன் நெருங்கிய உறவை வளர்த்து இணைந்து செயல்படும் வழி முறைகளைக் காண்பது போன்ற திட்டங்களில் தன்னை பெரிதும் ஈடுபடுத்திக் கொண்டவர் ராஜசேகர். ஸ்டெப்ஸ் எனப்படும் பாட போதனை வகுப்புகளின் கூடுதலான செயல்பாட்டிற்கு உதவிய இவர், சிண்டாவுடன் பொது மக்களை இணைக்கும் முயற்சியிலும் கவனம் காட்டியதை உணர முடிகிறது. தான் சார்ந்த அமைப்பிற்கு நிதி சேர்க்கும் முயற்சியிலும் அயராது பாடுபட்டார். ராஜசேகர் எங்கிருந்தாலும், தமிழ் சமுதாய உணர்ச்சி கொண்டவர் என்பது யாவரும் அறிந்தது.

வளர் தமிழ் இயக்கம் - ராஜாராம்

தமிழ் மொழி வளர ஊக்க மூட்டும் சிங்கப்பூரின் அரசு, ஆண்டுதோறும் தமிழ் மொழி விழா நிகழ்ச்சியை நாடெங்கும் ஏப்ரல் மாதத்தில் நடைபெற வழி வகுத்துள்ளது நாம் பெருமை படக் தகுந்த ஒன்றாகும். சிங்கப்பூரின் 35க்கு மேற்பட்ட அமைப்புகள் ஒன்று சேர்ந்து, ஆனால் தனித் தனியாக மாதம் முழுவதும் தமிழ் இலக்கிய, கலை, கலாச்சார நிகழ்ச்சிகளைப் படைப்பது வேறு எந்த நாட்டிலும் நடக்காத ஒன்று..வெற்றிகரமாக நடைபெறும் தமிழ் மொழி மாத நிகழ்சிசிகள், ஆண்டுக்கு ஆண்டு வலுப் பெற்று வருவதுடன், "தமிழில் பேசுவோம் - தமிழை நேசிப்போம்" என்ற தாரக மந்திரத்தை மக்களிடையே ஆழப் பதிய வைத்து வருகிறது.

பல அமைப்புகளை ஒன்று திரட்டுவதோ, அவற்றைக் கொண்டு ஆங்காங்கே நிகழ்ச்சிகளை மேடை ஏற்றுவதோ சுலபமான பணி அல்ல. இதனை வெற்றிகரமாக ஒருவர் இங்கே செய்கிறார். அவர் வேறு யாருமல்ல - திரு.ஆர். ராஜாராம். (தொடர்ச்சி: 40ம் பக்கம் )

# பேச்சாளர் மன்றங்கள்



தமிழ்மொழி பண்பாட்டுக் கழகப் பேச்சாளர் மன்ற செயலவை பதவியேற்பு

இன்றைய உலகில் நல்லது பேசுவது எவ்வளவு முக்கியமோ நன்றாகப் பேசுவதும் அவ்வளவு இன்றியமையாதது. ஒருவர் தன் தாய் மொழியில் நன்றாகப் பேசுவதற்கும் தலைமைத்துவப் பண்பினை வளர்த்துக் கொள்வதற்கும் 'டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல்' என்ற அமைப்பினை 1928ஆம் ஆண்டில் அமெரிக்காவில் திரு ஸ்மட்லி தொடங்கினார். இதற்கான பாடத்திட்டத்தை வடிவமைத்து இந்த அமைப்பின் மூலம் பல பேச்சாளர் மன்றங்கள் உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. வெற்றிகரமாக செயல்படும் இந்த அமைப்பின் கொள்கைகளை பின் தொடர்ந்து சிங்கப்பூரில் 8 தமிழ்ப் பேச்சாளர் மன்றங்கள் செயல் படுகின்றன.

இந்த 8 மன்றங்கள் இரண்டு வட்டாரமாக செயல் படுகின்றன. தமிழ்மொழி பண்பாட்டுக் கழகப் பேச்சாளர் மன்றம் உள்பட A6 வட்டாரத்தில் 5 மன்றங்கள் செயல்படுகின்றன. தமிழர்களைத் தமிழில் பேச ஊக்குவிக்கும் முக்கிய நோக்கம் கொண்டு செயல்படும் இம்மன்றங்கள் தமிழ் இளைஞர்களிடம் தலைமைத்துவப் பண்பினை வளர்க்க முனைப்போடு செயல்பட்டு வருகின்றன. மாதம் தோறும் நடக்கும் கூட்டத்தில் டோஸ்ட்மாஸ்டர்ஸ் அமைப்பின் பாடத்திட்டத்தில் கூறப்பட்டிருக்கும் விதிமுறைகளின் படி, பல மன்ற உறுப்பினர்கள் பேசுவார்கள். தலைப்பினையும் அவர்களே தேர்ந்தெடுப்பர். இது தயாரிக்கப்பட்ட பேச்சு அங்கம். இவர்களின் திட்டம் அல்லது பேச்சு , நோக்கத்தின் அடிப்படையில் அமைந்ததா இல்லையா என்றும், குறிப்பாக நேரத்திற்குள் எப்படி பேசினார்கள் என்றும் தேர்ந்த பேச்சாளர்கள், மதிப்பீடு செய்வார்கள். இந்த இரண்டு அங்கத்தின் மூலமாகவும் பேச்சாளருக்கு தன் பேச்சினை மேலும் மேம்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பாக அமைவதோடு மதிப்பீடு செய்பவருக்கும் புதுப் புது கருத்தினை கேட்க நல்ல வாய்ப்பாக அமையும்.

இந்த மாதக்கூட்டத்தில் மற்றுமொரு முக்கிய அங்கம், கூட்டத்தை நெறிப்படுத்துவது. தகுந்த பயிற்சியின் மூலம் ஒரு நிகழ்ச்சியை நல்ல முறையில் நெறிப்படுத்த ஒருவரை தயார் செய்துகொள்ள முடியும். அதோடு இல்லாமல் எதிர்பாராத சூழ்நிலையில், எந்த ஒரு தலைப்பிலும் பேசுவதற்கான பயிற்சியும் வழங்கப்படுகிறது. ஒருவர் பேசும் முன்பாகவே அவரின் அங்க அசைவு, கண் பார்வை செல்லுமிடம், போன்ற குறியீடுகள் மூலமாக மக்கள் அவர் என்ன பேச வருகிறார் என்பதனை ஊகித்து விட முடியும் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அப்படி தன் எண்ணத்தின் மூலமாகவும், சொற்கள் மூலமாகவும், அங்க அசைவின் மூலமாகவும் தன்னம்பிக்கையோடு பேச உங்களை இது போன்ற அங்கங்கள் தயார் செய்துகொள்ள உதவுகிறது.

வந்தோம் பேசினோம், மதிப்பீட்டினை கேட்டோம் என்றில்லாமல், ஒரு கூட்டம் எப்படி நடக்க வேண்டும், அந்தக் கூட்டத்தில் பேசியவர்களின் மொழி பயன்பாடு எப்படி இருந்தது என்றும் வல்லுனர்களால் மதிப்பீடு வழங்கப்படும். இறுதியாக அன்றைய கூட்டத்தின் சிறந்த பேச்சாளர்களையும் மதிப்பீட்டாளர்களையும், வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுத்து பரிசினை வழங்குவார்கள். இந்த மன்றத்தின் மூலம் புது கருத்துகள் தெரிந்து கொள்வதோடு மட்டுமல்லாது புது நண்பர்களையும் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.




*தமிழ்மொழி பண்பாட்டுக் கழகப் பேச்சாளர் மன்றத்தின் சீன உறுப்பினர் - திரு. சை தூன்*

உங்கள் அடுத்த தமிழ்ப் பேச்சினையோ, அறிக்கையையோ, கதையினையோ சபையில் தன்னம்பிக்கையோடு நேர்த்தியாக படைக்க இந்த மன்றங்கள் உதவும். ஒவ்வொரு மன்றக் கூட்டமும் மாதமொரு முறை வெவ்வேறு இடங்களில் நடக்கின்றன. இந்த மன்றக் கூட்டத்தில் நீங்கள் வந்து கலந்துகொள்ள அனுமதி இலவசம். தமிழால் ஒன்று கூடும் 5 பேச்சாளர் மன்றங்களில்

எதில் உறுப்பினராக சேர வேண்டுமென்றாலும், சேர்வதற்கு ஒரே தகுதி உங்களுக்கு 18 வயதிற்கு மேல் இருக்க வேண்டும். ஆண்டு சந்தா மற்றும் மேல் விவரங்களுக்கு 9693 4263 என்ற எண்ணை அழைக்கவும்.

பேச்சாற்றலை வளர்த்து, மக்கள் முன்னிலையில் நம்பிக்கையுடன், தங்கள் கருத்துக்களை வெளியிட ஊக்கம் அளிப்பதே இந்த அமைப்பின் நோக்கம். உலக மொழிகள் அனைத்திலும் இந்த பணி ஆங்காங்கே நடந்து வருகின்றது.



**எஸ். இராம்குமார்,**
A6. வட்டார ஆளுநர்,
email: reachramkumar@gmail.com



தமிழ்மொழி பண்பாட்டுக் கழகப் பேச்சாளர் மன்ற செயலவை பதவியேற்பு



சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் சங்கப் பேச்சாளர் மன்ற செயலவை பதவியேற்பு



புகிட்பஞ்சாங் தமிழ் பேச்சாளர் மன்ற பதவியேற்பு



வட்டார நகைச்சுவை மற்றும் உரை மதிப்பீடு போட்டி 2013, ஆசிய அரும்பொருளக காட்சியகம்

## இதோ செய்தி!

# பாத்தேறல் இளமாறனின் மண் மணச் சிறுகதைகள்



சிங்கப்பூரின் மூத்த கவிஞர் இளமாறனின் 'மண் மணச் சிறுகதைகள்' தமிழ் எழுத்தாளர் கழகத்தின் சார்பில் சென்ற மாதம் வெளியிட்ட நிகழ்ச்சி உமறுப் புலவர் அரங்கில் இடம் பெற்றது. இந்திய வர்த்தக சபையின் தலைவர் டாக்டர் தேவேந்திரன் நூலாசிரியருக்குப் பொன்னாடை போர்த்தி கவுரவித்தார். சி.த.எ. கழகத்தின் தலைவர் நா.ஆண்டியப்பன் தன் வரவேற்புரையில், தற்போது வெளியீடு காணும் நூல்களில் சில தரம் குறைந்தும், பிழைகளோடும் வந்து கொண்டிருப்பது தவிர்க்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார். தமிழ் நிகழ்ச்சிகள் என்றாலே முன்வந்து உதவிகளை செய்யும் வள்ளல் போப் ராஜ் என்கிற நாகை தங்கராசு, இந்த நிகழ்ச்சியை முன்னின்று நடத்தி கவிஞருக்கு கணிசமான தொகையை பெற்றுத் தந்தது பாராட்டத் தகுந்தது.

இதே நிகழ்ச்சியில், அண்மையில் தமிழ் நாட்டில் திமுக இளையர் அணியின் சார்பில் பொற்கிழி விருதைப் பெற்ற கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோவும் பாராட்டப்பட்டு சிறப்பிக்கப்பட்டார். நடிகர் குமரி முத்துவின் சிறப்புப் பேச்சு, சிறப்பாக அமைந்தது. அவரது சரளப் பேச்சும், சமயோசித அளப்புகளும் நன்கு ரசிக்கப்பட்டன. நிகழ்ச்சியில் தனித்து நின்றது கவிஞர் கோவிந்தராசு சொடுக்கிவிட்ட கவிதை! சற்று நீண்டாலும், சொல்லாழத்துடன் அமைந்திருந்தது. கவிஞர் இளமாறனின் எளிமையான கச்சிதமான ஏற்புரையுடன் நிகழ்ச்சி முடிவுற்றது.

# பேச்சாளர் மன்றங்கள் புதிய செயலவை பதவி ஏற்பு

கடந்த ஜீலை மாதம் 6ஆம் தேதி சிண்டா கட்டிடத்தில் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரா. தினகரன் தலைமையில் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகப் பேச்சாளர் மன்றத்தின் புதிய செயலவை பதவியேற்றது. மண்டலம் 80ன் துணைத்தலைவர் சந்தைப்படுத்துதல் திரு. எர்னெஸ்ட் சென் புதிய தலைவர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

அதே போல் ஜீலை 7ஆம் தேதி சிங்கப்பூர் தமிழ்ச் சமுதாயப் பேச்சாளர் மன்றத்தின் புதிய செயலவை பதவியேற்றது. தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு. மு ஹரிகிருஷ்ணன் முன்னிலையில், A6 வட்டார ஆளுநர் திரு. ச. ராம்குமார் புதிய தலைவர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

# சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியக் களம்: மங்கலதேவிக் கோட்டம்



கவிஞர் கோ.அருண்முல்லை எழுதிய மங்கலதேவிக் கோட்டம் அண்மையில் தேசிய நூலக அரங்கில் வெளியீடு கண்டது. மொழித் துறையாளர் அருண் மகிழ்நன், இந் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி சிறப்பித்து, எதிர்கால மொழி வளர்ச்சிக்கான தனது ஆலோசனைகளையும் எடுத்துரைத்தார். நூலக அதிகாரி புஷ்பலதா நாயுடு தனது வாழ்த்துரையில், இன்று வெளியாகும் ஒரு சில நூல்கள் இலக்கண, இலக்கியப் பிழைகளுடனும், தரக்குறைவாகவும் வெளிவருவதைத் தவிர்த்தாக வேண்டியதன் அவசியத்தை உணர்த்தினார்.

முனைவர் இரத்தின வெங்கடேசனின் அறிமுக உரை, முனைவர் சீதாலட்சுமியின் நூலாய்வு, சொற்சித்தர் வி.புருஷோத்தமனின் வாழ்த்துரை, சுப.சத்யமூர்த்தியின் தமிழ் வாழ்த்து, கவிஞர் கோவிந்தராசுவின் இணைப்புரை, மேடைப் பேச்சிற்கு அறிமுகமான கணீர்க்குரல் இளைஞன் தமிழ்மாறன் ஆகியோரின் அரவணைப்பில் அமைந்த அன்றைய விழாவில், மலேசியத் தமிழ் இலக்கியக் கழகத்தின் தலைவர் தமிழ்க்கழல் அ.ராமன் சிறப்புரை ஆற்றினார்.

கவிஞர் அருண்முல்லையின் நூல் மங்கலதேவிக் கோட்டம், அக்கவிஞரின் மகத்தான உழைப்பின் பலனாகும். காப்பிய உணர்வுடன் கதைக் களம் அமைத்து, முரண்பட்ட பாத்திரங்களை ஒருங்கிணைத்து, நம்மை ஒரு காவிய உலகிற்கு அழைத்துச் செல்லும் நூலாசிரியர் பெரிதும் பாராட்டப்பட்டார்.

# இலக்கிய வட்டம்: அன்னையின் ஆணை

கம்பனின் கவி நயம் கூறும் அன்னையின் ஆணை என்ற ஆய்வு நூலை வெண்பாக் கவிஞர் அ.கி.வரதராசன் சென்ற மாதம் சிறப்பாக வெளியிட்டார். தமிழ் ஈடுபாடு கொண்ட அமரர் அருணாசலம் அவர்களின் துணைவியார் திருமதி அருண் நாச்சியம்மை நூலை வெளியிட்டதும், வெண்பாச்சிற்பி அமரர் இக்குவனம் அவர்களின் மனைவியார் திருமதி லட்சுமி முதல் நூலைப் பெற்றுக் கொண்டதும் பொருத்தமான நிகழ்ச்சிகளாக



அமைந்தன. பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ.சுந்தரம் கம்ப ராமாயணப் பயணம் மேற்கொண்டார். நூலின் மொத்த விற்பனையை ஆசிரியர் வரதராசன் இரட்டிப்பாக்கி, இந்திய கல்வி மேம்பாட்டு வளர்ச்சி நிதிக்காக 12,000 வெள்ளி தந்து அனைவரின் பாராட்டுதலையும் பெற்றார். பேராசிரியர் சுப.திண்ணப்பனின் அறிமுகப் பேச்சும், ஆ.பழனியப்பனின் நெறிமுறையும், கவிஞர் கோவிந்தராசுவின் கவிதைப் படைப்பும் மற்ற சுவை அம்சங்கள்.

## புதிய ஆய்வுப் பார்வையுடன் முருகானந்தம் நூல்




முனைவர் கோட்டி திருமுருகானந்தம் அவர்களின் நூல் வெளியீடு சென்ற மாதம் தமிழாசிரியர்கள் சங்க அரங்கில் நடந்தது. எளிமை, அடக்கத்துடன் எல்லா தமிழ் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளும் முனைவர் முருகானந்தம், 'சிங்கப்பூர் தமிழ்க் கவிதை வரலாறு' என்ற தனது அர்த்தமுள்ள ஆய்வு நூலை அமைதியாக வெளியிட்டார். முனைவர் சுப,திண்ணப்பன் நூலாசிரியரைப் பற்றித் தானறிந்த சிறப்புகளை நிறையவே சொன்னார். இந்த நூல் தமிழகத்தில் இரு முறை அரங்கேறிப் புகழப்பட்டது என்பது புதிய செய்தி. முனைவர் செல்லக் கிருஷ்ணனின் நூலாய்வு வழக்கமான 'பஞ்ச்' சுவையுடன் அமைந்தது. முனைவர் அருணை பாலறாவாயன், முருகானந்தம் அவர்களைப் புகழும்போது, நம் கவிஞர் இக்பாலின் கவிதைகளை விரிவாக எடுத்துக் காட்டியது, அங்கு அமர்ந்திருந்த இக்பாலிலிருந்து அனைவரையும் கவர்ந்தது. தமிழாசிரியர் செங்குட்டுவன் அன்றைய நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார். நம் மூத்த தமிழாசிரியர் மு.தங்கராசு முதல் நூல் பெற்றார்.

'சிங்கப்பூர் தமிழ்க் கவிதை வரலாறு' ஒரு வரலாற்றுப் பின்னணியை உணர்த்துகிறது. இங்கே தமிழ்க் கவிதை தலை காட்டிய காலத்தை 13 ஆண்டுகள் பின் தள்ளும் மிகப் பெரிய உண்மையை நூலாசிரியர் நிரூபிக்கிறார். அதற்கான நூல்களை ஆய்ந்து, ஆதாரங்களைத் தருகிறார். இது முறையான மாறுபட்ட ஆய்வு. இனி வரும் ஆய்வுகள், இதிலிருந்து துவங்க ஒரு வழி வகுத்துள்ளார்.

## ஶ்ரீலட்சுமியின் "பெண்ணிய நோக்கில் கம்பன்" நூல் வெளியீடு



''பெண்ணிய நோக்கில் கம்பன்'' நூல் வெளியீடு தேசிய நூலக அரங்கில் இடம்பெற்றது. நூலாய்வுக்கு தேசிய நூலக அரங்கே நிறைந்த கூட்டம். அதுவும் ஆசிரியர்கள், மாணவர்கள் அணி வகுப்பு! நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் எம். ஹரிகிருஷ்ணன் சுவையோடு பேசினார். எந்தெந்த இடங்களில் நூல் ஆசிரியை ஆண்களைத் தாக்குகிறார் என்று பட்டியலையும் வெளியிட்டது, நூலை அவர் முழுக்கப் படித்ததை புலப்படுத்தியது. நூலக அதிகாரி புஷ்பலதா நாயுடு நூலாசிரியரின் தனி இயல்புகளை சுவையோடு குறிப்பிட்டு, ஆசிரியை பற்றிய ஆய்வு ஒன்றையே செய்துவிட்டார். ''ஶ்ரீலட்சுமி அதிக நூலை எழுதாவிட்டாலும், எழுதியவற்றை அதிகம் பேர் படிக்க வைக்கும் கலை தெரிந்தவர் மற்றவர் ஒத்துக் கொள்ள முடியாத கருத்துக்களை சொன்னாலும், அதற்கு நியாயம் கற்பிக்கத் தெரிந்தவர்'' என்றார். தொடர்ந்து பேசிய முனைவர் முகமது சலீம், இவற்றை தொட்டுப் பேசியதுடன், கம்ப காவியத்தின் இலக்கியச் சிறப்புகளை ஆழ்ந்த ஞானத்துடன் ஒப்பிட்டுப் பேசினார்.

புதுமைத்தேனீ அன்பழகனின் வாழ்த்துக் கவிதை, நிறைய செய்திகளை சுமந்து வந்தது. நூலில் நுழைந்து வந்த பாங்கு நன்று. ராம.கண்ணபிரான் இராமாயண பெண் பாத்திரங்கள் அனைவரையும் உள்ளடக்கி, நூல் ஆய்வொன்றை சிறப்பாகப் படைத்தார்.

முனைவர் ஶ்ரீலட்சுமி, தன் அண்மைய காரைக்குடி கம்பன் விழா அனுபவங்களையும், இந்நூல் உருவான கதையையும் ஏற்புரையில் குறிப்பிட்டார்.

## கதைக் களம்

சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம் மாதந்தோறும் நடத்தும் கதைக் களத்தில் உள்ளூர் எழுத்தாளர்கள் பங்கு பெறும் சிறுகதைப் போட்டி முக்கியம் வகிக்கிறது. கதையின் முதல் வரியைத் தந்து போட்டிக் கதைகள் வரவேற்கப்படுகின்றன. சிறந்த கதைகளுக்குத் தகுந்த ரொக்கப் பரிசுகள் தரப்படுகின்றன.



கவிஞர் வைரவன் முன்னின்று நடத்தும் இந்த நிகழ்ச்சி பெக்கியோ சமூக மன்ற அரங்கில் நடைபெறுகிறது. அண்மையில் நடந்த கதைக் களம் நிகழ்ச்சியில், தமிழக இதழ் கலைமகளின் ஆசிரியர் கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன் கலந்து சிறப்பித்ததுடன், எழுத்தின் உயர்வையும், எழுத வேண்டிய முறைகளையும் பற்றிப் பேசினார். ஏராளமான நாவல்கள், சிறுகதைகள் எழுதிப் புகழ் பெற்றவர் கீழாம்பூர் சங்கர சுப்ரமணியன். (படம்: சங்கர சுப்ரமணியன், ஏ.பி.ராமன், வைரவன்)

## தங்கமீன் வாசகர் வட்டம்

தோ பாயோ நூலக அரங்கில் மாதாமாதம் இலக்கிய, மொழி அடிப்படையில் நிகழ்ச்சி படைக்கும் தங்கமீன் வாசகர் வட்டம், நிறைய இளைஞர்களை ஈடுபடுத்தும் அமைப்பாகும். கவிஞர் பாலுமணிமாறன் முன்னின்று நடத்தும் இவ்வமைப்பின் வாசகர் வட்டத்தின் தலைவர் திரு எம் சேகர்.

## திருமுறை மாநாடு

ஆகஸ்ட் 1,2,3 தேதிகளில் வெகு சிறப்பாக நடந்து முடிந்த 34வது திருமுறை மாநாடு சிங்கப்பூரில் சமய உணர்வை கலை நயத்தோடு எடுத்துச் சொல்லியது. அருள்மிகு தண்டாயுதபாணி திருக் கோயிலின் ஆதரவோடு ஆண்டுதோறும் நடைபெறும் இச் சைவத் திருவிழாவில், திருமுறை சிறப்புப் பேச்சுகள், திருமுறை ஓதல் ஆகியவற்றுடன் அறுபத்து மூவர் பூசை உள்ளிட்ட சமய நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. இவ்வமைப்பின் வெற்றிக்குப் பின்னணியில் முனைவர் சுப.திண்ணப்பன், பேராசிரியர் முனைவர் இராம.கருணாநிதி, ஆ.இரா.சிவகுமாரன், கண்ணா கண்ணப்பன் போன்றோர் இருக்கின்றனர். பள்ளிப் பிள்ளைகள் பங்கு பெறும் திருமுறைப் போட்டிகள், கவியரங்கம், சமயக் கேள்வி பதில்கள் எனப் பல அம்சங்களும் இடம் பெற்றன.

## கம்பன் விழா

சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் 'கம்பன் விழா' சென்ற மாதம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டபோது, தமிழகத்தின் சொ.சொ.மீ, இலங்கையின் கம்பவாரிதி ஜெயராஜ், மலேசியாவின் டத்தோ சரவணன் போன்றோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உள்ளூர் கவிஞர்கள் பங்குகொண்ட பட்டி மன்றமும், கவியரங்கமும் நிகழ்ச்சிக்கு மெருகூட்டின. இனி ஆண்டுதோறும் கம்பன் விழா கொண்டாடப்படும் என கழகம் அறிவித்துள்ளது. சிங்கப்பூரில் மொழி சார்ந்த அமைப்பாக 1950ல் பெயரளவில் செயல்பட்ட தமிழ் எழுத்தாளர் கழகம், 1974க்குப் பின் முறையாக இயங்கியிருப்பதை அறிய முடிகிறது. 1977ல் பா.கேசவனைத் தலைவராகக் கொண்டு இயங்கிய கழகம், பின் படிப்படியான வளர்ச்சி கண்டு கிட்டத்தட்ட 38 ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. 1990க்குப் பின் சுறுசுறுப்பாக இயங்கிய கழகம், கவிஞரேறு அமலதாசனைத் தலைவராகக் கொண்டு நன்கு செயலாற்றிய காலமும் இப்போதுதான்.

இன்றைய தலைவர் இலக்கியவேந்தன் நா.ஆண்டியப்பன் 1993களிலிருந்து கழகத்தில் பொறுப்பான பணிகளைச் செய்து வருகிறார். குடியரசுக்கு தமிழகத்திலிருந்து வருகை தரும் அறிஞர் பெருமக்களை வரவேற்று அவர்களின் கருத்துக்களைக் கேட்கும் வாய்ப்புகளைத் தரும் எழுத்தாளர் கழகம், புலமை மிகுந்த தமிழ்ப் பொழிவைச் சிங்கைத் தமிழர்க்கு வழங்கும் விழாக்களை ஆண்டு முழுவதும் மேடை ஏற்றுகிறது. அவைகளில் குறிப்பிடத் தகுந்தவை: தமிழவேள் விருது வழங்குதல், கம்பன் விழா, கண்ணதாசன் விழா .

நாள் முழுவதும் நடந்த 'கம்பன் விழா' இலக்கியத் திகட்டலுக்குள்ளான நிகழ்ச்சியாக அமைந்தது. கம்ப இலக்கியத்தை சுவை சொட்டச் சொட்ட வழங்க கம்பவாரிதி ஜெயராஜ், பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ.சுந்தரம் இருவரும் இருக்கும்போது கவிச் சுவைக்கு ஏது பஞ்சம்? ராமாயணத்தைப் படிக்கலாம் பேசலாம் அதில் மயங்கலாம் அதெல்லாம் பெரிதல்ல. ராமன் மாதிரி ஒருவன் நடக்க நினைப்பதுதான் பெரிய வெற்றியாகும் என்று பலத்த கைதட்டலுக்கிடையே முழங்கிய கம்பவாரிதி, மாலை இடம்பெற்ற பட்டி மன்றத்திலும் சுடர் விட்டார். சொ.சொ.மீ அவர்களுக்கு விரைவில் சிங்கப்பூரில் ஒரு ரசிக மன்றம் ஏற்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. சைவம், வைணவம் எல்லா இலக்கியங்களும் அவர் வாய்த் திறப்பிற்காகக் காத்துக் கிடக்கின்றன.

கண்ணதாசனோடு கம்பனை ஒப்பிடும் துணிவு மலேசியத் துணை




அமைச்சர் டத்தோ சரவணனுக்கு இருந்தது. அதை நன்றாகவே ஈடேற்றினார். 'தோள் கண்டார் தோளே கண்டார்' (தோள் கண்டேன் தோளே கண்டேன்) இது போன்ற பல பாடல்களைக் காட்டி, கண்ணதாசனின் கம்ப ரசனையைப் புலப்படுத்தினார். "பாத்திரங்கள் பேசினால்" கூனி. சுக்ரீவன், வாலி, சூர்ப்பனகை, இந்த்ரஜித், கும்பகர்ணன், விபீடணன் போன்ற பாத்திரங்கள், நம் கவிஞர்கள் இன்பா, கி. கோவிந்தராசு, என்.வி.விசயபாரதி, மாதங்கி, ராம. வைரவன், பிச்சினிக்காடு இளங்கோ, அ.கி.வரதராசன் ஆகியோரின் கவிதை வடிவங்களில், புதிய பார்வைகளுடன் வந்திறங்கியபோது அரங்கம் அதிர்ந்தது. உயிரோட்டம் நிறைந்த அனுமன் பாத்திரத்தையும் சேர்த்திருக்கலாம்.

பட்டி மன்றம் சிறந்தவன் பரதனா இலக்குவனா என்பதைப் பற்றி யாருக்கும் கவலை இல்லை. கம்பவாரி நடுநாயகமாக இருந்து கருத்துக்களைக் கொட்டும்போது யார் வென்றால் நமக்கு என்ன? மூன்று முனைவர்களும் (செல்லக் கிருஷ்ணன்,




சரோஜினி செல்லக் கிருஷ்ணன், இரத்தின வெங்கடேசன் சுப.அருணாச்சலமும் நன்றாக (இலக்கியச்) சண்டை போடுவதில் வல்லவர்கள் தாம் என்ற நடுவரின் தீர்ப்பை நாம் ஏற்போம்.

## சத்தியமூர்த்தியின் நூல்கள் கவிமாலை வெளியீடு

மகாத்மா காந்தி நினைவு மண்டபத்தில் நடந்த சென்ற மாதக் கவிமாலை நிகழ்ச்சியில், வழக்கமான நிகழ்வுகளுடன் கவிஞர் ந.வீ.சத்தியமூர்த்தியின் இரு நூல்களின் (ஏணிப் படிகள் பார்வை'கள்') வெளியீடும் இடம் பெற்றது. தமிழ் ஆசிரியர்கள் இணைந்து நடத்திய இந்நிகழ்ச்சிக்கு மூத்த தமிழாசிரியர் மு தங்கராசு தலைமை தாங்க, சங்கத் தலைவர் சி.சாமிக்கண்ணு, கல்வி அதிகாரி மு.த.வேணுகோபால் முன்னிலை வகிக்க, முனைவர் ரத்ன வெங்கடேசனும், முனைவர் மன்னார்குடி க. ராஜகோபாலும் இரு நூல்களையும் சுவையாக அவர்களுக்கே உரிய பாணியில் விமர்சித்தனர். தமிழறிஞர் சுப.திண்ணப்பன் நூலை வெளியிட, முதல் பிரதியை உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையம் தலைவர் இரா.அன்பரசு பெற்றுக் கொண்டார். கவிஞர் வீர. விஜயபாரதியின் நெறிமுறையும், முனைவர் எம்.ஆண்டாளின் வாழ்த்துப்பாவும் முக்கிய அம்சங்கள். கவிமாலையின் கவிதைப் போட்டி, படித்ததில் பிடித்தது யாவும் வழக்கம்போல் இடம்பெற்றன. கவிமாலை காப்பாளர் புதுமைத்தேனீ மா.அன்பழகன் தன் பேச்சை சுருக்கிக் கொண்டு மற்றவர்களுக்கு வழி விட்டார்.




மில்லினியம் ஆண்டு எனப் போற்றப்பட்ட 2000ல் கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோவின் முயற்சியால் உருவான கவிமாலை, அவர் தமிழகம் திரும்பியதும், புதுமைத்தேனீ மா.அன்பழகன் தலைமையில் முழு மூச்சுடன் இயங்கி சிங்கப்பூரின் மூத்த, இளைய கவிஞர்கள் அனைவரையும் கவிதைப் பயணம் செய்ய வழி திறந்தது. கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, பேச்சு என பலதுறை எழுத்தாளராக விளங்கும் மா. அன்பழகன், மாதாமாதம் கடைசி சனிக்கிழமை மாலை நேரத்தில் கவிஞர்களை சந்திக்க வைத்து, இலக்கண வகுப்பு, கவிதை படித்தல், கவிதைப் போட்டி ஆகியவற்றை நீண்ட காலமாக நடத்தி உள்ளூர் கவிஞர்களை ஊக்குவிக்கிறார். ஆண்டுதோறும் எழுத்தாற்றல் மிக்க மாணவர்களுக்கு கவிதைப் போட்டிகள் நடத்தி தங்கக் காசு வழங்கியும், நாட்டின் மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்ட அனுபவ எழுத்தாளர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்க கணையாழி விருது வழங்கியும் இன்னும் பல அரிய சேவைகளில் கவிமாலை அமைப்பு ஈடுபட்டுள்ளது.

## வாசகர் வட்டம்

வாசிப்பை முதன்மையாகக்கொண்டு, கடந்த இருபந்தைந்து வருடங்களாக சிங்கப்பூரில் இயங்கிவரும் முக்கிய தமிழ் அமைப்புகளில் ஒன்று சிங்கப்பூர் வாசகர் வட்டம். மாதம்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் அங் மோ கியோ நூலகத்தின் தக்காளி அறையில் இதன் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெறுகிறது. மாதாமாதம் விவாதிப்பதற்கென ஒரு குறிப்பிட்ட நூலையோ, குறிப்பிட்ட எழுத்தாளரையோ அல்லது பல்வேறு



இலக்கிய வடிவங்களின் கட்டமைப்பில் ஒன்றையோ தலைப்பாகக் கொண்டு இக்கலந்துரையாடல்கள் நடைபெறும்.

தனது 25 ஆண்டு வெள்ளிவிழாவை மார்ச் மாதம் (1/3/2014) வெகு சிறப்பாக கொண்டாடியது வாசகர் வட்டம். சிறப்பு விருந்தினராக வந்து நிகழ்வைச் சிறக்க வைத்தார் பிரபல எழுத்தாளர் திரு. ஜெயமோகன் அவர்கள். இவ்விழாவில் சித்ராரமேஷ் எழுதிய நகரத்தின் கதை, எம்.கே.குமார் எழுதிய சூரியன் ஒளிந்தணையும் பெண், ஷாநவாஸ் எழுதிய அயல்பசி ஆகிய நூல்கள் அறிமுகம் கண்டன.

தமிழில் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களை வரவழைத்து அவர்களின் படைப்புகள் வழி மிக பயனுள்ள உரையாடல்களை சிங்கப்பூர் வாசகர்வட்டம் நிகழ்த்திவருகிறது. கடந்த ஆண்டுகளில் மனுஷ்யபுத்திரன், ஜெயமோகன் போன்றோரது வருகை உள்ளூரில் மேலும் பல புதிய வாசகத்தளத்தை உருவாக்கியுள்ளது

வாசகர்வட்டத்தை தொடர்ந்து உயிர்ப்புடன் கொண்டு செல்லும் திருமதி சித்ராரமேஷ், ஷா நவாஸ், எம்.கே.குமார், அழகுநிலா மற்றும் பாரதி மூர்த்தியப்பன் உள்ளிட்ட நண்பர்கள் முயற்சியால் www.singaporecliche.com இணைய இதழும் தொடங்கப்பட்டு வாசகர் வட்டம் தொடர்பான செய்திகள் மற்றும் படைப்புகள் அனைத்தும் பகிரப்படுகின்றன.

## மாதவி இலக்கிய மன்றம்



ஆடல், பாடல் ,போட்டி என பொது மேடைகளில் நிகழ்ச்சிகள் படைப்பதில் மாதவி இலக்கிய மன்றம் என்றும் முன் நிற்கும் அமைப்பு. இதன் மாதாந்திர நிகழ்வுகள், மாத இறுதி சனிக்கிழமைகளில் பாலஸ்டியர் சாலை சிலோன் ஸ்போர்ட்ஸ் கிளப்பின் அரங்கத்தில் நடை பெறுகின்றன . நம் முன்னோடிக் கவிஞர் ஐ.உலகநாதன் அந்தக் காலத்தில் துவக்கி, பல கவிஞர்களை உருவாக்கிய மாதவி மன்றம் , சிங்கப்பூரின் பழைய அமைப்புகளில் ஒன்று. அண்மைய காலத்தில் முனைவர் இரத்தின வேங்கடேசன் வழங்கிய கம்ப இராமாயண தொடர் சொற்பொழிவினைக் கேட்டிருக்கிறோம். தமிழ் மொழி மாதம், பொங்கல் போன்ற சிறப்புவிழா நிகழ்ச்சிகளை பல்சுவையோடு படைக்கும் டாக்டர் என்.ஆர்.கோவிந்தன் மாதவி இலக்கிய மன்றத்தின் தலைவராவார்.

## எழுத்தும் ஓவியமும் இணைந்த நிகழ்ச்சி

ஆங் மோ கியோ நூலகம் அண்மையில் படைத்த ஒரு நிகழ்ச்சி புதிய ரசனையைக் கொண்டு வந்தது. ஒரு எழுத்தாளன், மற்றொரு ஓவியன் இருவரையும் அறிமுகப்படுத்திய 'கலையும் கற்பனையும்' என்ற இந்த நிகழ்ச்சிக்கு திரு.அருண் மகிழ்நன் முன்னிலை வகுத்தார்.

'குருவிக்கோட்டம்' என்ற தனிச் சிறப்பு வாய்ந்த நாவலை எழுதி, பல விருதுகளையும், பாராட்டுதலையும் பெற்ற மூத்த எழுத்தாளர் மா. இளங்கண்ணனையும், கவிஞர் ஓவியர் கா பாஸ்கரையும் ஆசிரியையும், தமிழ் ஆர்வலருமான வீர விஜயபாரதி கலகலப்பாக அறிமுகம் செய்து வைத்தார். பறவைகளை நாயக நாயகிகளாக்கி, நாட்டு நடப்புகளை அடி நாதமாக்கி, பறவைகளின் வழி, நுட்பமான விமர்சனத்தை வெளிக்கொணரும் தேர்ந்த படைப்பாளி மா. இளங்கண்ணனின் இந்த நாவலுக்கு, கா பாஸ்கர் தந்திருந்த கலைக் காட்சி உண்மையில் பாராட்டுக்குரியது. நாவலின் உயிர்ப் பாத்திரங்களை அவர்



உலவ விட்டிருந்த பாங்கு அனைவரையும் கவரக்கூடியது. நூலக மாடியில் அமைந்த இந்தக் காட்சியை ஏராளமான வாசகர்கள் பார்த்து மகிழ்ந்தனர்.

இளங்கண்ணன் தன் 'கதை பிறந்த கதையை' சுவையாக விளக்கினார். இவர் 3 நாவல்கள், 5 சிறுகதைத் தொகுப்புகளின் எழுத்துக்காரர்! ஓவியர் பாஸ்கர், தான் விழுந்து புரண்ட வண்ணக் கலவைகளை வகைப்படுத்திக் காட்டினார். அவருடைய ஓவிய, விளம்பர, தொழில்முறை சித்திரங்கள் நம் மனதைத் தொடுகின்றன.

முன்னிலை வகித்த அருண் மகிழ்நன், இன்று ஓர் அருமையான கருத்தை சொன்னார். "பல இன மக்கள் நாடு என்றால், அவரவர் தனித்து இயங்குவதல்ல. ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும்'' என்ற அவர், மற்ற மொழிகளிருந்து நம் மொழிக்கும், நம் மொழியினின்று மற்ற மொழிகளுக்கும் எழுத்துப் பரிமாற்றம் மிக மிக அவசியம் என்றார்.

## தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக கரிகாற் சோழன் விருது

முஸ்தபா தமிழ் அறக்கட்டளை சார்பில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழவேள் கோ. சாரங்கபாணி ஆய்விருக்கை ஒன்று 2007ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.



எம். ஏ. முஸ்தபா முகம்மது டிரஸ்டின் தலைவர்

அந்த ஆய்விருக்கையின் நோக்கங்கள்:

அ) தென்கிழக்காசிய, குறிப்பாக சிங்கப்பூர், மலேசியத் தமிழர்களின் வாழ்க்கை பற்றியும் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் குறித்தும் ஆய்வியல் நிறைஞர் (M.Phil) முனைவர் (Ph.D) பட்டங்களுக்கு ஊக்கத் தொகை அளித்தல்;

ஆ) தென்கிழக்காசிய, குறிப்பாக சிங்கப்பூர், மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் சிறந்த படைப்பு ஒன்றுக்கு ஆண்டுக்கு ஒருமுறை விருது வழங்கிப் பரிசளித்தல்; (பின்னர் இது சிங்கப்பூருக்கு ஒன்றும் மலேசியாவுக்கு ஒன்றுமாக இரண்டு விருதுகளாக வழங்க முடிவு செய்யப்பட்டது)

இந்த ஆண்டு, கரிகாலன் விருது வழங்கும் விழா சிங்கையில் செப்டம்பர் 13 ம் தேதி நடைபெறுகிறது. *

மானுடக் கவிஞர்

# பாரதியார்

தமிழால் பாரதி உயர்ந்தார். பாரதியால் தமிழ் உயர்ந்தது. மகா கவி பாரதி மானுடம் பாட வந்தவர். எழுத்தால், சிந்தனையால், இந்திய சிந்தனைக்கு வளம் சேர்த்த பாரதி அமரரான தினம் செப்டம்பர் 11.

பாரதியார் பற்றிய சில குறிப்புகள் நம் சிந்தனைக்கு.



## விளையாட்டும் விருப்பமே!

பாரதியாரும் வ.வே.சு. ஐயரும் சதுரங்க விளையாட்டு விளையாடுவார்கள். பாரதியாரின் காய்களையெல்லாம் மளமள வென்று ஐயர் வெட்டிச் சாய்த்து விடுவார். "ஐயரே! இரக்கம் கொஞ்சமேனும் இல்லாமல் வெட்டுகிறீரே! உமது நெஞ்சம் என்ன கருங்கல்லா, இல்லை இரும்பா?" எனக்கேட்பார் பாரதியார். ஐயர் சிரிப்பார். "ஐயா சண்டை போடுகிறோம். போர்க்களத்திலே வந்து ஒப்பாரி பாடுகிறீரே, எதற்கு?" என்று கிளறிவிடுவார் பாரதியாரின் கோபத்தை.

பத்துமுறை வெல்லும் ஐயர் பூரிக்கமாட்டார். பத்துமுறை தோற்று ஒருமுறை வென்றாலும் போதும், பாரதியாருக்கு மகிழ்ச்சி வெள்ளமாகப் பொங்கும்.

## பாரதி நூற்றாண்டில் அமரர் கல்கியின் நினைவு நாளை (டிசம்பர்5) யொட்டி கல்கி அவர்களின் பாரதி சேவையை நினைவு கூர்ந்தார் அன்றைய தமிழக மேலவைத் தலைவர் திரு ம.பொ.சி

எட்டயபுரம் பெற்றெடுத்த மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியாரின் புகழை நாட்டிலே பரப்பியவர்கள் பலராவர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையிலே பணியாற்றினர். அவர்களிலே "கல்கி" இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தனியிடத்தைப் பெறுகிறார்.

எல்லோரும் பாரதியாரின் பாட்டுகளைப் பாடியும், அவற்றில் புதைந்து கிடக்கும் பொருள்களை விளக்கியும், எழுத்தாலும் பேச்சாலும் தொண்டாற்றிக் கொண்டிருந்த நேரத்திலே, கல்கி ஒருவர்தான் பாரதியாரின் பெயரால் என்றும் நிலைபெறத்தக்க கற்கோயில் ஒன்றை எழுப்ப நினைத்தார். அதற்குத் தேவைப்படும் பொருளைத் திரட்ட நாடு சுற்றி வலம் வந்தார். அவர் நினைத்திருந்தால் ஒன்றிரு பெருஞ் செல்வர்களிடமே எட்டயபுரம் பாரதி மண்டபத்துக்குத் தேவைப்படும் பொருளைப் பெற்றிருக்க முடியும். தமிழ்நாட்டு செல்வந்தர்களிடம் அந்த அளவு அவருக்குச் செல்வாக்கு இருந்தது. ஆனால் பாரதிக்குத் திருக்கோயில் எழுப்பும் பணியிலே சாதாரண மக்களையும் ஈடுபடுத்த எண்ணியவர் கல்கி.

## உழைப்பைத் துதித்தவன்

தாகூரும், பாரதியும் தெய்வ பக்தியையும், மனிதாபிமானத்தையும் இணைத்ததாலேயே அவர்கள் உலக மக்களிடத்தில் ஆண்டவன் திருவுருவைக் கண்டார்கள். தாகூர் தமது கீதாஞ்சலியில் பின்வருமாறு பாடுகிறார்:

"தாளிட்ட அடைபட்ட கோயிலின் இருண்ட மூலையில் நீ யாரைப் பூசிக்கின்றாய்? கண்ணைத் திறந்து உன் கடவுள் உன் முன்னிலையில் இல்லை என்பதை அறிந்துகொள். கடினமான தரையில் வீடின்றி வாழ்வாரிடமும் சாலை அமைக்கச் சரளைக் கல் பரப்புவோரிடமும் அவன் மழையில் நினைகிறான். வெய்யிலில் காய்கிறான்.!"

பாரதியாரும் கடவுளின் திருவுருவை உழைப்பவர்களின் உருவத்தில் காணத்தான் செய்கிறார்

*அரும்பும் வியர்வை உதிர்ந்துப் புவிமேல்*
*ஆயிரம் தொழில் செய்திடுவீரே!*
*பெரும்புகழ் நுமக்கே இசைக்கின்றேன்*
*பிரம்ம தேவன் கலை இங்கு நீரே!*

பாரதி: சில பார்வைகள் ரகுநாதன்.

## விதியின் வலி பேசியவன்

பாரதிக்கு விதியின் வலிமையில் மிகுந்த நம்பிக்கையுண்டு. பாஞ்சாலி சபதத்தில் சகுனியின் சூதுக்குத் தருமன் இணங்கி விட்ட இடத்தைப் பேசும் போது, "நூலறிவும் மெய்யறிவும் மிகவுடைய தருமனும் விதியினால் வீழ்ந்தான்" எனவும் "மதியினும் விதிதான் பெரிதன்றோ? விதியினும் பெரிதோர் பொருளுண்டோ?" எனவும் விதி வலி பேசக் காண்கிறோம் என்றாலும் நிலையாமையை விரித்துபேசும் இயல்பு பாரதியிடம் காண முடியவில்லை. இறைவனிடம் சாகா வரம் வேண்டிய பாரதி, நிலையா இயல்வினை செல்லும் முயற்சியை விரும்பி பேசுவதன்றி நிலையாமையை விரித்துப் பேசுவதில்லை. *

பாரதி உலக கவி: மு. அப்துல் கறீம்

## வற்றல் குழம்பு ரசிகன்!

கல்லாவில் உட்கார்ந்திருந்த சுந்தர விலாஸ் உரிமையாளர் திரு. சுந்தரேசய்யர் பாரதி அருகில் வந்து, "அண்ணாவுக்கு அன்னம் வைக்கச் சொல்லலாமா? என்று பரிவுடன் கேட்டார். அமர்ந்திருப்பது பாரதியார் என்று அய்யருக்குத் தெரியாது.

உடனே பாரதி "இப்போது என்ன சமையல் என்று தெரிவிக்கலாமா?" என்று ஐயரைப் பார்த்துக் கேட்கவே ஐயர் சொன்ன பட்டியல்: பூசணிக்காய் கறி, பூசணிக்காய் சாம்பார், வேப்பம்பூ பச்சடி, கொத்துமல்லி ரசம், நெல்லிக்காய் ஊறுகாய்!

பாரதியார் முக வாட்டத்துடன் இலையை விட்டு எழுந்துவிட்டார். சுந்தரேசய்யர் திடுக்கிட்டு, "ஏன் அண்ணா, ஏன் எழுந்துட்டேள்?" என்று பதறியதும், பாரதியார் அடக்கமாக "எனக்கு பூசணிக்காயைக் கண்டாலே பிடிக்காது. அது இன்றைக்குச் சாப்பாட்டில் கறியாகவும், சாம்பாராகவும் இருக்கிறது. எனக்குப் பிடிக்காததைச் சாப்பிட நான் விழையேன் பட்டினி கிடந்தாலும் கிடப்பேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட ஆரம்பித்தார், பாரதி தம்மை இன்னார் என்று அய்யரிடம் அறிமுகம் செய்து கொண்டு மணத்தக்காளி வற்றல் குழம்பு தயாரிக்கச் சொன்னார். தம் முன் உள்ளவர் பாரதி என்று அறிந்த சுந்தரேசய்யருக்குத் தலை கால் புரியாத மகிழ்ச்சி. தாமே வற்றல் குழம்பு தயாரித்து பாரதிக்குப் படைத்தார். சாப்பாடானதும் பாரதியிடம் வந்த அய்யர், "என்னுடைய விருப்பம் ஒன்றைப் பூர்த்தி செய்ய வேண்டும். தாங்கள் இயற்றியுள்ள செந்தமிழ் நாடெனும் போதினிலே என்ற பாடலைத் தாங்கள் ஒருமுறை பாடிக் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்றார் ஆசையோடு. உடனேயே அய்யரது ஆசையைப் பூர்த்தி செய்த பாரதி, அய்யரிடம் ஒன்று வேண்டிக் கொண்டார். அது: "ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் என் நினைவாக மணத்தக்காளி வற்றல் குழம்பு இடம்பெற வேண்டும்!" *

### பாரதியார் விழா 2014

வருகின்ற செப்டம்பர் 14ஆம் தேதி ஞாயிற்று கிழமை, சரியாக மாலை 6 மணிக்கு, தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் பாரதியார் விழா நடைபெற உள்ளது. உமறுப்புலவர் நிலைய உள்ளரங்கில் நடைபெற உள்ள இவ்விழாவில், சிறப்புப் பேச்சாளராக, பட்டிமன்ற பேச்சாளர், சன் தொலைகாட்சிப் புகழ் **திரு. சிவக்குமார்** அவர்கள் உரையாற்ற உள்ளார். இந்நிகழ்ச்சிக்கு அனுமதி இலவசம்.

# சிலைகொண்டவள் வந்தாள்



கண்ணதாசன்

*'வா' என்றன இமைகள்*
*மண்ணோக்கின விழிகள்*
*'தா' என்றன இதழ்கள்*
*தழுவென்றது மேனி '*
*'பார்' என்றது பருவம்*
*படைகொண்டது நாணம்*
*நேர்கின்றது யாதோ*
*நிலைகொண்டது காதல்*
*நேர்கொண்டொரு தெய்வம்*
*தெருஎங்கணும் வரல்போல்*
*ஊர்கின்றவன் மனதில்*
*உழல்கின்றது காமம்*
*சீர்கொண்டவன் எதிரே*
*சிலைகொண்டவள் வந்தாள்!*

# நன்றிக்குரியவர்கள்

## தமிழ்மணம் புருஷோத்தமன்



சிங்கப்பூரின் தமிழ் மணத்தை உலகெங்கும், குறிப்பாக தமிழகமெங்கும் வீடுதோறும் பரவச் செய்யும் நறுமணப் பணியை செய்கிற ஒருவர் நம்மிடையே இருக்கிறார் என்றால்...அவர் வேறு யாராகவும் இருக்க முடியாது, சொற்சித்தர் தமிழ்மணம் புருஷோத்தமன் அவர்கள் மட்டுமே! இனிய சுபாவங்களின் அதிபதியும், தமிழகப் பத்திரிக்கைத் துறை அனுபவசாலியுமான இவர், பிரபல தமிழ் தினசரி 'தினமலரின்' தென் கிழக்காசிய செய்தி நிருபர் என்பதும், சிங்கப்பூர் இலக்கிய அமைப்புகளின் நிகழ்வுகளில் நிறைய பேசிப் பங்கெடுப்பவர் என்பதும் நீங்கள் முன்பே அறிந்தவைதாம். இலக்கியம், அரசியல், சமூக விவகாரங்கள் அனைத்தையும் ஆழமாகப் பேசும் சொல்லாற்றல் மிக்க புருஷோத்தமன், அனைவருடனும் அரவணைப்புடன் பழகும் சிரித்த முகத்தின் சொந்தக்காரர். நம் உள்ளூர் அமைப்புகள் அவருக்கு நிறையவே நன்றி கூறக் கடமைப்பட்டவை. இன்றைய நம் செய்தி, நாளை அல்லது மறுநாள் தமிழகத்தில் புகைப் படங்களுடன்! யாருக்குக் கிடைக்கும் இந்த வாய்ப்பு?

## தியாக. ரமேஷ்



சிங்கப்பூரின் எந்த அமைப்புகளாக இருந்தாலும், தமிழ் மொழி தொடர்பான எந்த நிகழ்ச்சியானாலும் புகைப் படக் கருவியுடன் அரங்கத்தில் சுற்றிக் கொண்டிருப்பார் நம் தியாக ரமேஷ். எடுத்த படங்கள் உடனுக்குடன் வேண்டுமா...அதையும் முகம் சிணுங்காமல் இரவோடு இரவாக அனுப்பித் தருவார். அமைப்புகளின் செய்திகள் அனைத்தையும் ஆர்வத்தோடு சேகரித்து அன்றாடம் மற்றவர் பார்வைக்கு அனுப்பும் பணி வெகுவாகப் பாராட்டத் தக்கது. வார நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி அன்றாடம் நமக்கு நினைவுபடுத்தும் பாங்கும் நன்று. இத்தனையும், காலை முதல் மாலை வரை பிழைப்பு (வேலை) முடிந்த பிறகு தான் அவரால் சாத்தியப்படுகிறது. இவரின் சுறுசுறுப்பிற்குப் பின்னால் யாராவது ஒருவர் இருக்கிறார் என்றால், அது நிச்சயம் அவருடைய அன்பு மனைவி வளர்மதி தான். வளர்மதியின் பொறுமை உணர்விற்கு வாழ்த்துகள்! ரமேஷ் ஒரு நல்ல கவிஞர் நூலாசிரியர். அண்மையில் சேலத்தில் வெளியீடு கண்ட இவரது "மரப்பாச்சி பொம்மைகள்" நூல், சிங்கப்பூரில் ஆகஸ்ட் 3ஆம் தேதி, கவிமாலையின் சார்பில் வெளியிடப்பட்டது.

## தேவராஜா பார்வையில் கோயிலில் தமிழ்ப் பணி



சிங்கப்பூர் குவீன்ஸ்வே முனீஸ்வரன் கோயில், சமய வழிபாடுகள் அல்லாத பல சமூக நலன்களில் அக்கறை காட்டும் அமைப்பு. அதற்கு முழு முதற் காரணமாயிருப்பவர் அக் கோயிலின் அடக்கமான தலைவர் திரு.வி.தேவராஜா அவர்கள். நடனம், இசை வகுப்புக்களை நடத்தி அந்த வட்டார மக்களின் கலை உணர்ச்சிகளுக்கு வித்திடும் ஆலயம், திருக்குறள், திருமுறை வகுப்புக்களின் வழி இளைய தலைமுறையினரிடம் தமிழ்இலக்கிய அறிவையும் வளர்த்து வருகிறது. கலை அம்சம் நிரம்பிய ஆலயத்தின் அரங்கில், மொழி மற்றும் கல்வி தொடர்பான நிகழ்வுகள் நடத்தவும் ஊக்கப்படுத்தப்படுகிறது. தமிழார்வ மிக்க திரு தேவராஜா தமிழ் சம்பந்தப்பட்ட எல்லா விழாக்களிலும் கலந்து சிறப்பிப்பதுடன், தமிழ் அமைப்புகளின் மீது அக்கறை காட்டுபவர்.

## உடனடி ஒலி மொழி பெயர்ப்பு சாதனத்தில் தமிழ் மொழி! நீங்களும் உதவலாம்



உடனடி ஒலி மொழி பெயர்ப்பு சாதனத்தில் தமிழ் மொழியையும் இணைக்கும் கிடைத்தற்கரிய ஒரு திட்டம் சிங்கப்பூரில் தற்போது மேற்கொண்டு வரப்படுகிறது. ஏ ஸ்டார் என்ற அரசு ஆதரவுடன் இயங்கும் மொழி ஆராய்ச்சி நிறுவனம் இதை நடத்துகிறது. அதிவேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பத்தில் தமிழ் மொழியும் ஒரு சிறப்பான இடத்தைப் பிடிக்க திரு.முத்தழகு மெய்யப்பன் ஈடுபட்டுள்ளார். இதன் முதல் கட்டம், கைத் தொலைபேசியை அமர்த்திக் கொண்டு நாம் பதிவு செய்யும் சொற்கள், எழுத்துக்கள் வடிவில் திரும்பி வருவதாகும். இதுவரை சேகரித்த தரவுகளை வைத்து இந்த வெற்றி கிடைத்திருக்கிறது. இதன் அடுத்த கட்ட பணி இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அன்றாடம் பேச்சு வழக்கில் உள்ள தமிழ் மாறுபட்ட ஒலிகளை 100 பேரிடமிருந்து பதிவு செய்ய வேண்டும். அதனை தொடர்ந்து ஆசிய மொழிகளில் சரியான இணையான பொருள்படக்கூடிய ஒலிகளை ஒப்பிட்டு சேகரிக்க வேண்டும்.

நாம் பேசும் தமிழை ஆசியமொழிகளில் மட்டுமின்றி உலக மொழிகள் அத்தனையிலும் உடனடியாக மாற்றம் செய்து, உரையாடி உலகை தமிழால் ஒன்றிணைக்க வழி திறக்கும் இத் திட்டத்திற்கு தமிழ் மக்களின் உதவியை நாடுகிறார் முத்தழகு.

*(தொடர்ச்சி: 40ம் பக்கம்)*

# உயர்ந்தோர் தாழ்ந்தோர்

வின்சென்ட் ஜோசப்



50 வருடங்களுக்கு முன்னும் கூட அமெரிக்காவில் கருப்பர்களை எங்கும் சுதந்திரமாக அனுமதிப்பதில்லை. அவர்கள் பொது போக்குவரத்தில் செல்லவோ, பொது இடங்களில் தண்ணீர் குடிப்பதோ, வெள்ளையர்களைப் போல் ஊதியம் பெறுவதோ எல்லாமே மறுக்கப்பட்டது. ஆனால் இன்று கருப்பரான பாரக் ஹூசைன் ஒபாமா அமெரிக்காவின் அதிபர். இதே போல் இன்னொரு கருப்பராக பிறந்தவரான மார்டின் லூதர் கிங் கருப்பர்களுக்கு ஆதரவாக பல போராட்டங்களை நடத்தி அவர்களுக்கு பல சலுகைகளைப் பெற்றுத் தந்த பெருமை கொண்டவர். ஒரு காலத்தில் கருப்பர்கள் கொடுமைப்படுத்தப் பட்டதை போல் யாருமே கொடுமைபடுத்தப்படவில்லை எனலாம். வரலாற்றில் அவர்கள் அடிமையாக நடத்தப்பட்டது ஒரு கொடிய பதிவு என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

தென் ஆப்பிரிக்காவில் இதே போல் கருப்பினர்களுக்கு எதிராக பல அநீதிகள் இழைக்கப்பட்டன. 1893ல் இந்தியாவின் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் புகை வண்டியின் முதல் வகுப்பிலிருந்து வெளியேற்றப் பட்டார். நெல்சன் மண்டேலா போன்றோரின் பெருமுயற்சியால் 1994ஆம் ஆண்டுதான் தென் ஆப்பிரிக்காவில் கருப்பர்களுக்கு எதிரான அநீதியை நிறுத்தினர். அதேபோல் 1920ஆம் ஆண்டில் தான் அமெரிக்காவின் பெண்மணிகள் வாக்களிக்கும் தகுதியே பெற்றனர். பெண் என்ற ஒரே காரணத்தினால் பல நேரங்களில் பல நாடுகளில் ஒடுக்கப்பட்டுள்ளனர். ஒடுக்கப்பட்டும் வருகின்றனர். பெண்களுக்கு எதிரான கொடுமைகளை பற்றிய செய்திகள் அன்றாடம் வராமல் இல்லை. ஜாதிகளின் ஆதிக்கம் அதிகம் இருந்த காலத்தில், சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் வாழ்ந்தார். ரோம் மற்றும் கிரீசில் அப்போது அடிமைகளாக பலர் இருந்த காலம். ஹிட்லர் காலத்தில் இனவெறி கொடுமை அளவில்லாமல் எல்லா இடத்திலும் பரவி இருந்தது. ஜெர்மனியில் இருந்த பல அப்பாவி ஜீக்களை கொன்று குவித்தார். மனிதர்களை தரம் பிரித்து பார்ப்பதென்பது பல ஆண்டுகளாக பல நாடுகளில் பல்வேறு விதமாக நடந்துதான் வருகிறது. 972 ஆம் குறளில் திருவள்ளுவர் கூறுவது இதற்கெல்லாம் பதில் சொல்வது போல் அமைந்துள்ளது

*பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான். (972)*

மேலே குறிப்பிட்டுள்ள அத்தனை அநீதிகளையும் எதிர்த்து இந்த ஒரு குறள் எழுதியுள்ளார் திருவள்ளுவர்.

அமெரிக்க நாட்டை சீரும் சிறப்புமாக நிர்வாகம் செய்யும் ஒபாமா இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. அதேபோல் 1966ஆம் ஆண்டு இந்திரா காந்தி அம்மையார் இந்தியாவின் முதல் பெண் பிரதமராக பதவியேற்றார். 1997ஆம் ஆண்டு தலித் இனத்திலிருந்து திரு. கே. ஆர். நாராயணன் இந்தியாவின் அதிபராக பதவி ஏற்றார். 1994 ஆம் ஆண்டு கருப்பினத்தை சேர்ந்த திரு நெல்சன் மண்டேலா கருப்பினத்தை சேர்ந்த முதல் அதிபராக பொறுப்பேற்றார். அதேபோல் 973 ஆம் குறளிலும் திருவள்ளுவர் கூறியிருக்கும் கருத்து எந்தக் காலத்திற்கும் பொருந்தும் ஒன்றாக அமைகிறது. எண்ணத்திலும் செயலிலும் உயர்வில்லாதவர் உயர் பதவியில் இருந்தும் உயர்ந்தவர் அல்லர். அதே போல் எண்ணத்திலும் செயலிலும் உயர்ந்தவர் உயர் பதவியில் இல்லையென்றாலும் தாழ்ந்தவர் அல்லர்.

*மேல்இருந்தும் மேல்அல்லார் கீழ் இருந்தும்*
*கீழ் அல்லார் கீழ் அல்லர். (973)*

*

## காலத்தினால் செய்த நன்றி

**When the time at which a help is done is considered,**

**Even a small help becomes greater than the world.** *( kural 102 )*

*( Help has to be always weighed with time )*

*காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்*

*ஞாலத்தின் மாணப் பெரிது.( 102 )*

காலத்தி னாற்செய்த நன்றி = *Timely help*

*A five hundred dollar help to a sickly man to buy a life saving medicine is much more than a five thousand dollar help done for his funeral.*

*

## வளரும் சமுதாயம்

# வாழ்த்துகிறோம்




கலாச்சார, சமுதாய, இளையர் அமைச்சு இரண்டு புதிய தலைவர்களை அறிவித்தது.

இந்து ஆலோசனை மன்றத்தின் புதிய தலைவராக திரு. ராஜன் கிருஷ்ணன் பொறுப்பேற்றுள்ளார். அதே போல் இந்து அறக்கட்டளை வாரியத்தின் புதிய தலைவராக ஆர். ஜெயசந்திரன் அவர்களை அமைச்சு அறிவித்துள்ளது. இவர்களின் பணி சிறக்க நம் நல்வாழ்த்துகள்.



சிங்கப்பூரின் ஒரே தமிழ் கற்றல், கற்பித்தல் வள நிலையமான உமறுப்புலவர் தமிழ் மொழி நிலையத்தின் புதிய தலைவராக திரு அன்பரசு நியமிக்கப் பட்டிருக்கிறார். தமிழை வாழும் மொழியாக்கும் முயற்சியிலும், மற்ற தமிழ் அமைப்புகளோடு ஒருங்கிணைந்து செயல்படும் பணியிலும் வெற்றி பெற நம் வாழ்த்துகள்.



விடா முயற்சி விஸ்வரூப வெற்றி என்று நமக்கு நிரூபித்து காட்டிய மருத்துவர் குமரன் ராசப்பனுக்கு சிங்கப்பூர் இளையர் விருது கிடைத்தது மகிழ்ச்சியான செய்தியாகும். தமிழர்கள் நினைத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற அவரின் எண்ணத்தை போற்றுவோம். டான் டொக் செங் மருத்துவ மனையில் பணியாற்றி வரும் இந்த மருத்துவருக்கு மேன் மேலும் விருதுகள் வந்து குவியட்டும்.



சிங்கப்பூரின் புதிய தலைமை சட்ட அதிகாரியாகப் பதவி ஏற்றுள்ள மூத்த வழக்கறிஞர் வி.கே. ராஜாவுக்கு வாழ்த்தை தெரிவிக்கிறோம். சிறுபான்மையினர் உரிமைகளுக்கான அதிபர் மன்ற உறுப்பினராகவும் திரு. ராஜா நியமனம் கண்டுள்ளார். 17 உறுப்பினர்களைக் கொண்ட இம் மன்றம், நகல் சட்டங்கள், மசோதாக்கள் எந்த ஒரு சமய, இனக் குழுக்களுக்கும் பாதகம் ஏற்படுத்துகிறதா என பரிசீலனை செய்யும்.

பொருளியல் ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு சமீபத்தில் நடத்திய உலகளாவிய ஆய்வு ஒன்று சிங்கப்பூரின் 33,000 ஆசிரியர்கள் உலகின் ஆக இளமையான ஆசிரியர் அணியில் உள்ளனர் என்பதனை தெரிவித்தது. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் அந்த ஆய்வு, மேலும் சிங்கப்பூர் ஆசிரியர்கள் கடின உழைப்பாளிகள் என்றும் தெரிவித்தது. அடுத்த தலைமுறையினரை வழிநடத்தும் நம் ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்கள்.

குடியரசில் தமிழ் வளர்ப்பதில் இளையர்கள் அரும் பங்காற்றி வருகின்றனர் என்பதற்கு சிங்கப்பூர் இளையர் தமிழ் மாநாடு ஒரு எடுத்துக்காட்டு. புத்தாக்க சிந்தனை மிக்க இந்த இளைஞர்கள் பல்வேறு ஆய்வு கட்டுரைகளைப் படைத்து கலைகள் மூலம் தமிழ்ப் பண்பாட்டை சிங்கப்பூர் இளையர்களிடம் கொண்டு போய் சேர்க்கும் ஒரு முயற்சி பற்றியும் விவாதித்தனர். வளர்ந்து வரும் இளையர்களுக்கு தமிழின் பால் இருக்கும் அக்கறை மென்மேலும் வளர வாழ்த்துவோம். ஆதரவு தருவோம்.



மலேசியாவின் கெடா மாநிலத்தில் புதிய தமிழ்ப் பள்ளிக்கூடம் ஒன்றுக்கு தமிழவேள் கோ. சாரங்கபாணியின் பெயரைச் சூட்ட அரசாங்கத்திடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன. உலகில் தமிழர்கள் இருக்கும் இடமெல்லாம் தமிழவேள் அவர்களின் பெயரும் புகழும் ஓங்கியே இருக்கும் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. நிச்சயமாகத் தமிழர்கள் பெருமை கொள்ளத் தக்க செய்தி இது.




சிண்டா எனப்படும் சிங்கப்பூர் இந்திய மேம்பாட்டுக் கழகம், தன்னுடைய தலைமை நிர்வாகியாக திரு. குமரன் பரதன் அவர்களை நியமித்தது. கல்வித் துறை அனுபவம் அதிகம் பெற்ற திரு.பரதன், தன் சமூகத் தொண்டினை வெற்றிகரமாகத் தொடர நம் நல்வாழ்த்துகள்.



சிக்கி' எனப்படும் சிங்கப்பூர் இந்திய தொழில் மற்றும் வர்த்தக சம்மேளத்தின் தலைவராக தமிழுலகம் நன்கறிந்த டாக்டர் தேவேந்திரன் தேர்வு செய்யப்பட்டு பதவி ஏற்றுள்ளார். இந்தியத் தொழில்துறையின் வளர்ச்சிக்கு வழி காட்டும் வர்த்தக சபையின் வழி மேலும் பல சாதனைகளை செய்து காட்ட டாக்டர் தேவேந்திரன் அவர்களை வாழ்த்துவோம்.

கடந்த நான்காண்டுகளாக வர்த்தக சபையின் வளர்ச்சிக்குப் பல விதத்திலும் கடுமையாக உழைத்து, தற்போது பதவி விலகும் திரு.நாராயண மோகன், சிங்கப்பூர் அரசின் தொழில் பொருளாதாரக் கொள்கைகளை திறம்பட மக்கள் மத்தியில் உலவ விட்டவர். அன்னாருக்கு நம் பாராட்டுகள். *




# தேர்வரசன்

**குணசேகரன் ஜெகன் விக்னேஷ் 4E**
**சிராங்கூன் கார்டன் உயர்நிலைப் பள்ளி**

குமரவேலு தமிழ்நாட்டில் உள்ள அறந்தாங்கி என்ற ஒரு சிறு கிராமத்தைச் சேர்ந்தவன். ஒரு அசல் கிராமத்தான் எப்படி இருப்பானோ அப்படித்தான் இவன் இருப்பான். ஆனால் மிகவும் கூச்ச சுபாவம் உடையவன். அதனால் மற்றவர்களிடம் அதிகம் பேச மாட்டான். அதே சமயம் படிப்பில் கெட்டிக்காரன். கணிதம், அறிவியல், தமிழ், ஆங்கிலம் என்று எல்லா பாடங்களிலும் மிகத் தேர்ச்சி பெற்றவன். அதனால், எந்த ஒரு தேர்விலும் அவனைத் தோல்வியடையச் செய்வதற்கு யாராலும் முடியவில்லை. இதனால் ‘‘தேர்வரசன்’’ என்ற புனைபெயரும் இருந்தது அவனுக்கு. மேலும் அவனது ஆசிரியர்களுக்கும் நண்பர்களுக்கும் பிடித்த வண்ணம் அவன் நடந்து கொள்வதால் அவனிடம் அனைவரும் அளவில்லா அன்போடு பழகி வந்தனர்.

இப்படி கலகலப்பாகவும் நிம்மதியாகவும் சென்று கொண்டிருந்த அவன் வாழ்க்கையில் திடீரென்று ஒரு சூறாவளி வீசியது. தமிழ்நாட்டில் வேலை பார்த்துக்கொண்டிருந்த அவனது அப்பாவுக்கு சிங்கப்பூரில் நல்ல வாழ்க்கையைத் தரும் வேலை கிடைத்தது. அதனால் தனது மகனுக்கு ஒரு சிறப்பான வாழ்க்கையைச் சிங்கப்பூரால் தரமுடியும் என்று எண்ணிய அவர், அவனை அழைத்துக்கொண்டு சிங்கப்பூருக்குச் சென்றுவிட்டார். அங்கு அவனுக்கு என்னென்னவெல்லாம் நடக்கப் போகிறது என்பதை அறியாமல் சிங்கப்பூரைச் சுற்றிப் பார்க்கத்தான் போகிறோம் என்ற எண்ணத்துடன் சிங்கப்பூரை வந்தடைந்தான். அவன் சிங்கப்பூர் வீட்டை வந்தடைந்ததும் தனது அம்மாவின் புகைப்படத்தை சுவற்றில் மாற்றி அதற்கு மாலையிட்டு ‘‘எங்களை இங்கு நல்லபடியாக கொண்டு வந்து சேர்த்ததற்கு நன்றி’’ என்று கூறினான். அம்மா இல்லாத பிள்ளை என்பதால் அவனுடைய தந்தையும் அவனுக்கு அதிக செல்லம் கொடுத்து அவனை வளர்த்தார்.

இதனாலேயே தனது தந்தை எதைக் கூறினாலும் அதைத் தட்டாமல் செய்து முடிப்பவன் குமரவேலு. அவன் சிங்கப்பூருக்கு வந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. குமரவேலுவின் அப்பா ‘‘சீக்கிரமாக குளித்து தயாராகு. நாம் ஒரு முக்கியமான இடத்துக்குப் போக வேண்டும்’’ என்று கூறியதும் பம்பரம் போல் சுழன்று தயாரானான். இருவரும் வாடகை உந்து வண்டியில் பயணிக்க ஆரம்பித்தனர். ‘‘அப்பா! நாம் எங்கே போகிறோம்?’’ என்று ஆவலுடன் கேட்டான். அதற்கு அவர், ‘‘போன பிறகு உனக்கே தெரியும். மேலும் உனக்கு மிகவும் பிடிக்கும்’’ என்று கூறினார்.

வாடகை உந்துவண்டி சிராங்கூன் கார்டன் உயர்நிலைப் பள்ளியில் போய் நின்றது. இருவரும் இறங்கி பள்ளிக்கு வெளியே நின்று பள்ளியைப் பார்த்தனர். ‘‘ஏனப்பா இங்கே வந்திருக்கிறோம்?’’ என்று குழப்பத்துடன் கேட்டான். அதற்கு அவர் ‘‘இனிமேல் நீ இங்குதான் உனது பள்ளிப்படிப்பைத் தொடரப் போகிறாய்!’’ என்று மகிழ்ச்சியுடன் கூறினார். இதைக் கேட்ட குமாரவேலுவுக்குத் தலையில் இடி விழுந்தது போல இருந்தது. ‘‘நீ இங்கு படித்தால் தான் எனது ஆசை போல நீ ஒரு மருத்துவர் ஆக முடியும்’’ என்று ஆனந்தத்துடன் கூறினார்.

‘‘ஆனால் எனக்கு ஆங்கிலமே பேச வராதே. அப்படியும் பேசினால் தப்பும் தவறுமாகத்தானே இருக்கும்; அதனால், நான் எப்படி ஒரு ஆங்கிலப் பள்ளியில்.......’’ என்று தன்னிடமே பேசிக் கொண்டான். ஆனால் தந்தையின் முகத்தில் அவன் கண்ட அந்த மகிழ்ச்சியை வீணடிக்கக்கூடாது என்று எண்ணி மலர்ந்த முகத்துடன் ‘‘எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது அப்பா’’ என்று கூறினான். அடுத்த நாள், அதாவது அந்தப் பள்ளியில் அவனுடைய முதல் நாள் பள்ளிக்குச் சென்ற அவன், தன் வகுப்பில் ஒரு மூலையில் உட்கார்ந்தான். பிறகு வகுப்புக்கு வந்த வகுப்பாசிரியர் அவனை அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். ஆனால் அவனோ யாரிடமும் வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்கும் தலையை ஆட்டியே பதிலளித்தான். பேசுவதற்கு வெட்கப்படுகிறான் என்று ஆசிரியர் நினைத்துக் கொண்டார்.

பிறகு அவனுடைய பள்ளி மாணவர்கள் அவனிடம் பேச முயன்றனர். அவனும் அவர்களிடம் பேச முயன்றான். தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் அவன் பேசிய போது அவர்கள் ஏளனமாக அவனுடைய ஆங்கிலத்தைப் பார்த்துச் சிரித்தது மட்டுமல்லாமல் அவனையும் கேலி செய்ய ஆரம்பித்து விட்டனர். இந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல், வீட்டுக்குச் சென்றதும் தனது அம்மாவின் புகைப் படத்தைப் பார்த்து தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டான். இதைப் பற்றி விசாரிப்பதற்கோ அவன் அப்பா வீட்டில் இல்லை. இதைப் பற்றிச் சொன்னால் தனது தந்தை வருத்தப் படுவாரோ என்று எண்ணி அவரிடமிருந்து அதை மறைத்து விட்டான்.

அதேபோல் பலரும் அவன் ஆங்கிலத்தைக் கேட்டு அவனைக் கேலி செய்தனர். நாட்களும் உருண்டோடின. அனைத்து அவமானங்களையும் தன்னுள் போட்டு புதைத்துக் கொண்டு பள்ளிக்குச் சென்று வந்தான். இப்படியிருக்கும்போது அவனுடைய வாய்மொழித் தேர்வு வந்தது. அதில் ஒரு வாக்கியத்தைக் கூட ஒழுங்காகச் சொல்ல முடியாமல் வெட்கத்துடன் தலைகுனிந்து நின்றான். தேர்வில் தோல்வியும் அடைந்தான். இதைப்பற்றி அவனது ஆசிரியர் அவனுடைய அப்பாவை அழைத்து பேசினார். அதற்கு அவர், ''இவன் போகப் போக எல்லாவற்றையும் கற்றுக்கொள்வான். அதனால் நீங்கள் கவலைப்பட வேண்டாம்.'' என்று அரைகுறை ஆங்கிலத்தில் கூறினார். பிறகு, அவர் குமாரவேலுவிடம் ''உன்னால் கண்டிப்பாக ஆங்கிலத்தில் சிறப்பாக பேச முடியும்'' என்று ஊக்கமளித்தார். ''ஆனால் நான் பேசும்போதெல்லாம் அனைவரும் சிரிக்கிறார்களே அப்பா'' என்று அவரிடம் கூற முடியாமல் ''சரி அப்பா'' என்று கூறினான்,

அவனுடைய தந்தை பள்ளியை விட்டு சென்றதும், அவனுடைய ஆசிரியர் இன்னொரு ஆசிரியரிடம் ''அப்பா இப்படி இருந்தால் பிள்ளை எப்படி இருப்பான்?'' என்று கேலியாக கூறியதைக் கேட்டதும் அவமானத்தில் வெட்கித் தலைகுனிந்தான். அப்போது அவனுடைய மனசாட்சி அவன் முன் தோன்றி ''இப்படி உன்னையும் உன் அப்பாவையும் ஏளனமாக பேசியவர்கள் முன் நீ நன்றாக ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று கூறியது. அன்றிலிருந்து நன்றாக ஆங்கிலம் பேச தனது சில நண்பர்களுடனும், ஆசிரியர்களுடனும் ஆங்கிலத்தில் பேச முயற்சி செய்தான். மேலும் இணையத்தில் சென்று எவ்வாறு ஆங்கிலம் பேசுவது என்பதையும் அதிக முயற்சியுடன் ''என்னால் முடியும்'' என்ற நம்பிக்கையுடன் பேசிப் பழக ஆரம்பித்தான்.

ஒவ்வொரு முறையும் அவன் பேசியதைக் கேட்டு சிரித்தவர்களை ஊக்கமாக வைத்துக்கொண்டு விடாமுயற்சியுடன் பேசிப் பழகினான். நாளடைவில் அவன் பேச்சாற்றலும் வளர்ந்தது. ஆங்கிலத்தில் பேசத் தடுமாறியவனாக இருந்தவன், தனது பள்ளியில் நடந்த பேச்சுப் போட்டியில் ஆங்கிலத்தில் சரளமாக நன்றாக பேசி அனைவரையும் மூக்கின் மேல் விரல் வைக்கச் செய்தான். மேலும் தனது அப்பாவுக்கும் தன்னால் முடிந்த அளவுக்கு ஆங்கிலம் பேச கற்பித்தான்.

இப்படி அவன் பள்ளியிலிருந்து அவனுள் ஏற்பட்ட அந்தத் தீ அவனை ஒரு எழுச்சிமிக்க ஆங்கிலப் பேச்சாளனாக்கியது. அதனால் அவன் அன்று அவர்கள் குமாரவேலுவின் ஆங்கிலத்தைப் பார்த்து கேலி செய்ததை நினைவில் வைத்துக்கொண்டு கடினமாக விடாமல் முயற்சி செய்ததால் தான் அவனால் ஒரு பேச்சாளனாக முடிந்தது. அதனால் ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் தோல்வி அவமானம் என்று பலவற்றை சந்தித்தாலும் மனதில் உறுதியோடும் ''என்னால் முடியும்'' என்ற எண்ணத்துடனும் முயற்சி செய்தால் வெற்றியடைய முடியும் என்பதை நாம் நம்ப வேண்டும். இதையே தான் நமது ஒளவை பாட்டியும் ''ஊக்கமது கைவிடேல்'' என்றார்.

*



ஜெர்மனிக்கு உருண்டோடிய காற்பந்து



# உலகக் கிண்ணம்

உலகக் கனவுகள் அனைத்தும் இன்று முடிவுக்கு வந்தன! ஒடிச் சுழன்று கொண்டிருந்த உலகக் காற்பந்தின் ஓட்டத்தை வெற்றிகரமாக அணைபோட்டு நிறுத்தித் தங்கள் கனவை நிறைவேற்றிக் கொண்டது ஜெர்மானியக் குழு. உலக நாடுகளுக்கெல்லாம் சிகப்புக் கம்பளம் விரித்த பிரேசில், ஜெர்மனிக்கு 7 கோல் தந்து வெற்றிப் பாதை போட்டுத் தந்ததும், படு தோல்வியை ஏற்று நெதர்லாந்தை வெண்கலத்துக்கு சிபாரிசு செய்ததும் பரிதாபத்திற்குரிய எதிர்பாராத நிகழ்வுகள்! அர்ஜெண்டினாவின் ஆக்ரோஷம், ஜெர்மனியை வீழ்த்தும் என்ற நம்பிக்கையும் தவிடு பொடியானது இன்று! ஜெர்மனி கண்ட கனவு நல்ல கனவு!

தென் அமெரிக்காவில் உலகக் கிண்ணம் வென்ற முதல் ஐரோப்பிய அணி என்கிற பெருமையை ஜெர்மனி உலகக் கால் பந்து போட்டி விளையாட்டில் நிரூபித்தது. இந்த கோப்பையை பெறுவது ஜெர்மனிக்கு புதிதல்ல. 24 ஆண்டுகளுக்குப் பின் நான்காவது முறையாக மீண்டும் கிண்ணத்தை ஏந்தும் வாய்ப்பை பெற்றது ஜெர்மனி. வெறும் விளையாட்டாக மட்டும் விளையாடாமல் சக போட்டியாளர்களை மரியாதையுடனும் நடத்தியது என்று பெயர் பெற்றது. 112 நிமிடங்கள் கோல் வலையை நோக்கி பலமுறை பந்தை அனுப்பினாலும் அந்த வாய்ப்புகள் கோலாக மாற்ற முடியவில்லை என்றாலும் விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி என்று 113 ஆம் நிமிடம் நிரூபித்தது ஜெர்மனி அணி.

இந்த உலகக்கிண்ணம் எந்த ஒரு நாட்டிற்கும் சொந்தமானது அன்று. ஒவ்வொரு போட்டிக்கும் அதே மாதிரி கிண்ணத்தை புதுப்பித்து தரப்படுகிறது. விளையாடிய அனைவருக்கும் மற்றும் அந்த அணியின் மேலாளர், மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கும் பதக்கம் தங்கத்திலோ, வெள்ளியிலோ அல்லது வெண்கலத்திலோ வழங்கப்படும். இந்த உலகக் கிண்ணத்தின் பரிசுத்தொகை விவரம் பின்வருமாறு:

முதல் இடம்: 35 மில்லியன் வெள்ளி US (ஜெர்மனி)

2ஆம் இடம்: 25 மில்லியன் வெள்ளி US (அர்ஜென்டினா)

3ஆம் இடம்: 22 மில்லியன் $ (நெதர்லாந்து)

4ஆம் இடம்: 20 மில்லியன் $ (பிரேசில்)

கால் இறுதி சுற்றில் தோற்றவர்கள்:

14 மில்லியன் வெள்ளி (4 அணிகளுக்கு) முதல் சுற்றில் வெளியேறிய 16 அணிகளுக்கு 8 மில்லியன் வெள்ளி.

- ராம்



# சினிமாவில் இலக்கியம்!

திரைதாசன்



பி பி சீனிவாஸ்

சினிமாவில் இலக்கியங்களின் ஆதிக்கம் கொஞ்சநஞ்சமல்ல. சொல்லப்போனால், ஒரு காலத்தில் இலக்கியத்தை நம்பியே சினிமா வாழ்ந்திருக்கிறது. அதற்கு ஒரே காரணம், அந்தக் கால நாடக மேடைகளில் இலக்கிய நாடகங்களே அதிகம் இடம் பெற்றன.

நாடகங்களிலிருந்து தான், ஆரம்ப கால சினிமா தோன்றியது. ஊமைப் படம் பேசத் தொடங்கியதும் தமிழ் நாட்டு நாடகங்களை பம்பாய், கல்கத்தாவுக்கு வரவழைத்து , அவற்றை அப்படியே படமாக்கும் முறை தான், முதலில் வந்த படங்களின் வளர்ச்சியாகும். படத் தயாரிப்பில் இருந்த வட இந்தியர்கள் , தமிழ் தெரியாமலேயே நாடக ஆசிரியர்களின் ஆலோசனைப்படி படம் எடுத்தனர். ஆக, தமிழ் இலக்கியங்களே சினிமாவுக்கும் கை கொடுத்தன. ராமாயணம், மகாபாரத கதைகளே பிற்காலத்திலும் மாற்றி மாற்றி எடுக்கப்பட்டன. ஒரே ஆண்டில் ஒரே புராணக் கதை இரு முறை எடுத்ததும் உண்டு

அப்படி வந்த கதை 'திரௌபதி வஸ்திராபரணம்'.(1934). 'வீர அபிமன்யு' கதை மூன்று முறை படமாக்கப்பட்டது. இவற்றில் 1948ல் வெளியான அபிமன்யுவில் எஸ்.எம்.குமரேசன் என்ற நடிகர் அபிமன்யுவாக நடித்தார். அதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் தெரியுமா? புராணப் படமான இதற்கு வசனம் எழுதியவர்களில் கலைஞர் கருணாநிதி ஒருவர். மற்றொரு சீர்திருத்தவாதியான ஏ.காசிலிங்கம் டைரக்டர். இன்னொரு செய்தியும் இருக்கிறது. அன்று தீவிர காங்கிரசாக இருந்த எம்.ஜி.ஆர். இதில் அர்ஜூனனாக நடித்தார். அப்போதெல்லாம் சினிமாவில் அரசியல் புகவில்லை. இப்போது அரசியலில் சினிமா புகுந்துவிட்டது.

கம்ப நாட்டாழ்வாரும், வில்லிப்புத்தூர் ஆழ்வாரும் தமிழர்களுக்குக் கொடுத்த இலக்கியங்கள் நீண்ட காலமாகவே திரையை ஆக்கிரமித்துள்ளன. நம் கண்ணுக்கு எட்டிய காலத்தில் நாம் கண்ட இதிகாசக் கதைகள் கர்ணன், மாயாபஜார் போன்றவை அதிகம் ரசனைக்குள்ளானவை. சிவாஜி, சாவித்ரி, என்.டி.ராமராவ் அற்புதமாக நடித்து இன்னமும் நெஞ்சை விட்டகலாத சித்திரம் கர்ணன்.

'மாயா பஜார்' திரையில் கே.வி.மகாதேவன் இசையும், சுசிலா பி.பி.சீனிவாஸ் குரலும், எல்லாவற்றுக்கும் சிகரமாக கண்ணதாசனின் பாடல்களும் உயிர் நாடிகள்!

*'பார்த்தேன் சிரித்தேன்*
*பக்கத்தில் அழைத்தேன் அன்று*
*உனைத்தேன் என நான்நினைத்தேன் அந்த*
*மலைத்தேன் இதுவென மலைத்தேன்.*

*பார்த்தேன் சிரித்தேன்*
*பக்கம் வரத் துடித்தேன் அன்று*
*உனைத்தேன் என நான் நினைத்தேன் அந்த*
*மலைத்தேன் இவரென நினைத்தேன்.*

பாடல்களுக்காகப் பேசப்பட்ட படம் அபிமன்யு. கண்ணதாசனைப்பற்றியே பேசித் தீர்த்தது ரசிக்கக் கூட்டம்! இந்தப் படம் வெளிவரும்போது கலைஞருக்கும் கண்ணதாசனுக்கும் பழிச் சண்டை! பேச்சு வார்த்தை கிடையாது. ஆனாலும் அதையெல்லாம் மறந்துவிட்டு கலைஞர் இந்தத் தேன் பாட்டை மனம் விட்டுப் பாராட்டினார்.

*துளித்தேன் சிந்தாமல் களித்தேன்கைகளில்*
*அணைத்தேன் அழகினை ரசித்தேன்*

என்ற வரிகளுடன் முடித்துக் கொள்கிறேன். *

# அம்மா அம்மாதான்

இசைஞானி இளையராஜா



எங்களுக்குச் சிறுவயதில் பள்ளி செல்லும் நாட்களில் காலையில் பள்ளிக்கு கிளம்பும் போது அம்மா போயிட்டு வர்றேன் என்று சொல்லிவிட்டுப்போகும் பழக்கமெல்லாம் கிடையாது. புத்தகப் பையை எடுத்துவிட்டால் அம்மாவைப் பார்ப்போம் நானும் பாஸ்கரும்; அம்மா சுருக்குப் பையிலிருந்து காலணாவோ, அரையணாவோ சமயத்தில் ஓரணாவோ இருவருக்கும் கொடுப்பார்கள். பள்ளியின் இடைவேளையில் கடலை மிட்டாய் அல்லது வேறு ஏதாவது தின்பதற்காக!

இசையமைப்பாளனாக ஆகியபின் கார்த்திக், பவதா, யுவன் மூவரும் ஸ்கூலுக்குக் கிளம்பிக் காரில் ஏறும்போது மம்மி டாட்டா! டாடி டாட்டா என்று கையை ஆட்டிவிட்டு போகும் போது என் அம்மாவுக்கும் சேர்த்து அப்பாம்மா டாட்டா என்பார்கள். அப்பாம்மா என்றால் அப்பாவினுடைய அம்மா!

அது அம்மாவுக்குச் சந்தோஷத்தைத் தரும் என்றாலும் ஸ்கூல் இல்லாத நாட்களில் நான் ரெக்கார்டிங்கிற்கு கிளம்பும் போது குழந்தைகள் எனக்கு டாடி டாட்டா! என்று கேட்பார்கள்! நானும் அம்மா என்பதை அவர்கள் சொல்வதுபோல் மாற்றி மம்மி டாட்டா என்று கையை ஆட்டிவிட்டு காரில் ஏறுவேன் விளையாட்டாக ஆரம்பித்த அந்தப் பழக்கம் அப்படியே தொடர்ந்துவிட்டது.

இன்னமும் அம்மா டாட்டா என்று சொல்லி விட்டுப் போகாவிட்டால் ஏதோ மறந்துவிட்டு வந்தாற்போல் இருக்கும். அம்மா போனபிறகு அப்போதும் கூட ரெக்கார்டிங்கிற்குக் கிளம்பினாலும் அல்லது எங்கு கிளம்பினாலும் பூஜை அறையின் எதிர்த்தாற்போல் திறந்திருக்கும் அம்மாவின் ரூமில் அவர்கள் புன்னகையோடு இருக்கும் போட்டோவிற்கு டாட்டா சொல்லி கையை அசைத்துவிட்டுப் போவதுதான் வழக்கமாகிவிட்டது. அம்மாவின் உடம்பு மட்டும்தான் அம்மாவா? அவர்களின் நினைவும் அம்மா அல்லவோ? அவர்களின் போட்டோவும் அம்மாதானே. போட்டோ எடுக்கும்போது அந்த நொடி உண்மையான நொடி என்றால் அந்த நொடியில் பதிவு செய்யப்பட்ட உணர்வு பூர்வமான அந்த உருவமும் உண்மைதானே? அன்பின் உருவமே அல்லவா?

## இசைஞானியின் வெண்பா நன்மாலை

*தாயை சரண்புகுதல்*

*இருள்சேர் வினையால் இருளில் கிடந்தேன்*
*பொருள்சேர் பொருளை மறந்தேன் அருளார்ந்த*
*அன்னை திருத்தர்பிடித்தேன் மடிவைத்தேன்*
*இன்னலே இல்லை இனி*
*இருள்சேர் வினையால் இருளில் கிடந்தேன்*
*அறியாமையை உண்டாக்கும் தீவினையினால்*
*மயக்கத்தில் கிடந்தேன்*
*பொருள்சேர் பொருளை மறந்தேன்*
*மெய்ம்மையோடு கூடிய பொருளாகிய*
*இறைவனை மறந்ததேன். இப்போது*
*அருளார்ந்த அருள் நிறைந்த*
*அன்னை திருத்தாள் பிடித்தேன் முடிவைத்தேன்*
*தாயின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு என்*
*தலையால் வைத்து வணங்கினேன்.*
*இன்னலே இல்லை இனி*
*இனித்துன்பம் என்பதே எனக்கு இல்லை.*

இருள் முன்னது அறியாமையையும் பின்னது இவ்வுலக வாழ்வே எல்லாம் என்று கருதி இறைவனை மறந்து வாழும் நிலையினையும் சுட்டிற்று. தோற்ற ஒடுக்கங்களையுடையனவாய்த் தூய்மையற்றவனாய்க் குணத்தினும் குற்றங்களே மிக்கனவாய் உள்ள உலகியற் பொருள்களினும் வேறுபட்டதாய் நித்தியமாய், ஒன்றேயாய் இருத்தல் பரம்பொருள் ஒன்றேயாதலின் அதனைப் பொருள் என்று அடையின்றிச் சுட்டினார். கன்றினைக் கொண்டு பசுவின் பாலைப் பெறுதல் எளிதாமாறு போலத் தாயின் பரிந்துரை கொண்டு ஐயனின் அருளைப் பெறுதல் எளிதாதலின் தாயின் திருவடிகளைச் சரண் புகுந்தார். இறைவன் திருவடிகளில் தஞ்சம் புகுந்தார் துன்பமின்றி இன்பமே உறுதலை.

*ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்*
*இன்பமே எந்நாளும் துன்பமில்லை*

என்னும் திருநாவுக்கரசர் திருவாக்கால் அறியலாம். இப்பாட்டு இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு

நல்வினையாலும் பிறவி வரும் தீவினையாலும் பிறவி வரும் இறைவனைப் போற்றிச் சேருபவர்களுக்கே பிறவியில்லை எனும் பொருள் தொனிக்க திருக்குறளினை அடியொற்றி அமைந்துள்ளது இது நேரிசை வெண்பா சேர்வினை பண்புத் தொகை.

- முல்லைச் சரம்

*

# அரசாங்க உதவியுடன் சுகாதாராப் பராமரிப்புகள்

வரை (செப்டம்பர் 2014)

- மேலும் 13 மருந்துகளுக்குக் கட்டணக் கழிவு வழங்கப்படும் (ஏப்ரல் 2014)
- குறைந்த மற்றும் நடுத்தர வருமான பிரிவினர் பலதுறை மருத்துவகங்கள் (Polyclinics) மற்றும் நிபுணத்துவ வெளிநோயாளி மருத்துவகங்களில் (SOCs) மருந்துகளுக்கு மேலும் அதிக கட்டணக் கழிவுகளைப் பெறுவர் (ஜனவரி 2015)

## மெடிசேவ் கணக்கில் பணம் நிரப்பப்படும் திட்டமும் அறிவிக்கப்பட்டுள்ளது

- 65 ஆண்டு காலத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் $200 வரை நிரப்பப்படும் 1959ல் மற்றும் அதற்கும் முன்னதாக பிறந்த முன்னோடி அல்லாதவர்களுக்கு (ஆகஸ்ட் 2014)
- வெளிநோயாளி மருத்துவக் கட்டணங்களுக்கு மெடிசேவ் கணக்கை மேலும் நீக்குப் போக்கான முறையில் பயன்படுத்த முடியும்
- வெளிநோயாளி ஊடுகதிர்ப்படம் (Scan) எடுக்க மெடிசேவ் கணக்கிலிருந்து ஆண்டுக்கு $300வரை பயன்படுத்த முடியும்

## மெடிஷீல்டு லைப் சந்தாக் கட்டணங்களுக்குக் கழிவுகள் தரப்படும்

- குறைந்த மற்றும் நடுத்தர வருமானச் சிங்கப்பூரர்களுக்கு வழங்கப்படும் (2015ன் பிற்பகுதி).

## கூடுதல் அனுகூலங்கள்

## வெளி நோயாளிப் பராமரிப்புக்குக் கூடுதல் உதவி

- பலதுறை மருத்துவகங்கள் மற்றும் நிபுணத்துவ வெளிநோயாளி மருத்துவகங்களில் கழிவு வழங்கப்பட்ட சிகிச்சைகளுக்கு மேலும் 50% கழிவு வழங்கப்படும் (செப்டம்பர் 2014)
- முன்னோடித் தலைமுறை அட்டை சமூக சுகாதார உதவித்திட்டத்தில் சாஸ் பங்கெடுத்துள்ள தனியார் மருத்துவங்கள் மற்றும் பல மருத்துவகங்களில் எல்லா முன்னோடிகளும் சிறப்புக் கட்டணக் கழிவுகளைப் பெறுவர் செப்டம்பர் 2014
- உடற்குறையுள்ளோருக்கும் உதவியாக ஆண்டுக்கு 1,200 ரொக்கம் வழங்கப்படும் (செப்டம்பர் 2014)

## மெடிசேவ் கணக்கில் பணம் நிரப்பப்படும் என்பதை நீங்கள் அறிவீர்களா?

- வாழ்நாள் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் 200 - 800 நிரப்பப்படும் (ஜூலை 2014)

## மெடிசேவ் கணக்கில் பணம் நிரப்புவது மூலம் மெடிஷீல்டு லைப் சந்தாக் கட்டணங்களுக்குக் கழிவுகள் கிடைக்கின்றன.

- எல்லா முன்னோடிகளுக்கும் 2015ன் பிற்பகுதி
  - ✓ 2014ல் 80 மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதினர்: இவர்களுக்கான சந்தாக் கட்டணம் முழுமையாகச் செலுத்தப்படும்.
  - ✓ தற்போது மெடிஷீல்டு திட்டத்தில் உள்ள 65முதல்



79வயதானவர்கள்: தற்போதைய சந்தாக் கட்டணங்களில் பாதியைச் செலுத்தினால் போதும்.

## முதியோர் பராமரிப்பு

- ✓ வீட்டில் முதியோர் மறுவாழ்வு பராமரிப்புக்கும் வீட்டுச் சூழல் முதியோருக்கும் பாதுகாப்பானதா என்று மதிப்பிடுவதற்கும் கட்டணக் கழிவு அளிக்கப்படும்.
- ✓ இடைக்காலப் பராமரிப்பவர் சேவை எல்லாப் பொது மருத்துவமனைகளுக்கும் நீட்டிக்கப்படும்.
- ✓ வீட்டில் முதியோர்ப் பராமரிப்புச் சேவையை வழங்கும் நிறுவனங்களுக்கு மேம்பட்ட நிதி உதவி

## தரமான சேவைகள்

- ✓ வீட்டில் முதியோர் பராமரிப்புக்கான புதிய வழிமுறைகள்
- ✓ வீட்டில் முதியோர்ப் பராமரிப்பு இன்னும் கூடுதலாய் ஒருங்கிணைக்கப்பட்டு வாடிக்கையாளரை மையப்படுத்தும்

## கூடுதல் ஆதரவு

- ➢ பராமரிப்பவருக்குச் சிறிது ஓய்வு கொடுக்க பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள் வார இறுதிகளில் முதியோரைக் கவனித்துக்கொள்ளும் சேவைகள் வழங்கும்.
- ➢ பராமரிப்பவருக்கு உதவியாகப் பலசேவைத் தொலைபேசி நிலையம் தொடங்கப்படும்.

## சுகாதார வசதிகள்

- ➢ இப்போது முதல் 2020ம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டும் சராசரியாக ஒரு புதிய மருத்துவமனை பொது அல்லது சமூக மருத்துவமனை.
- ➢ சமூகத்தில் கூடுதல் தாதிமை இல்லங்கள், சமூக மற்றும் வீட்டு சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள்.
- ➢ அக்கம் பக்கங்களில் கூடுதல் சமூக சுகாதார நிலையங்கள் மற்றும் குடும்ப மருத்துவகங்கள் அமைக்கப்படும்.


RiGHTMiND
advertising agency

services:
branding
broadcast design
print design
web design
corporate video

address:
546A Serangoon Road,
Singapore, 218168.
(near Perumal Temple)

email:
contact@rightmindgroup.com


Scan this QR Code with your mobile reader.

Don't have the app? Search ' Qr code reader' in your app store.

www.rightmindgroup.com

We help our customers grow their businesses with our creative services, Some of our creative works are below.





# நம்மோடு வாழும் கோ. சாரங்கபாணி

ராம்

சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் தமிழ் வளர்த்து, தமிழ் மக்களை கல்வியிலும், வாழ்க்கைத் தரத்திலும் உயர்த்தப் பாடுபட்டவர்களில் அமரர் கோ.சாரங்கபாணி அவர்கள் குறிப்பிடத் தகுந்தவர். தமிழகத்தின் திருவாரூரில் 1903ல் பிறந்த கோ.சா. 1924ல் சிங்கப்பூருக்கு வந்தவர். 1935ல் தமிழர் சீர்திருத்த சங்கம் துவக்கிய தமிழ் முரசு நாள் ஏட்டை பிற்காலத்தில் சொந்தத்தில் நடத்திய அவர், அதன் வழி தமிழ் உலகிற்கு மாபெரும் சேவை செய்தார்.

தமிழர் திருநாள் என்கிற தமிழர் ஒற்றுமை விழாவை நாடெங்கும் செயலாற்றிய கோ.சா., சமூக விழிப்புணர்வுகளையும், எழுச்சியையும் ஏற்படுத்த தமிழ் முரசு இதழை நன்கு பயன்படுத்தினார். சிங்கப்பூர் குடியுரிமை எளிதாக வழங்கப்பட்ட அந்நாளில், நம் மக்கள் தயக்கம் காட்டியபோது, முழு மூச்சுடன் குடியுரிமை பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வெற்றி பெற்றவர்.

மலாயா பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை, சிங்கப்பூரில் தமிழைவிட சமஸ்கிருதம் சிறந்தது எனக் கூறிய நீலகண்ட சாஸ்திரிக்கு எதிர்ப்பு , 'தமிழ் எங்கள் உயிர்' இயக்கம், மலாயா மாநிலங்களில் தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள் வழி மொழி வளர்ப்பு, மாணவர்களுக்காக தமிழ் முரசில் மாணவர் மணி மன்றம், மலேசியத் தமிழ் மணி மன்றங்கள் போன்ற பலவழிப் பாதைகளில் பயணம் செய்து தமிழ் வாழ, தமிழர் வாழ பாதை வகுத்தவர் அமரர் சாரங்கபாணி அவர்கள். 1974ம் ஆண்டில் நம்மைப் பிரிந்த அவர் , இன்றும் அவர் வளர்த்த தமிழில், நாம் வளர்க்கும் தமிழில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் சுவாசித்த தமிழ் முரசு இன்னமும் நம்மிடையே உள்ளது! *

## நன்றிக்குரியவர்கள்

*(31ம் பக்கம் தொடர்ச்சி)*

"தற்போது நடந்து வரும் இரண்டாவது கட்ட நடவடிக்கைக்கு, தமிழின் பேச்சுத் தன்மையைப் புலப்படுத்தும் ஒலிப்பதிவுகள் தேவைப்படுகின்றன. அவை அனைத்துமே விதவிதமான குரல் அமைப்பிலும், வித்தியாசமான வார்த்தைகளுடனும் இருத்தல் அவசியம். மொழி ஆர்வலர்கள் இந்த ஆய்வுக்கு உதவுவது மிகவும் பலன் தரும். உங்கள் வசதிக்கேற்ப போனவிஸ்தாவில் உள்ள எங்கள் மொழி ஆய்வு நிலையத்திற்கு வந்து உங்கள் குரலை ஒளிப்பதிவு செய்து உதவுங்கள்" என வேண்டிக் கொள்கிறார் திரு.முத்தழகு மெய்யப்பன். நீங்கள் தனியாகவோ, குழுவாகவோ சென்று ஒளிப்பதிவில் கலந்து கொள்ளலாம். திரு.முத்தழகு மெய்யப்பனின் தொலைபேசி எண் : 96166961. *

## நான்கு 'ரா'க்கள்!

*(21ம் பக்கம் தொடர்ச்சி)*

*தேசியப் பல்கலைக் கழகத்தில் பொறுப்பான பணியில் இருந்து வரும் ராஜாராம், தமிழுக்காகச் செய்யும் பல பணிகளில் தமிழ் மொழி மாதம் தலையானது. எல்லா அமைப்புகளுடனும் சுமூக உறவு கொண்டு, அனைவரையும் அரவணைத்து, மொழி சிறப்பு மிக்க நிகழ்ச்சிகளை கலந்தாலோசித்துத் தருவதில் ராஜாராம் காட்டும் ஆர்வம் பாராட்டுக்குரியது. அரசாங்க உதவியுடன் நடைபெறும் இந்த நிகழ்ச்சியை பொறுப்புணர்வுடன் நடத்தும் திரு.ராஜாராமுக்கு நம் வாழ்த்துகள்.*

*நற்பணி பேரவையின் ராமமூர்த்தி*

*மக்கள் கழகத்தின் இணையாகத் தோன்றி நீண்ட கால சேவை புரியும் நற்பணி பேரவையின் தலைவர் திரு.கே. ராமமூர்த்தி, கல்வித்துறையாளராகப் பணியாற்றினாலும், தமிழ்ப் பணிகளில் பள்ளிப் பருவத்திலிருந்தே ஈடுபடுத்திக் கொண்டவர். பள்ளி நாட்களில் ராஜேஸ்வரி, ராஜசேகர், ராஜாராம் ஆகியோருடன் இணைந்து, தான் சார்ந்த பள்ளியின் சார்பில் சொற்போர் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு வெற்றி பெற்றவர்தான், இன்று அதே நிகழ்ச்சியை மக்கள் மன்றத்தின் முன் நடத்திக்காட்டி வருபவர். தமிழ் மொழி மாதத்தின் இறுதி நிகழ்வாக இடம்பெறும் "சொற்போர்", ராமமூர்த்தி தலைவராக உள்ள நற்பணி பேரவையின் அளிப்பாகும். இந்திய சமூகத்தை ஒன்று திரட்டவும், அவர்களின் கலை, கலாச்சார உணர்வுகளை வெளிக் காட்டவும் சிறப்பாகப் பணியாற்றும் நற்பணிப் பேரவையின் தலைமைத்துவத்தை அண்மையில் தான் அதன் முன்னாள் தலைவர் திருநாவுக்கரசு அவர்களிடமிருந்து ராமமூர்த்தி பெற்றார். திரு அவர்கள் விட்டுச் சென்ற நற்பணிகளை இவர் இன்று செயலாற்றி வருகிறார். தேசிய தினக் கொண்டாட்டத்தை ஒட்டி இடம் பெறும் 'சிங்கே' ஊர்வலத்தில் பேரவையும் கலந்து கொள்கிறது என அறிகிறோம்.*

*சிறு தகவல்: மேலே உள்ள படத்தில் காணப்படும் ராஜேஸ்வரி கோபால், ஏ.பி.ராமனின் மூத்த மகள். நால்வரும் பள்ளி இணை மாணவர்கள்.*

*- அ.ப.ரா*

# தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்

**35 ஆண்டு கால மொழி பண்பாட்டுச் சேவை!**

சிங்கப்பூரில், "தமிழைக் கற்கவும், அன்றாட வாழ்க்கையில் அதனைப் பயன்படுத்தவும் ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதோடு, இந்தியப் பண்பாட்டுக் கூறுகளைப் பேணிக் காப்பதையும் தலையாய நோக்கமாகக் கொண்டு தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது" என்ற கொள்கைப் பிரகடனத்தோடு 1980ல் துவங்கப்பட்டது தான் சிங்கப்பூர் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம். இந்திய சிறுவர்களின் கல்வித்தர மேம்பாடு மற்றும் தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவற்றை பரப்புதல் உள்பட பல தொடக்க கால நோக்கங்களுடன் துவங்கப்பட்ட இந்தக் கழகம் காலப் போக்கில் பல்வேறு முன்னேற்றமான மாறுதல்களைக் கண்டுள்ளது. இந்திய இசை, நடனம், போன்றவற்றில் தான் நேரடியாக ஈடுபடாமல், இவற்றில் ஏற்கனவே முனைந்திருக்கும் அமைப்புகளுக்குத் தன் ஆதரவை அளிப்பது என கழகம் முடிவெடுத்தது.

அதே போல் துணைப் பாட வகுப்புகளை படிப்பில் பின்தங்கியிருந்த மாணவர்களுக்குக் கழகம் நடத்தியது. பிள்ளைகளின் படிப்பில் பெற்றோர்கள் ஆர்வமும் அக்கறையும் காட்டினால் முன்னேற்றம் எளிதாகும் என்ற அடிப்படையில் கழகம் "உங்கள் பிள்ளையால் முடியும்" என்ற தலைப்பில் பெற்றோரை எட்டும் திட்டம் ஒன்றை வகுத்தது. 1987ஆம் ஆண்டிலிருந்து குடும்பதின விழாவை கழகம் ஏற்பாடு செய்து நடத்தியுள்ளது. முதன்முதலில் பட்டிமன்ற நிகழ்ச்சிகளைப் பல சமூக மன்றங்களில் நடத்தியது. குடியரசின் மற்ற சில அமைப்புகள் இதே போல் நிகழ்ச்சிகளை எடுத்துக்கொண்டு செயல்பட ஆரம்பித்தவுடன் கழகம் தன் செயலாக்கத்தை பிற நிகழ்ச்சிகள் மூலம் விரிவுபடுத்த துவங்கியது.

சிங்கப்பூர் தமிழர்களின் தேசிய விழாவாகக் கருதப்படும் திருக்குறள் விழாவை கடந்த 27 ஆண்டுகளாக கழகம் மிகச் சிறப்பாக நடத்தி வருகிறது. குறள் விழாவின் மூலம் இந்திய் மக்கள், குறிப்பாக இளையர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு வாழ்க்கைக்குத் தேவையான குறளின் சீரிய கருத்துக்கள் விழாவை மையமாக வைத்து சிறப்புரைகள் மூலம் எடுத்துச் சொல்லப்படுகின்றன. பல்வேறு துறைகளில் சாதனை படைத்து நம் சமூகத்திற்குப் பெருமை சேர்ப்போரைக் குறள் விழாவில் பாராட்டிச் சிறப்பிக்கிறது. இந்த விருது 2007ம் ஆண்டு முதல் திருவள்ளுவர் விருது என அழைக்கப்படுகிறது. கழகம் வளர்தமிழ் இயக்கத்துடன் இணைந்து முதன் முறையாக 2001ல் பாரதியார் விழாவைக் கொண்டாடியது. 2002ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரை பாரதியார் விழாவோடு பாவேந்தர் பாரதிதாசனையும் இணைத்து "பாரதியார்-பாரதிதாசன் விழா" என்ற பெயரில் மிகச் சிறப்பாக தொடர்ந்து ஆண்டுதோறும் விழா நடத்தப்பட்டது. இலக்கிய களம் இந்த ஆண்டு முதல் பாரதிதாசன் விழாவினை ஏற்று நடத்த கேட்டுக் கொண்டதால், இவ்வாண்டு முதல் கழகம் பாரதியார் விழாவினை மட்டும் ஏற்று நடத்தும். உள்ளூர் எழுத்தாளர்கள், கவிஞர்கள் சிறப்பிக்கப்படும் அங்கமும் இணைக்கப்பட்டு மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இலக்கியவாதிகளுக்கு விருதுகளும் வழங்கப்படுகிறது. தமிழ்மொழி மற்றும் பண்பாடு, கலை, ஆகிய அம்சங்களில் மகளிருக்கான அவர்களது பங்களிப்பை உறுதி செய்யக் கழகம் புதிய முயற்சியாக மகளிர் அணியை உருவாக்கியது.

இந்த அணி சிங்கப்பூரில் முதன் முறையாக ஔவையார் விழாவினை 2014ஆம் ஆண்டிலிருந்து எடுத்து நடத்துகிறது. குடியரசில் தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் மேலும் பல ஆக்கபூர்வமான பணிகளை தன் இளைஞர் அணி மற்றும் தொண்டூழியர்களை வைத்து செவ்வனே செய்து வருகிறது. கழகத்தின் பேச்சாளர் மன்றம் தனக்கென தனி இடத்தை சிங்கப்பூரில் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. தேசிய நூலக வாரியமும் ஒலி 96.8ம் இணைந்து ஏற்பாடு செய்த "வாசிப்பை நேசிப்போம்" நிகழ்ச்சியில் கழகம் பங்கெடுத்து தரமான புத்தக வாசிப்பு பழக்கம் பற்றிய தேவையை விவரித்தது. மேலும் தமிழவேள் கோ சாரங்கபாணி கல்வி அறநிதிக்கு ஆதரவு அளித்தல் உள்பட பல்வேறு சமூக நற்பணிகளுக்கு கழகம் ஆதரவு தெரிவித்துக்கொண்டு வருகிறது. தொலைநோக்கு மற்றும் பரந்த மனப்பான்மையுடன் தமிழ் மொழி, பண்பாடு மற்றும் ஒட்டுமொத்த இந்திய சமுதாயத்தின் நன்மைக்காகப் பாடுபடும் அமைப்பு தமிழ்மொழி பண்பாட்டுக் கழகமாகும். தனது பல்வேறு உயர்ந்த குறிக்கோள்கள் வெற்றியுடன் நிறைவேற தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம் அனைவரின் நல்லாசிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி கூறி இவை தொடர பணிவன்புடன் வேண்டுகோள் விடுக்கிறது. *



சி.வி. தேவன் நாயர்



பேராசிரியர் எஸ். ஜயகுமார்



என்.கே. வன்னியசிங்கம்



வை. திருநாவுக்கரசு



மு. ஹரிகிருஷ்ணன்

*முன்னாள் தலைவர்கள், இந்நாள் தலைவர்கள்*

## தமிழ்மொழி பண்பாட்டுக் கழகப் பேச்சாளர் மன்றக்கூட்டம்

(மாதம் தோறும் முதல் ஞாயிற்றுக் கிழமை
காலை 9:30 முதல்
பிற்பகல் 1:00 மணி வரை)

**தலைவர்கள் உருவாக்கப்படும் தளம்**

**நிகழ்ச்சி நிரல்**

- **தயாரிக்கப்பட்ட உரை**
- **மதிப்பீட்டு உரை**
- **அரங்கப் பேச்சு**
- **மொழி மதிப்பீடு**

அனைவரும் கலந்துகொள்ளலாம்!

தமிழில் பேசுவோம்; ஒன்றுபட்டு உயர்வோம்;

அனுமதி இலவசம்: இடம்: பீட்டி சாலை, சிண்டா கட்டிடம், 4வது மாடி, வைர அறை; சிங்கப்பூர் 209943

**உங்கள் அடுத்த தமிழ் பேச்சையோ அறிக்கையையோ எப்படி படைப்பது என்ற தயக்கமா?**

**எவ்வாறு தயாரிப்பது என்ற சிந்தனையா?**

**தமிழ்மொழி பண்பாட்டுக் கழகப் பேச்சாளர் மன்றத்தின் உதவி கொண்டு நீங்களும் தன்னம்பிக்கையோடு தமிழில் தெளிவாய் பேசலாம்**

**சிறப்பாக திட்டங்களைப் படைக்கலாம்**

**சிறந்த தலைவராகலாம்**

தொடர்புக்கு:

nssethuraman@gmail.com

# சமய நல்லிணக்க உறுதிமொழி

சிங்கப்பூர் மக்களாகிய நாம், நமது பல இன, பல சமய சமுதாயத்தில், நாட்டின் அமைதிக்கும், முன்னேற்றத்திற்கும், செழிப்புக்கும், சமய நல்லிணக்கம் இன்றியமையாதது என்பதை உறுதியுடன் அறிவிக்கின்றோம்.

பரஸ்பர சகிப்புத் தன்மை, நம்பிக்கை, மரியாதை, புரிந்துணர்வு ஆகியவற்றின் மூலம் சமய நல்லிணக்கத்தை வலுப்படுத்த உறுதி கொள்கிறோம்.

எப்போதும் நாம்

- ✓ நம் நாட்டின் சமயச் சார்பற்ற தன்மையைக் கருத்தில் கொள்வோம்.
- ✓ நமது சமுதாயத்துக்குள் பிணைப்புகளை மேம்படுத்துவோம்.
- ✓ நம் ஒவ்வொருவரின் சமய சுதந்திரத்தையும் மதிப்போம்
- ✓ நம்மிடையே உள்ள வேற்றுமைகளை மதிக்கும் அதே வேளையில் பொதுமைக் கூறுகளையும் வளர்ப்போம்.
- ✓ சமயங்களிடையே தொடர்புகளைப் பேணிக்காப்போம்.

இவ்வாறு சிங்கப்பூரில் சமயத்தின் பெயரால் பிணக்கும், பூசலும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வோம்.

*தங்களின் நிகழ்ச்சி பற்றிய செய்தி, படங்களை அமைப்புகள் தமிழ்மணிக்கு அனுப்பலாம். அமைப்புகளின் பெயர், முகவரி, மின்னஞ்சல் விவரங்களையும் அனுப்பித் `தர வேண்டுகிறோம். காலாண்டுக்கு ஒரு முறை வரவுள்ள தமிழ்மணி இதழ் முற்றிலும் இலவசமாகத் தரப்படுகிறது.*

*எங்கள் மின்னஞ்சல் முகவரி:*
*thamizhmanieditor@gmail.com*

---

*தமிழ்மணியில் இடம்பெற்றுள்ள கருத்துகளுக்கும் விமர்சனங்களுக்கும் படைப்பாளர்களே பொறுப்பு*

*- ஆசிரியர்.*

The MES Group

120 Lower Delta Road #04-10
Cendex Centre, Singapore 169208
Tel: (65) 6337 2666 Fax: (65) 6337 3751
www.mesgroup.com.sg

## THE BUSINESS

The MES Group is a diversified business group with its principle business in designing, constructing and managing off-site residential facilities for guest-workers in industries. Its other diverse portfolios include property development, warehousing, transportation and recruitment services for specific industries.

## VISION

A humble home-grown diversified business group that has expanded to be an internationally respected corporation, widely recognized for its customer focus, service excellence, integrity and highly motivated and talented people.

## MISSION

The MES Group will continue to be a successful, well-diversified group that will remain a recognized leader in its principle business of designing, building and operating affordable, best in class employee accommodation for industries.

It will concurrently expand its logistics, hospitality, property development and investments segments of its business in Singapore and abroad.

In this mission, it will achieve all its stated goals with complete dedication to excellence in service, fairness, integrity and respect for all its customers, employees and the communities it touches.

# The MES Group

120 lower Delta Road #04-10
Cendex Centre, Singapore 169208
Tel: (65) 6337 2666 Fax:(65)6337 3751
www.mesgroup.com.sg

## GUEST WORKERS' RESIDENTIAL FACILITY



Housing 24,000 workers from various industries in four dormitories situated across Singapore.

## LOGISTICS



Fleet of trucks facilitating transportation of FMCG goods, event support and other related logistics activities.

## WAREHOUSING



Our warehousing facilities provide an array of services and technical support in goods storage, packing, inventory management and ancillary services such as stuffing and crating.

## HOSPITALITY



Warm hospitality awaits you at The Daulat, a 16 room boutique hotel located in Little India, styled in modern contemporary design and embracing a rich architectural history.